www.padippkam.com



இந்தியாவில் ஒரு தேசிய இனம் தனது சொந்தத் தேசிய அரசை அமைப்பதென்பது இந்திய தரகு முதலாளிய - பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறாமல் சாத்தியமில்லை. எனவே, ஒவ்வொரு தேசிய இனத்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சனநாயகப் புரட்சியை தரகு முதலாளிய - பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபடுவதற்கான தேசிய விடுதலையுடன் இணைக்கும்போது மட்டுமே இந்தியாவில் சனநாயகப்புரட்சி வெற்றி பெற முடியும். ஒடுக்கும் தேசிய இனமோ, அதில் பலம் பெற்ற பாட்டாளி வர்க்க இயக்கமோ இல்லாத நிலையில் இந்தியாவில் சனநாயகப் புரட்சியின் வெற்றிக்கு இதைத்தவிர வேறுவழி எதுவும் இல்லை.



# இந்தியாவில் தேசியப் பிரச்சினையும் சனநாயகப் புரட்சியும்

கார்முகில்

படிப்பகம்

www.padippkam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!



தநாமாலெக

படிப்பகம்

www.padippkam.com

# இந்தியாவில் தேசியப் பிரச்சினையும் சனநாயகப் புரட்சியும்

*கார்முகில்*

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

இரண்டாம் பதிப்பு
ஜூன் 2012
**விலை : ரூ 40**

இந்நூலில் இறுதியாக இடம் பெற்றுள்ள விமர்சனக் குறிப்பு தவிர்த்த யாவும் தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் பத்திரிக்கையான புரட்சிக்கனல் மார்ச், அக்டோபர்- 1993 இதழ்களில் வெளிவந்தவை யாகும்.

# பொருளடக்கம்

## இந்தியாவில் தேசியப் பிரச்சினையும் சனநாயகப் புரட்சியும்

1. இந்தியா: ஒரு பல்தேசிய அரசு சமூகம் . . . . . 9
2. இந்தியப் பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசிய இனம் உள்ளதா? . . . . . . . . . . 12
3. இந்தியத் 'தேசமும்' தரகு முதலாளித்துவ-பார்ப்பனிய சக்திகளும் . . . . . . . . . . 16
4. இந்தியத் தேசம் என்பது தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளின் ஏகாதிபத்தியவாதமே! . . . . . . 24
5. இந்தியாவில் இருவகை அரசியல் போக்குகள் தேசிய விடுதலையே சனநாயகப் புரட்சியின் வெற்றிக்கான ஒரே வழி . . . . . . . . . . 29
6. ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதமும் அது விளைவித்த கேடுகளும் . . . . . . . . . . 32
7. அம்பேத்கார் மற்றும் பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பும் தேசிய விடுதலைப் புரட்சியும் . . . . . . . 38
8. தன்னுரிமை முழக்கம்: சட்டவாதமும் சந்தர்ப்பவாதமும் 43
9. தேசியவிடுதலைப் புரட்சியில் சாதி, மத பிரச்சினைகளும் வர்க்கப் போராட்டமும் . . . . . . . . . 44

படிப்பகம்

www.padippkam.com

தமிழ்த்தேசத் தன்னுரிமை புரட்சியா? புரட்டலா? 48
தேசிய விடுதலைப் புரட்சியும் சாதி ஒழிப்பும் 52
அம்பேத்கார்-பெரியாரின் வரலாற்றுப் பாத்திரமும் கம்யூனிஸ்டுகளும் . . . . . . . . . . . 59
தேசியக் கொள்கை குறித்து சில கேள்விகளும் பதில்களும் . . . . . . . . . . . . . 65
தன்னுரிமை : விவாதக்குறிப்பு பற்றிய ஒரு விமர்சனக் குறிப்பு . . . . . . . . . . 84

# இந்தியாவில் தேசியப் பிரச்சினையும் சனநாயகப் புரட்சியும்

படிப்பகம்

www.padippkam.com

இந்தியாவில் கடந்த எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக கம்யூனிஸ்டுகள் ஒரு சனநாயகப் புரட்சிக்கான திட்டத்துடன் செயல் பட்டு வந்திருக்கிறார்கள் எனினும் அவர்கள் அதில் இன்றளவும் வெற்றி பெறவில்லை. இத்தோல்விக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டபோதிலும் இந்தியாவில் தேசியப் பிரச்சினை குறித்த சிக்கல்களையும் அவற்றோடு சனநாயகப் புரட்சிக்குள்ள தொடர் பையும் அவர்கள் முற்றாக அறிந்திருக்கவில்லை அல்லது நிராகரித் தார்கள் என்பதுதான் அடிப்படையான காரணம் ஆகும். தேசியப் பிரச்சினைக்கும் சனநாயகப் புரட்சிக்கும் உள்ள தொடர்பு குறித்து மார்க்சியம் மிகத் தெளிவான கோட்பாட்டு முடிவுகளைக் கொண்டி ருக்கிறது. இக்கோட்பாடுகளையும், இந்தியாவில் தேசிய-சனநாயகப் பிரச்சினைகளின் பருண்மையான உறவுகளையும் புரிந்துகொள்ளும் போதுதான் கம்யூனிஸ்டுகள் தமது தோல்வியிலிருந்து மீள முடியும்.

தேசியப் பிரச்சினைக்கும், சனநாயகப் புரட்சிக்கும் இடையிலான உறவு குறித்த கோட்பாடுகளை "பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை" (தனி வெளியீடு காண்க) என்ற கட்டுரையில் நாம் பார்த்திருப்பதால் தற்போது நேரடியாகவே இந்தியாவில் தேசிய-சனநாயகப் பிரச்சினை குறித்த ஆய்வுக்குள் இறங்குவோம்.

## 1

## இந்தியா : ஒரு பல்தேசிய அரசு சமூகம்

அரசு சமூகம் என்பது தேசிய சமூகத்திலிருந்து வேறுபட்டதாகும். தேசிய சமூகத்தில் மக்கள் ஒரு பொதுமொழியைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசு சமூகத்தில் அவ்வாறு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இங்கு பொதுமொழி என்று குறிப் பிடப்படுவது மக்கள் பேசும் மொழியைத் தானேயன்றி அரசு நிர்வாகத்தில் இருக்கும் மொழியை அல்ல.

படிப்பகம்

www.padippkam.com



இந்தியா ஒரு தேசிய சமூகமல்ல என்பதில் விவாதத்திற்கு இடம் இருக்க முடியாது. இங்கு பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற வேறுபட்ட பண்பாடுகளையும், வரலாறுகளையும் கொண்ட பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உருவான தேசிய இனம், மத்திய காலத்திலும் அதன் பின்னரும் உருவான தேசிய இனங்கள், சமீபத்தில் தேசிய இனங்களாக உருவாகிய, உருவாகி வருகின்ற மக்கள் சமூகங்கள் என பற்பல உள்ளன.

உதாரணமாக தமிழ்த் தேசிய இனம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரே உருவான மிகப் பழமையான தேசிய இனம். தெலுங்கு, கன்னடம், மராத்தி, குஜராத்தி, ஒரியா, வங்காளி, மலையாளம், பஞ்சாபி, அசாமி, காஷ்மீரி போன்றவை மத்திய காலத்திலும் அதன் பின்னரும் உருவான தேசிய இனங்கள். எவ்வாறாயினும் இவை எல்லாம் வளமான, வளர்ச்சியடைந்த மொழியையும் இலக்கியங்களையும் கொண்டுள்ள தேசிய இனங்களாகும். இவை எல்லாம் மைய அரசின் கீழான மொழிவழி மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருப்பினும், மைய அரசு இவற்றின் தேசியத் தகுதியை அங்கீகரிக்கவில்லை. இவற்றின் மொழிகள் பிரதேச மொழிகள் என்றே குறிப்பிடப்படுகின்றன. இவற்றின் பிரதேச எல்லைகளை மைய அரசு அம்மக்களின் சம்மதம் இன்றியே மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. இவை தவிர வடஇந்தியாவில் இருக்கும் உத்திரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், பீகார் போன்ற பெரிய மாநிலங்கள் மொழி வழியில் அமைக்கப்பட்ட மாநிலங்கள் அல்ல. அதே போல் வடகிழக்கு இந்தியப் பிரதேசங்களும் மொழிவழி நிர்வாக அமைப்புகளாகப் பிரிக்கப்பட்டவை அல்ல. இவற்றில் எண்ணற்ற தேசிய இனங்களும், தேசிய இனங்களாக உருவாகிவரும் மக்கள் சமூகங்களும் உள்ளன. அவற்றில் பல வளர்ச்சியடைந்த மொழியையும், இலக்கியங்களையும் கொண்டுள்ள தேசிய இனங்களாகும். எனினும் அவற்றை மொழிவழி மாநில நிர்வாக அமைப்புகளாகக்கூட மைய அரசு அனுமதிக்கவில்லை. மிகக்கடுமையான மக்கள் போராட்டங்களுக்குப்பின் மணிப்புரி, திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து, மிஜோ போன்ற மாநிலங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் மணிப்புரி, நேபாளி, கொங்கணி மொழிகளுக்குப் பிரதேச மொழித் தகுதி அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ளது. மணிப்புரி மக்கள்தொகை எட்டுஇலட்சம். நாகாலாந்து மக்கள்தொகை எட்டுஇலட்சம். மிஜோராம் அய்ந்துஇலட்சம். கொங்கணிகள் 15 இலட்சம். நேபாளிகள் பதினான்கு இலட்சம். இவற்றில் மணிப்புரியும் நேபாளியும் வளர்ச்சியடைந்த மொழிகள். நாகாலாந்தில் தற்போதுதான் பொதுமொழி ஒன்று



(நாக்மிஸ்) உருவாகிக் கொண்டிருக்கிறது. எனினும் இவர்களுடைய கடுமையான போராட்டங்களினால் தனி மாநிலமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றைவிட பன்மடங்கு மக்கள்தொகை கொண்ட வளர்ச்சியடைந்த மொழியையும் இலக்கியங்களையும் கொண்டுள்ள பற்பல மக்கள் சமூகங்கள் வடஇந்தியாவில் மாநிலத் தகுதிகூட மறுக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளன.

உத்திரப்பிரதேசத்தில் மைதிலி, கடிபோலி மொழிகள் பேசும் மக்கள் தனித்தனி மாநிலங்களாக அமையும் தகுதி படைத்தவர்கள் என்று தினமணி (13-9-92) எழுதுகிறது. போஜ்புரி, மைதிலி, மகதி மொழி பேசும் மக்கள் 160 இலட்சம் பேர் பீகாரில் உள்ளனர். மேலும் பிலி மொழி பேசுவோர் 53 இலட்சம், முண்டாரி மொழி பேசுவோர் 12 இலட்சம், கோண்டி மொழி பேசுவோர் 52 இலட்சம், குருக்மொழி பேசும் ஓராக்கள் 17 இலட்சம், காரிபோலி பேசும் மக்கள் 16 இலட்சம், ஹோண்டி பேசுவோர் 10 இலட்சம், போடோக்கள் 6 இலட்சம், தோக்கிரிகள் 13 இலட்சம், கோர்காலியர்கள் 14 இலட்சம், துளுவர்கள் 11 இலட்சம், சந்தால் மொழி பேசுவோர் இரண்டு கோடி (I.E. 3-12-'92) என எண்ணற்ற தனித்தனியான மொழியையும் பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள் சமூகங்கள் வடமாநிலங்களில் உள்ளன. வடமாநிலங்களில் குறைந்தபட்சம் இரண்டுடஜன் மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்படவேண்டும் என்று ஒருமுறை ராகுல சாங்கிருத்தியாயன் கோரினார் என்பது அங்குள்ள தேசிய இனங்களின் எண்ணிக்கையைப் புரிந்துகொள்ள உதவுவதாகும். ஆனால் நாகா, மிஜோ, மணிப்புரிகளைவிட அதிகமான மக்கள் தொகை கொண்ட மிகப் பல மக்கள் சமூகங்கள் தேசிய இனங்களாக அங்கீகரிக்கப்படவில்லை என்பது மட்டுமின்றி அவற்றுக்கு மாநில நிர்வாகத் தகுதிகூட தரப்படவில்லை. எனினும் தங்கள் மொழிகளுக்கு அரசியல் சட்டத்தகுதி கோருவது, மாநில நிர்வாகத் தகுதி கோருவது, தேசிய விடுதலை கோருவது என்ற வடிவில் வெவ்வேறு அளவில் இந்த மக்கள் சமூகங்களில் கோரிக்கைகளும் போராட்டங்களும் தற்போது எழுந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறு இந்தியா பழமையான வளர்ச்சியடைந்த பல்வேறு தேசிய இனங்களையும் சமீபத்தில் தேசிய இனங்களாக வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்து வருகின்ற எண்ணற்ற மக்கள் சமூகங்களையும் கொண்ட ஒரு பெரிய பல்தேசிய அரசு சமூகமாக இருக்கிறதேயன்றி தேசிய சமூகமாக இல்லை.

படிப்பகம்

www.padippkam.com



இவ்வாறு வேறுபட்ட வளர்ச்சி மட்டங்களுடனும், வரலாறுடனும், கலை, இலக்கிய, பண்பாட்டுடனும் திகழும் தேசிய இனங்கள் அனைத்தும் முழுமையான நவீனத் தேசங்களாக வளரும் நிகழ்ச்சிப் போக்கில்-வரலாற்றுக் கட்டத்தில் இருக்கின்றன. இந்த நிகழ்ச்சிப் போக்கின், வரலாற்றுக் கட்டத்தின் நிறைவின் ஊடாகவே இந்தியாவில் சனநாயகப் புரட்சி வெற்றியடைய முடியும்.

## 2

## இந்தியப் பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசிய இனம் உள்ளதா?

இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கும் அவற்றின் தேசியத் தகுதியும், அரசுரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. பலவற்றிற்கு மாநிலத் தகுதிகூட மறுக்கப்பட்டுள்ளது. தேசிய உரிமைகளுக்கான கோரிக்கைகள் அனைத்தும் பிரிவினைவாதம், தேசத் துரோகம் என்று குற்றம் சாட்டப்பட்டு கடுமையாக ஒடுக்கப்படுகின்றன. இந்தி மட்டுமே ஒரே ஆட்சி மொழி என்று திணிக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம் அனைத்து தேசிய இனங்களையும் அடிமை தேசிய இனங்களாக்கும் கடுமையான ஒடுக்குமுறைகளாகும். அவ்வாறாயின் இங்கு ஒடுக்கும் தேசிய இனம் உண்டா? இந்தி ஒடுக்கும் தேசிய இனமாக இருக்கிறதா என்ற கேள்வி இயல்பானதாகும்.

இந்தி ஏறத்தாழ 27% மக்களால் பேசப்படும் மொழி என்றும், உலகில் மிக அதிகமான மக்களால் பேசப்படும் முதல் அய்ந்து மொழிகளில் இந்தியும் ஒன்று என்றும், இந்தி பேசும் பகுதியின் எல்லைகள் மேற்கில் சிந்து-பஞ்சாப் மாநிலங்கள், தெற்கில் குஜராத்-மராட்டிய மாநிலங்கள், கிழக்கில் ஒரிசா- வங்காள மாநிலங்கள், வடக்கில் காஷ்மீர்-நேபாளம் என்றும் தொடர்ந்து செய்யப்பட்டு வரும் பிரச்சாரத்தாலும் இக்கேள்வி எழுவது இயல்பானதே.

ஆனால் உண்மை இதற்கு மாறானது. இந்தி பேசும் பகுதி எனக் கூறப்படும் மாநிலங்களில் பேசப்படும் மொழிகள் மிகப் பலவாகும். கிழக்கு பஞ்சாப், மேற்கு உத்திரப்பிரதேசம், மேற்கு மத்தியப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் வழங்குவது கனோஜ், புந்தேலி, பிரஜ்பாஷா எனும் மொழிகளாகும். டெல்லியில் பேசப்படும் மொழி ஹந்தாலி அல்லது டெல்வி என்று அழைக்கப்படுகிறது.



டெல்லிக்கு மேற்கே ஜாடு அல்லது பங்காரு எனும் மொழி வழங்குகிறது. வடக்கு உத்திரப்பிரதேசத்தில் வழங்கும் மொழி பிரதேச ஹிந்துஸ்தானி எனப்படுகிறது. மத்தியப்பிரதேசத்தில் கோண்டி, பிலி முதலான மொழிகள் வழங்குகின்றன. கோசலைப் பகுதியில் அவதி அல்லது பைஸ்வரி, பகேலி, சட்டிஸ்கரி ஆகிய மூன்று மொழிகள் வழங்குகின்றன. பீகாரில் மகத மொழிகள் என்று அழைக்கப்படும் போஜ்புரி, மகதி, மைதிலி ஆகிய மொழிகள் வழங்குகின்றன. ராஜஸ்தானில் ராஜஸ்தானி, மொழி உள்ளது. ஹரியானாவில் வழங்கும் மொழி ஹரியான்வி எனப்படுகிறது.

இவ்வாறு வெவ்வேறு மொழிகள் பேசும் பகுதிகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்தே இந்தி பேசும் பகுதி என்று கூறுகிறார்கள். அதற்கு வசதியாக பஞ்சாப், மேற்கு உத்திரப்பிரதேசம், டெல்லி, வடமேற்கு உத்திரப்பிரதேசம், மேற்கு மத்தியப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் பேசப்படும் மொழிகளையெல்லாம் சேர்த்து மேலை இந்தி என்றும், கோசலை பகுதியில் பேசப்படும் மொழிகளையெல்லாம் சேர்த்து கீழை இந்தி என்றும், அதிலும் டெல்லிப் பிரதேசத்தில் பேசப்படும் மொழிகளுக்கு ஹாரிபோலி இந்தி என்று தனியாகவும் பெயர் வைத்திருக்கிறார்கள். பீகார், ராஜஸ்தான் மாநிலங்களில் வழங்கும் மொழிகளுக்கு அப்படி எந்தப் பெயரையும் வைக்கவில்லையென்றாலும் அவற்றையும் இந்திப் பிரதேசங்களில் சேர்த்துவிட்டார்கள்.

அதோடு நிற்கவில்லை. கி.பி. 10ஆம் நூற்றாண்டு முதல் இப்பகுதிகளில் வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்களையெல்லாம் இந்தி மொழி இலக்கியங்கள் என பட்டியலிட்டு இலக்கியவரலாறு எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறுவதெனின் சண்டபரதாய் என்பவர் எழுதிய பிரிதிவிராஜ் ரசாவ் என்ற இலக்கியம் பிரஜ்பாஷாவிலும், ராஜஸ்தானியிலும் எழுதப்பட்டது. சூரதாசவின் இலக்கியங்கள் பிரஜ்பாஷாவில் எழுதப்பட்டவை. மத்திய காலத்தின் மாபெரும் கவிஞரான துளசிதாசர் எழுதிய புகழ்பெற்ற இலக்கியங்கள் அவதி மொழியில் எழுதப்பட்டவை. கபீரின் இலக்கி யங்கள் அவதி மொழியிலும் பிரஜ்பாஷாவிலும் எழுதப்பட்டவை. இலக்கிய வரலாற்றில் இவையெல்லாம் இந்தி இலக்கியங்கள் என்றே பட்டியலிடப்பட்டிருக்கின்றன. மேலும் போஜ்புரி, மைதிலி, கார்வாலி, குமவுனி மொழி இலக்கியங்களும் இந்தி இலக்கியங்களாகவே காட்டப்படுகின்றன.

படிப்பகம்

www.padippkam.com



இந்தி மொழி பேசும் மக்கள்தொகை குறித்தும், அதன் தொன்மை குறித்தும் பரப்பப்பட்டு வரும் பொய்மைகளை அறிய அம்மொழி தோன்றிய வரலாற்றை அறிவது இன்னும் உதவக் கூடியதாயிருக்கும்.

இந்தி என்று இன்று வழங்கப்படும் மொழி 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இந்தியாவில் எங்கும் வழங்காத மொழியாகும். மொகலாயர், ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் பரவியிருந்த இசுலாமிய, கிருத்துவ மத ஆதிக்கங்களுக்கு எதிராக மீண்டும் இந்து மதத்தை நிலைநிறுத்தச் செய்வதற்காக உருவான மதவாத இயக்கங்களுடன் இணைந்து 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இந்துஸ்தானியை சமஸ்கிருதமயமாக்கி உருவாக்கப்பட்ட மொழியே இன்றைய இந்தியாகும்.

மொகலாயர்கள் ஆட்சியில் பாரசீக மொழி நீதி, நிர்வாக மொழியாக இருந்ததால் மொகலாய பிரபுக்களும், உயர்சாதி இந்துக்களும் பாரசீகமொழியை விரும்பிக் கற்றனர். இதனால் உள்ளூர் மொழிகளில் சமக்கிருத, பாரசீகச் சொற்கள் கலந்து இந்துஸ்தானி என்ற ஒரு புதுமொழி உருவாகி டெல்லிப் பகுதியில் வழங்கத்தொடங்கியது. அதிகமாக பாரசீக மொழிச் சொற்கள் கலந்தும், பாரசீக எழுத்து வடிவிலும் எழுதப்பட்ட இந்துஸ்தானியை உருது என்றும், சமக்கிருத சொற்கலப்பு, அதிகமாகவும், சமக்கிருத எழுத்துவடிவிலும் எழுதப்பட்ட இந்துஸ்தானியை இந்தி என்றும் வழங்கலாயினர். (இந்தி என்பது சமக்கிருத எழுத்து வடிவிற்கான பெயர் என்று குறிப்பிடுகிறார் நேரு) எனவே உருது, இந்தி என்று இருவேறு பெயர்களில் வழங்கப்பட்ட இந்துஸ்தானி மொழிக்கு சொற்கலப்பு அளவிலும், எழுத்து வடிவிலும் வேறுபாடு இருந்ததன்றி இலக்கண அமைப்பில் வேறுபாடு எதுவும் இல்லை. இந்தி என்றும் உருது என்றும் வழங்கப்பட்ட இந்துஸ்தானி இருவகை பேச்சு வழக்குகளாக 18, 19ஆம் நூற்றாண்டுகளில் டெல்லிப் பகுதியிலிருந்து வடஇந்திய நகரங்கள் பலவற்றிற்கும் பரவியது. மொகலாயர்களின் நீதி, நிர்வாக அமைப்புகள் வடஇந்தியாவின் பல நகரங்களிலும் நிறுவப்பட்டதைத் தொடர்ந்தே இப்பரவல் ஏற்பட்டது.

மொகலாயர்கள் ஆட்சிக்குப்பின் பாரசீகமொழி ஆட்சித்தகுதி இழந்து உருது நீதிமன்ற மொழியாகியது. ஆங்கிலேயர் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஆங்கிலத்துடன் உருது மொழியும் கல்வி, நீதி மொழியாக நீடித்தது. இந்து-முசுலீம் என்ற பேதம் இன்றி



அப்போது எல்லோரும் உருது கற்றுக்கொண்டிருந்தனர். உருது கற்பது என்பது பாரசீக எழுத்திலான இந்துஸ்தானியைக் கற்பதன்றி வேறல்ல.

ஆனால் பாரசீக எழுத்துகளில் எழுதுவது என்பது இந்துப் பார்ப்பன-காயஸ்த உயர்சாதி அறிவாளிகளுக்கு ஒரு மத கவுரவப் பிரச்சினையாகியது. எனவே இந்து மத உயர்சாதி அறிவாளிகள் சமக்கிருத எழுத்துக்கான பிரச்சாரத்தைத் தொடங்கினர். 1872இல் வேத கால சமுதாய இலட்சியங்களையே தமது கொள்கையாகக்கொண்ட ஆரிய சமாஜிகளும், இந்து மதத்தில் சில சீர்திருத்தங்கள் வேண்டும் எனக் கோரிய பிரம்ம சமாஜிகளுமாகிய இந்து மதவாதிகள் இந்தியை-தேவநாகரி எழுத்து வடிவிலான மொழியைத் தமது மதவாதப் பிரச்சாரத்திற்கான மொழியாக்குவது என்று தீர்மானித்தனர். 1901ல் தேவநாகரி எழுத்து வடிவிலான (இந்தி) மொழி அதன் ஆதரவாளர்களின் போராட்டத்தால் நீதிமன்ற, கல்வி மொழியாக ஏற்கப்பட்டது. ஆரிய சமாஜிகள் தேவநாகரி எழுத்து வடிவிலான இந்துஸ்தானியிலிருந்து அதாவது இந்தியிலிருந்து அரபு, பாரசீகச் சொற்களை முற்றாக நீக்கி அதிகபட்ச அளவுக்கு சமக்கிருதச் சொற்களைக் கலந்து புதிய இந்தியை உருவாக்கினர். அதற்கு ஆரிய பாஷை என்றும் பெயரிட்டனர். இவ்வாறு புதிதாக சமக்கிருத மயமாக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்தியைத் தமது அதிகாரப் பூர்வமான அமைப்பு மொழியாக்கியதுடன் அதற்குக் கல்வி நிறுவனங்களை நிறுவி பாடநூல்களையும் வெளியிட்டனர். 1905இல் நிறுவப்பட்ட பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் புதிய இந்தி முக்கிய இடம் பெற்றது. பனாரஸ் பல்கலைக்கழகம் மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், இராஜஸ்தான், பீகார் மாநிலங்களில் (இப்பகுதிகள் பண்டைக்காலத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தில் இருந்ததும், ஆரிய வர்த்தம் என்று அழைக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது) நகர்ப்புறங்களில் உள்ள பார்ப்பன காயஸ்த உயர்சாதியினரின் படித்த வர்க்கம் கூடுவதற்கான இடமாக இருந்தது. இவ்வாறு ஆரிய சமாஜிகளாலும், இந்து மேல்தட்டு சாதி, வர்க்கப் படிப்பாளிப் பகுதியினராலும் இந்துஸ்தானியை முற்றிலும் சமக்கிருதமயமாக்கி இந்து மதவாத மொழியாக உருவாக்கப்பட்ட மொழியே இன்றைய இந்தி. அதுதான் இந்திய அரசியல் சட்டத்தில் இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக திணிக்கப்பட்டிருக்கிறது.

இந்துஸ்தானி இந்து-முசுலீம் ஒற்றுமைக்கான மொழியாக இருக்கும் என்று கூறி அதை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று கூறியவர்களுக்கு அது பாமரர் மொழி, ஆட்சிமொழியாகத் தகுதியற்ற மொழி என்று கூறி நிராகரித்த உண்மை இந்துஸ்தானியும் இன்றைய

படிப்பகம்

www.padippkam.com



இந்தியும் வெவ்வேறு மொழிகள் என்பதையும், இந்தி, இந்து மேல் தட்டு வர்க்க, சாதி படிப்பாளிப் பகுதியினரின் மொழி என்பதையும் மேலும் விளக்கும்.

1961 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் இந்தி பேசும் மக்கள் 14 கோடிப் பேர் அதாவது 27% பேர் என்று கூறுவது முற்றிலும் மோசடியாகும். 1973ம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசு ஆவணம் ஒன்று (The Gazetteer of India vol.1) இந்த பதினான்கு கோடிப் பேரில் நான்கு கோடிப் பேர்தான் இந்துஸ்தானி பேசுகின்ற வர்கள் என்றும் அந்த நான்கு கோடியிலும் இரண்டு கோடிப் பேர் உருது பேசுகின்றவர்கள் என்றும் புள்ளி விபரம் தருகிறது. இவ்வாறிருக்க சமக்கிருதமயமாக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இந்தி பேசுவோர் எவ்வளவு பேர் இருக்க முடியும்?

இந்தியை அரசியல் சட்டத்தில் ஒரே ஆட்சி மொழி என அறிவித்த பின்னர் இந்து மேல் சாதி-வர்க்க ஆதிக்கவாதிகள் மக்களின் பின்தங்கிய நிலையைப் பயன்படுத்திக்கொண்டு வட இந்தியா முழுவதும் இந்தியை மாநில ஆட்சி மொழியாகவும் கல்வி, அலுவலக மொழியாகவும் திணித்துவிட்டு வடஇந்தியா முழுவதும் பேசப்படும் மொழி இந்தி மொழிதான் என்பதாக கணக்கு காட்டுகிறார்கள். ஆனால் இந்தி ஆட்சி மொழியாக்கப்பட்டிருக்கும் அரியானா, உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், பீகார் போன்ற அனைத்து மாநிலங்களிலும் மேல்தட்டு வர்க்க, சாதியினரின் மொழியாகவன்றி இந்தி, மக்கள் மொழியாக இல்லை என்பதே உண்மையாகும்.

இந்நிலையில் இந்தி தேசிய இனம் இருக்கிறது என்றும் அது ஒடுக்கும் தேசிய இனமாக இருக்கிறது என்றும் கூறமுடியுமா?

## 3

## இந்தியத் 'தேசமும்' தரகு முதலாளித்துவ - பார்ப்பனிய சக்திகளும்

இந்தியத் தேசம், இந்தியத் தேசிய ஒருமைப்பாடு, பாரத தேசம் என்ற கூச்சல்கள் இடைவிடாது நமது செவிகளைத் தாக்கும் வண்ணம் எழுப்பப்பட்டு வருகின்றன.



பல்தேசிய அரசு சமூகமான இந்தியாவை ஒரு பழமை வாய்ந்த தேசம் எனக் காட்டும் முயற்சியில் மூவாயிரத்து அய்நூறு ஆண்டுகளுக்கு முன் சிந்துவெளியில் இருந்த ஆரிய இனக்குழு தலைவன் ஒருவன் பெயரால் பாரத தேசம் என்று பெயரிட்டு அரசியல் சட்டத்திலும் பொறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்தியா ஒரு தேசிய சமூகம் அல்ல என்பது மட்டுமின்றி அது ஒரு அரசு சமூகமாகக்கூட இன்றைய எல்லை களுடன் 1947க்கு முன் இருந்தது இல்லை என்பது தான் வரலாற்று உண்மையாகும்.

பிரிட்டிஷ் காலனிய காலத்துக்கு முன் இந்தியாவில் இருந்த மிகப் பெரிய பேரரசுகள் அசோகப் பேரரசு, துக்ளக் பேரரசு, ஔரங்கசீப் பேரரசு ஆகியவையே. இப்பேரரசுகள்கூட இந்தியாவின் இன்றைய பகுதிகள் அனைத்தையும் கொண்டிருக்கவில்லை. அசாம் மற்றும் வடகிழக்குப் பிரதேசங்களும், தென்னிந்தியாவின் சில பகுதிகளும் இப்பேரரசுகளுக்கு உட்பட்டிருக்கவில்லை. இந்திய வரலாற்றில் இப்பேரரசுகளின் காலமும் மிகக் குறுகியதே. மற்ற பேரரசுகள் வடஇந்தியாவின் சில பகுதிகளிலோ, தென்னிந்தியாவின் சில பகுதிகளிலோ மட்டுமே இருந்தன. ஆங்கிலேயர் ஆட்சியில் இன்றைய இந்தியப் பகுதிகளுடன் இலங்கை, பர்மா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூடான், சிக்கிம் ஆகிய நாடுகளும் சேர்ந்தே இந்தியாவாக இருந்தது. அசோகர், ஔரங்கசீப், பாபர், அக்பர், குஷானர் பேரரசுகளில் ஆப்கானிஸ்தானமும் இருந்தது. பிரிட்டிசுக்கு முந்திய எந்தப் பேரரசிலும் அசாம் மற்றும் வடகிழக்குப் பிரதேசங்கள் இருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கூட நேரடி ஆட்சியில் இருந்த பகுதி பிரிட்டிஷ் இந்தியா என்றும் சமஸ்தானப் பகுதிகள் சமஸ்தான இந்தியா என்றும் பிற ஏகாதிபத்தியங்கள் கீழ் இருந்த பகுதிகள் பிரெஞ்சு இந்தியா, டச்சு இந்தியா, போர்ச்சுகல் இந்தியா என்றுமே இருந்து வந்தன.

எனவே 1947க்குப் பிந்திய இன்றைய இந்திய நாடு அதற்குமுன் எப்போதுமே இன்றைய எல்லைகளுடன் கூடிய அரசு சமூகமாகக்கூட இருந்ததில்லை. உண்மை இவ்வாறிருக்க இந்தியா ஒரு பழம்பெரும் தேசிய சமூகம் எனக் காட்டும் முயற்சியில் தரகு முதலாளித்துவ-பார்ப்பனிய சக்திகள் கூட்டாக ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு இந்தியாவை ஒரு தேசிய சமூகமாகக் காட்டுவது வெவ்வேறு காரணங்களுக்காக அவசியப்படுகிறது.

படிப்பகம்

www.padippkam.com



தரகு முதலாளிகளைப் பொருத்தவரை அவர்கள் ஏகாதிபத்தியங்களுடன் கூடிக் குலாவிக்கொண்டிருக்கும் வர்க்கம். இவர்களுக்கு நாட்டு நலன், மக்கள் நலன் என்பதைவிட தமது பணப்பையின் நலன்தான் எப்போதும் முக்கியமானது.

1857இல் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெற்ற, முதல் இந்திய சுதந்திரப்போர் என்று அழைக்கப்பெறும் மாபெரும் கிளர்ச்சி எழுச்சியில் விவசாயிகளும் படை வீரர்களும் பெருமளவில் பங்கு பெற்றனர். அவர்களோடு நிலப்பிரபுத்துவ மன்னர்களும்கூட ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டனர். ஆனால் பெரும் பணக்கார வணிகர்களும், லேவாதேவிக்காரர்களும் இதில் கலந்து கொள்ளவில்லை என்பது மட்டுமின்றி ஏகாதிபத்தியவாதிகளுக்கு நிதி உதவியும் செய்துகொண்டிருந்தனர். சேட்டுகளும், தாகூர்களும் அப்போது ஏகாதிபத்தியக் கம்பெனிகளுடன் கூடிக்குலாவிக் கொண்டிருந்ததை வரலாறு கூறுகிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தரகர்களாய் செயல்பட்ட பெரும் வணிகர்கள், லேவாதேவிக்காரர்களில் பெரும்பாலோர் பனியாக்கள், மார்வாரிகள், நாட்டுக்கோட்டைச் செட்டிகள். இவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு உள்நாட்டில் மட்டுமின்றி அரபு, ஆப்பிரிக்கா, சீனா, இலங்கை, பர்மா, தென்கிழக்காசிய நாடுகளிலும், பூட்டான், நேபாளம், சிக்கிம் பிரதேசங்களிலும்கூட ஏஜெண்டுகளாகவும் தரகர்களாகவும் செயல்பட்டார்கள். தரகு முதலாளியான டாடா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்காக சீனாவில் அபின் வியாபாரம் செய்ததையும் பின்னர் பிரிட்டிஷ் இராணுவத்திற்காக எத்தியோப்பாவிற்கு ஆயுதங்கள் வாங்கி விற்கும் ஏஜெண்டாகச் செயல்பட்டதையும் அனைவரும் அறிவர்.

இந்த லேவாதேவி, வணிகக் கும்பலைச் சேர்ந்த தரகர்கள் தாம் பின்னர் ஏகாதிபத்தியக் கூட்டுடன் இந்தியாவின் தொழில் துறையில் இறங்கினர். ஏகாதிபத்தியத்தைச் சார்ந்து இவர்கள் தொடங்கிய தொழில்கள் ஏகாதிபத்தியத்திற்கு மற்றொரு வகையில் கொள்ளை இலாபம் ஈட்டித் தரும் தொழில்களே என்பதால் அவர்களுடைய தரகுத் தன்மை மாறிவிடவில்லை. இவர்களுடைய நலன் எப்போதும் நாட்டு நலன், மக்கள் நலன்களுடனன்றி ஏகாதிபத்தியங்களுடனேயே பிணைக்கப்பட்டிருந்தது.

தொழிற்துறையில் இறங்கிய முதல் வகையினர் ஜூஜூபாய், டாடாக்கள். இவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து இறக்குமதி



செய்யப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு தொழில்கள் தொடங்கினர். மார்வாரிகள் நாடு முழுவதும் வணிகர்களாகவும், வட்டிக்கடைக்காரர்களாகவும் பேங்கர்களாகவும் பரவி இருந்தனர். தொழிற்துறையில் இறங்கிய இரண்டாம் வகையினர் பிர்லா, சிங்கானியா, தாபர்கள் போன்ற மார்வாரிகள். இவர்கள் முந்தியவர்களைப்போல அந்த அளவுக்கு வெளிவணிகத் தொடர்பு கொண்டவர்களாக இல்லை. அதே நேரத்தில் வட மாநிலங்கள் முழுவதும் சிறிய பெரிய வணிகர்களாக இருந்தவர்கள் இவர்களே. தொழிற்துறையில் இறங்கிய மூன்றாவது வகையினர் நிலப்பிரபுத்துவ, வட்டித்தொழில் வர்க்கங்களிடமிருந்து தோன்றிய கோயாங்கோ, பாங்கூர் போன்றவர்கள். இவ்வாறு தோன்றிய தரகு முதலாளிகளில் மிகப் பெரும்பாலோர் இந்து மேல்தட்டுச் சாதிகளைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். இவர்கள் யாவரும் ஏதேனும் ஒரு தேசிய இனத்துடன் கட்டுப்பட்ட சந்தை கொண்டவர்களாக இல்லை. மாறாக அனைத்திந்தியச் சந்தை கொண்டவர்கள். இவர்களுடைய சந்தை நலன் பாதுகாக்கப்படுவதற்கு அனைத்திந்திய ஒற்றுமை பாதுகாக்கப்படுவது அவசியமாக இருந்தது.

இதற்கு மாறாகப் பார்ப்பனிய சக்திகள், பார்ப்பன - சத்திரியக் கூட்டின் மூலம் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சாதிமுறை சமுதாய அமைப்பையும், அதில் தமது தலைமையாதிக்கத்தையும், ஒட்டுண்ணி வாழ்க்கையையும் இந்தியா முழுவதும் கட்டிக்காத்து வந்துள்ளனர்.

இதுவரை ஆட்சியில் இருந்து வந்துள்ள எல்லா மன்னர்களுமே, அவர்கள் சிற்றரசர்களாயினும் சரி, பேரரசர்களாயினும் சரி, இந்து மதத்தவராயினும் சரி, வேற்று மதத்தவராயினும் சரி; இந்நாட்டவராயினும் சரி படையெடுத்துவந்து ஆட்சியைக் கைப்பற்றியவர்களாயினும் சரி எல்லோருமே பார்ப்பனர்களுடன் சேர்ந்து இந்து வர்ண-சாதி தர்மத்தையும் அதில் பார்ப்பனியத் தலைமையாதிக்கத்தையும் ஒட்டுண்ணித்தனத்தையும் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். வர்ண-சாதி தர்மத்தைப் பாதுகாக்கும் பொறுப்பேற்ற மன்னர்கள் சூத்திரர்களிலிருந்து வந்தவராயினும் அந்நியராயினும் அவர்களை சத்திரியர்களாக ஆக்கினர் பார்ப்பனர். வர்ண-சாதி தர்மத்தைப் பாதுகாப்பதில் மௌரியர் ஆட்சியிலிருந்து நிலவிய குப்தர், குஷானர், சார்வாகனர், சுல்தானியர், முகலாயர், மராட்டியர், விஜயநகர அரசர்கள், சேர, சோழ, பாண்டியர்கள், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் வரை யாரும் விதிவிலக்காயில்லை.

படிப்பகம்

www.padippkam.com



மொகலாயர்களும், பிரிட்டிஷ்காரர்களும் வேற்றுமதத்தவர்தாம் எனினும் இந்து வர்ண-சாதிமுறையைப் பேணுவதில் அக்கறை குறைந்தவர்களாய் இல்லை.

சுல்தான்கள் ஆட்சியில் இசுலாம் மதத்திற்கு மாறிய சூத்திரர்கள் தொடர்ந்து சூத்திரர்களாகவே மதிக்கப்பட்டார்கள். ஷாஜகான், வேதங்களும் கீதையும் குரான் போலவே இறை வழங்கிய மறைகள் எனக்கூறி மொழிபெயர்த்துப் பரப்பினார். தனது ஆட்சியில் இருந்த அதிகாரிகளில் நான்கில் ஒருவரை இந்து இருபிறவி சாதிகளிலிருந்து நியமித்தார். ஔரங்கசீப் ஆட்சியில் இந்த எண்ணிக்கை மூவரில் ஒருவராக உயர்ந்தது.

பிரிட்டிஷ் ஆட்சி இதற்கு சற்றும் குறைந்ததாக இல்லை. வாரன் ஹேஸ்டிங்ஸ் சாதிக் கோர்ட்டுகளை (1767ல்) நிறுவினார். மனு நூல் 1794ல் இந்துச் சட்டம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சமக்கிருதத்தில் இருந்த தர்ம சாத்திரங்கள் – இந்துச் சட்ட நூல்கள் - அனைத்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு நீதிபதிகளுக்கும், வழக்குரைஞர்களுக்கும் வழிகாட்டும் நூல்களாகத் தரப்பட்டன. பார்ப்பனச் சட்டத்தை நடைமுறைப்படுத்த பார்ப்பன அறிவாளிகள் நீதிமன்றங்களில் நியமிக்கப்பட்டனர். மிகுஉயர் அதிகாரிகளைத் தவிர அடுத்தமட்ட அதிகாரிகள் பெரும்பாலும் பார்ப்பனர்களாகவே நியமிக்கப்பட்டனர்.

இவ்வாறு கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சியாளர்களுடன் கூட்டமைத்துக் கொண்டு தொடர்ந்து சாதியாதிக்கச் சமூக அமைப்பையும் அதில் தமது தலைமையாதிக்க ஒட்டுண்ணி வாழ்க்கையையும் பாதுகாத்து வந்துள்ள பார்ப்பன சக்திகளுக்கு இனியும் தொடர்ந்து அதைப் பாதுகாத்துக்கொள்ள இந்து மதமும் அதன் அடிப்படையிலான இந்திய ஒற்றுமையும் பாதுகாக்கப்படுவது அவசியமாக இருந்தது.

மொழிவழி அமைந்த மக்கள் சமூகங்கள், தேசிய இனங்கள் எழுச்சியுற்று அரசுரிமை பெற்ற நவீனத் தேசங்களாக அமைந்துவிடுமானால் அதில் ஒன்றுபட்ட இந்திய அரசியல் அமைப்பு மட்டுமல்ல இந்துப் பார்ப்பனிய மதமும் புதைகுழிக்குச் சென்றுவிடும். அது அனைத்து இந்தியச் சந்தை கொண்ட தரகுமுதலாளிய வர்க்கத்தையும் இந்துப் பார்ப்பனிய சக்திகளையும் புதைகுழிக்கு அனுப்பிவிடும். எனவேதான் தரகு முதலாளித்துவ சக்திகளும், பார்ப்பனிய



சக்திகளும் இடைவிடாது இந்தியத் தேசம், இந்தியத் தேசிய ஒருமைப்பாடு, பழம்பெரும் பாரதத் தேசம் என்றெல்லாம் இடைவிடாது கூட்டாக கூச்சலிட்டு வருகிறார்கள்.

ஆனால் இந்த கூச்சல்களுக்குப் பின்னால் அவர்களுடைய சுரண்டல் ஆதிக்க நோக்கங்கள் இருப்பதை அவர்களால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியாது. எனவே அவர்கள் இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமைபற்றி பேசுகிறார்கள். இந்தியாவில் மக்கள் எண்ணற்ற மொழி, இனம், பண்பாட்டால் வேறுபட்டிருப்பினும் அவர்கள் எல்லோருமே பன்னெடுங்காலமாக ஒருமித்த பண்பாட்டால் பிணைக்கப்பட்டு ஒரே தேசமாக, தேசிய இனமாக இருந்து வருகிறார்கள் என்றும் அதுதான் இந்தியத் தேசம், இந்தியப் பண்பாடு அல்லது பாரதத் தேசம், பாரதப் பண்பாடு என்றும் கூறுகிறார்கள்.

அவர்கள் கூறுவதுபோல இந்திய மக்களையெல்லாம் பிணைத்திருக்கும் அந்த ஒருமித்த பண்பாடு, கலாச்சார ஒருமைப்பாடு என்பதுதான் என்ன?

எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால் பார்ப்பனச் சாதியைத் தலைமையிடமாகக்கொண்ட பலபடித்தான சாதியாதிக்கச் சமூகஅமைப்பு அன்றி வேறல்ல. இந்தியாவில் தலைமுதல் கால்வரை இச்சாதியச் சமூக அமைப்பு பரவியுள்ளது. அதைப் போலவே இச்சாதிய சமூக அமைப்பிற்கு தெய்வீகத் தன்மையும் புனிதத் தன்மையும் அளிக்கும் வேதங்களும் உபநிடதங்களும் தர்ம சாத்திரங்களும், இதிகாச, புராணங்களும், கீதையும் இந்தியா முழுவதும் பரவியுள்ளது. இந்திய மக்களைப் பிணைத்துள்ள பண்பாட்டின் ஆதாரங்கள் இவை.

பார்ப்பனர் தலைமையிலான சாதியாதிக்கச் சமூக அமைப்புதான் பார்ப்பனியச் சமூக அமைப்பு. இச்சமூக அமைப்பு தெய்வீகத் தன்மை பொருந்தியது, மீற முடியாதது, மீறக்கூடாதது என்றவிதிகளை வேதங்களை ஆதாரமாகக்கொண்டு மனு, நாரதர் போன்றவர்கள் எழுதிய தர்ம சாத்திரங்கள் போதிக்கின்றன. இத்தர்ம சாத்திரங்களே சமுதாயச் சட்டங்கள். சாதியாதிக்க நெறியை விதிக்கும் இந்தச்சமுதாய சட்டங்களில் தலைமையிடம் வகிக்கும் பார்ப்பனர் மண்ணுலகத் தேவர், இச்சட்டங்களைச் செயல்படுத்தும் மன்னர் கடவுளின் அவதாரம் என்று பிரச்சாரம் செய்கின்றவையே புராணங்களும் இதிகாசங்களும். இவைதாம் இந்து மதத்தின் இலக்கியங்கள்.

படிப்பகம்

www.padippkam.com



இந்த இலக்கியங்கள் மக்களை பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்களாகவும், சண்டாளர் என வர்ணமற்றவர்களாகவும் இன்னும் எண்ணற்ற சாதிகளாகவும் பிரிக்கின்றன. இதில் பார்ப்பனன் எல்லோருக்கும் மேலானவன். சூத்திரனும், சண்டாளனும் எல்லோருக்கும் தாழ்ந்தவர். முதல் மூன்று வர்ணங்களும் இருபிறவிகள். சூத்திரர்கள் அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்யவே பிறந்த இழிபிறவிகள். அதனினும் இழிபிறவி சண்டாளன். அதாவது சமுதாயத்தின் ஒட்டுண்ணிகள் உயர்பிறவிகள். உழைக்கும் மக்கள் இழிபிறவிகள். இவை எல்லாம் இந்து இலக்கியங்கள் போதிக்கும் தர்மநெறிகள்.

இந்து இலக்கியங்கள் போதிக்கும் இந்த பார்ப்பனிய வர்ண-சாதி தர்மநெறிகளே இந்துப் பண்பாடு. இவைதாம் இந்திய மக்களைப் பிணைத்திருக்கும் கலாச்சார ஒருமைப்பாடு, ஒருமித்த கலாச்சாரம் என்பதெல்லாம். இதுதான் இந்தியப் பண்பாடு, இந்தியத் தேசியப் பண்பாடு, பாரததேசப் பண்பாடு என்றெல்லாம் கூறப்படுகிறது.

இந்தியத் 'தேசியத்' தலைவர்கள் இதை வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியத் தேசத்தின் தந்தை, காந்தி கூறினார்: "நான் ஒரு சனாதன இந்து. ஏனெனில் முதலாவதாக நான் வேதங்களை நம்பு கிறேன்; உபநிடதங்களை நம்புகிறேன்; புராணங்களை நம்புகிறேன்; மற்றும் எல்லா இந்துமத ஆதார நூல்களையும் நம்புகிறேன். எனவே அவதாரங்களையும், மறுபிறவியையும் நம்புகிறேன். இரண்டாவதாக நான் வர்ணாசிரமதர்மத்தை இன்றைய வடிவத்தில் அன்றி வேதங்கள் கூறியிருப்பதுபோல நம்புகிறேன். மூன்றாவதாக நான் பசுவதைத் தடையை நம்புகிறேன். நான்காவதாக உருவ வழிபாட்டில் நான் நம்பிக்கையற்றவனாக (Young India, oct. 1921) இல்லை."

தேசத்தந்தையின் நம்பிக்கைகளுக்கும், விருப்பத்துக்கும் மாறாகவா ஒரு தேசம் உருவாகிவிட முடியும்? இந்தியத் தேசம் என்பதன் சாரம் இந்துப் பார்ப்பனியமே என்பதை எல்லா இந்தியத் தேசியத் தலைவர்களுமே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

"இந்தியச் சமுதாயத்திற்குப் பொதுவான அம்சம் இந்துத்துவா என்ற உணர்வுதான்" என்றார் திலகர். "இந்தியாவில் இன்றுள்ள தேசிய இயக்கத்தின் ஆன்மீக அம்சம் முழுக்கமுழுக்க வேதாந்தச் சிந்தனை யிலிருந்து பெறப்பட்டதுதான்" என்றார் லஜபதிராய். "இந்தியத் தேசிய



இனம் வளர்க்க முற்படும் ஆன்மீகம் என்பது அடிப்படையில் இந்து ஆன்மீகம்தான்" என்றார் அரவிந்தர். "இந்தியாவில் இன்றுவரையில் உள்ள தேசிய இயக்கம் என்பது அடிப்படையில் ஒரு இந்து இயக்கம்தான்" என்றார் விபின்சந்திரபால். "இந்து மதம் என்று அழைக்கப்பட்ட பார்ப்பனியமே இந்தியத் தேசியக் கலாச்சாரம்— அதுவே தேசிய உணர்வுகளுக்கு அடிப்படையாயிற்று... தொன்மை யான பார்ப்பனியச் சிந்தனைகளும், நம்பிக்கைகளுமே இந்தியத் தேசிய மறுமலர்ச்சிக்கான அடையாளமாயின" என்றார் நேரு.

காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர்களும் இந்தியத் தேசியத்தின் இந்துப் பார்ப்பனிய அடிப்படையை வெளிப்படையாக ஒப்புக்கொண்டது மட்டுமல்ல அவர்கள் முற்றமுழுக்க தரகு முதலாளிகளின் நிதியில்தான் இயங்கி வந்தார்கள் என்பதை காந்தியே ஒப்புக்கொண்டார். இதை அம்பேத்கார் "காந்தியும் காந்தியமும்" என்ற தனது நூலில் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

கையில் கீதை, நாவில் இராம ராஜ்யம் வந்தேமாதரம் ஜெபம், இவற்றோடு தரகு முதலாளி பிர்லாவின் மாளிகையில் வாசம். இப்படியிருந்த காந்திதான் இந்தியத் தேசத்தின் தந்தை என்ற உண்மை இந்தியத் தேசியத்தின் தரகு முதலாளிய-பார்ப்பனிய அடிப்படையை வெளிச்சம் போட்டுக் காட்டவில்லையா?

இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக இந்தி மொழியைத் திணித்ததும் இந்தத் தரகு முதலாளித்துவ-பார்ப்பனிய ஆதிக்கக் கூட்டே.

தரகு முதலாளிகளுக்குத் தமது அனைத்திந்தியச் சந்தை நலனைக்காக்கும் பொருளாதாரக்காரணங்களுக்காக ஒரு பொதுமொழி அவசியம். அதேநேரத்தில் அந்தப்பொதுமொழி இந்துப் பார்ப்பனியப் பண்பாட்டைப் பாதுகாக்கக்கூடியதாக இருப்பதும் அவசியம்.

இந்துப் பார்ப்பனிய பண்பாட்டின்மொழியாக கடந்த இரண்டா யிரமாண்டுகளுக்கும் மேலாக இருந்துவரும் மொழி சமக்கிருதம். அது பார்ப்பனர்களால் பார்ப்பனியச் சமுதாயத்தைக் கட்டிக்காப்ப தற்காக உருவாக்கப்பட்ட மொழி. சமக்கிருதம் என்றாலே செய்யப் பட்டது என்றுதான் பொருள். இருபிறவிகளுக்காகவே உருவாக்கப் பட்ட இந்த மொழி எப்போதுமே மக்கள் மொழியாக இருந்ததில்லை.

பார்ப்பனர்கள் மண்ணுலகத் தேவர்கள் என்றும் சத்திரியர்கள் கடவுளின் அவதாரங்கள் என்றும் தமக்குத் தாமே கூறிக்கொண்டது

படிப்பகம்

www.padippkam.com



போல அவர்களுக்காக, அவர்களே உருவாக்கிக்கொண்ட சமக்கிருத மொழிக்கு தேவமொழி என்றும் அதன் எழுத்துவடிவிற்கு தேவநாகரி என்றும் பெயர் வைத்துக்கொண்டனர். உழைக்கும் மக்களை சூத்திரர், சண்டாளர் என இழிவுபடுத்தி ஒடுக்கி வந்தது போலவே அவர்கள் பேசும் மொழிகளைச் சூத்திரபாசை என்றும் நீசபாசை என்றும் இழிவுபடுத்தி ஒடுக்கினர்.

இத்தகைய சமக்கிருதமொழியே இந்துப் பார்ப்பனியப் பண்பாட்டிற்குரிய மொழி. எனினும், வரலாறு முழுவதும் ஆதிக்க வர்க்கத்தின் மொழியாக மட்டும் இருந்துவந்திருக்கும் தேவமொழியை, உலக வழக்கில் இல்லாத சமக்கிருதமொழியை மன்னராட்சிக் காலம் போல அரசியல் சட்டத்தில் நேரடியாக ஆட்சி மொழியாக அறிவிக்க முடியாது என்பதால், ஆரியவர்த்தத்தில் இந்துமேல்சாதி வர்க்கப் படிப்பாளிப் பகுதியினரால் இந்துஸ்தானியை சமக்கிருதமயமாக்கியதன் மூலம் உருவாக்கப்பட்ட இந்துப்பண்பாட்டு மொழியாகிய - ஆரிய பாசை என்று அவர்களாலேயே பெயர் வைத்து அழைக்கப்பட்ட இந்தியை இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாகத் திணித்து விட்டார்கள். சமக்கிருதமயமாக்கப்பட்ட இந்தியை எல்லோரும் ஏற்கும்படி செய்துவிட்டால் பின்னர் சமக்கிருதத்தை ஏற்கச் செய்வது எளிதாகிவிடும் என்பது அவர்களுடைய திட்டம்.

தரகுமுதலாளிகள் அனைவரும் வெவ்வேறு மொழிபேசும் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்தாம் எனினும், அவர்கள் எல்லோருமே ஒருமனதாக இந்தியை ஒரே ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டதற்குக் காரணம், அது அவர்களுக்குத் தேவையான இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படையாய் விளங்கும் இந்துப் பார்ப்பனியப் பண்பாட்டு மொழி இந்துப் பார்ப்பனிய சக்திகளால் உருவாக்கப்பட்டு முன்மொழியப்பட்ட மொழி என்பதேயாகும்.

## 4

## இந்தியத் தேசம் என்பது தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளின் ஏகாதிபத்தியவாதமே!

இந்தியத் தேசியம், இந்தியத் தேசிய ஒருமைப்பாடு என்பது தரகுமுதலாளித்துவ வர்க்கம் தனது விரிந்த சுரண்டல் நலனையும், பார்ப்பனிய சக்திகள் தமது சாதியாதிக்கச் சமூக அமைப்பையும், அதில் தமது மேலாண்மையையும் கட்டிக்காத்துக் கொள்வதற்கான



கொள்கைமட்டுமல்ல அதற்கும் மேலாக தேசிய ஒடுக்குமுறைக்கான ஒரு ஏகாதிபத்தியக்கொள்கையும் ஆகும் என்பது முக்கியமானதாகும்.

ஏகாதிபத்தியம் என்பது பிரதேசங்களைக் கைப்பற்றி அவற்றின் அரசுரிமையை மறுத்துப் பலாத்காரமாக இணைத்து ஒரு பேரரசை நிறுவிக்கொள்ளும் கொள்கை. இது வர்க்க சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்து, இன்றைய நிதிமூலதன ஆதிக்கக் கால கட்டம் வரையிலும் ஆதிக்கவாதிகளால் பின்பற்றப்பட்டு வருகிறது. மாபெரும் ரோமும், மாபெரும் பிரிட்டனும் அவற்றின் காலனியக் கொள்கையில் வேறுபாடு கொண்டிருப்பினும் ஏகாதிபத்தியங்களாகவே இருந்தன. காலனியக் கொள்கைகளையே பின்பற்றின. (காண்க: லெனின், ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் பக். 132) இந்தியாவில் இதுவரை இருந்து வந்துள்ள அனைத்துப் பேரரசுகளுமே-மௌரியப் பேரரசிலிருந்து பிரிட்டிஷ் பேரரசு வரை அனைத்துமே பிரதேசங்களைப் பலாத்காரமாகக் கைப்பற்றி அவற்றின் அரசுரிமை மறுத்து இணைத்துக்கொண்டதினால் உருவான ஏகாதிபத்தியங்களே. அவற்றின் காலனியக் கொள்கைகளில் இருந்த வேறுபாடுகள் அவை ஏகாதிபத்திய அரசுகள் என்பதை மறுத்துவிடுவதில்லை.

இன்று இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசுகளுக்குப்பின் அதன் தொடர்ச்சியாய் நிலவி வரும் பேரரசு தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளின் ஏகாதிபத்தியப் பேரரசாகும். இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனக்கு ஏற்பட்ட நெருக்கடிகளின் காரணமாக இன்னும் தனது நேரடிக் காலனியாக இந்தியாவில் தனது ஏகாதிபத்திய ஆட்சியைத் தொடர முடியாது என்ற நிலையில் ஏகாதிபத்திய நலன்பேணும் தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளிடம் அரசியல் அதிகாரத்தை விட்டுச்சென்றதால் உருவான ஒரு துணை ஏகாதிபத்திய அரசாகும்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் துப்பாக்கிமுனையில் பலாத்காரமாகப் பிரதேசங்களைக் கைப்பற்றி ஒன்றிணைத்து உருவாக்கிய ஒரு காலனியப் பேரரசுதான் 1947க்குப் பின் தற்போதைய தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியமாக மாறியிருக்கிறது.

இன்று தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகள் இந்தியத் தேசியம், இந்தியத் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் இந்தியாவில் இருக்கும் பல்வேறு தேசிய இனங்களின் அரசுரிமையையும் மறுத்து வருகின்றன; இந்தி மட்டுமே இந்தியாவின் ஒரே ஆட்சிமொழி என்று திணித்துள்ளன. இக்கொள்கைகளுக்கான எதிர்ப்புகளையும், தேசிய இன மக்களின் தேசியக்

படிப்பகம்

www.padippkam.com



கோரிக்கைகளையும் தேசத் துரோகம், பிரிவினைவாதம் எனக் கொக்கரித்து அடக்கி, ஒடுக்கிவருகின்றன. இவ்வாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் பலாத்காரமாக உருவாக்கப் பட்ட இந்திய ஒன்றிணைப்பை பலாத்காரமாகவே பாதுகாத்து வருவது ஏகாதிபத்தியக் கொள்கையன்றி வேறல்ல.

தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளின் ஏகாதிபத்தியக் கொள்கை பிரதானமாகத் தேசிய ஒடுக்குமுறையை ஆதாரமாகக் கொண்டி ருக்கிறது. அரசியல், பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் தேசிய இனங்களின் வளர்ச்சியை முற்றாக நசுக்குவதன் மூலமே இந்த ஏகாதிபத்தியம் செயல்படுகிறது.

முதலாவதாக : தரகு முதலாளித்துவம் என்பது மேலிருந்து திணிக்கப்படும் முதலாளித்துவம்; ஏகாதிபத்தியத்துடனும், ஒவ்வொரு தேசிய இனத்திலுமுள்ள நிலப்பிரபுத்துவ சக்திகளுடனும் கைகோத்துக் கொண்டுள்ள முதலாளித்துவம். அதே நேரத்தில் எந்த ஒரு தேசிய இனத்திற்கும் உட்படாத அனைத்திந்திய அளவிலான சந்தை கொண்டுள்ள முதலாளித்துவம். இதனால் தேசிய(இன) அளவிலான தேசிய முதலாளித்துவத் தொழில்கள் இவற்றோடு போட்டியிட முடியாமல் நசுக்கப்படுகின்றன. இது தேசிய அளவில் கீழிருந்து தொழில்கள் வளர்வதையும் மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் நவீனத்தொழில் துறைக்கு ஈர்க்கப்படுவதையும் தடைசெய்து நாட்டின், மக்களின் தொடர்ந்த மிகப் பின்தங்கிய நிலைக்குக் காரணமாயிருக்கிறது. தரகுமுதலாளித்துவ–நிலப்பிரபுத்துவ சக்திகளைச் சார்ந்து மக்கள் தொகையில் மிகச் சிறிய பிரிவினர் செல்வ வளம்மிக்க ஒட்டுண்ணி வாழ்வைப் பெறுவதற்கும், மிகப் பெரும் பான்மையான உழைக்கும் மக்கள் பஞ்சை பராரிகளாக, கல்வி யறிவற்ற பாமரர்களாக மிகப் பின்தங்கிய வாழ்க்கை நிலையில் ஏழ்மையில் உழல்வதற்கும் இது காரணமாயிருக்கிறது.

இரண்டாவதாக : தேசிய இனங்களின் அரசுரிமை-சுயநிர்ணய உரிமை-தேசிய இனங்களின் சுயமான தேசியத் தொழில் வளர்ச்சிப் பாதைக்கு வழிவகுத்துவிடும் என்பதால் அது முற்றாக மறுக்கப் பட்டிருக்கிறது. தேசிய இனங்களின் சுயமான தொழில்வளர்ச்சிப் பாதை தரகுப் பொருளாதாரத்தையும், நிலப்பிரபுத்துவப் பொருளா தாரத்தையும் முடக்கி அவ்வர்க்கங்களைப் புதைகுழிக்கு அனுப்பி விடும் என்பதால் தேசிய இனங்களின் அரசுரிமை-சுயநிர்ணய உரிமை மறுப்பு இவ்வர்க்கங்களின் உயிர்நிலைத் தேவையாய் இருக்கிறது. மேலும் தரகு-நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் சுரண்டல்



ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் தேசிய (இன) ரீதியில் ஒன்றுபட்டு கிளர்ந்துவிடாமல் தடுத்து ஒடுக்குவதையும் தேசிய (இனங்களின்) அரசுரிமை மறுப்பு நோக்கமாகக் கொண்டிருக்கிறது. மொழிசமத்துவக் கோரிக்கைகளும், இந்தி எதிர்ப்பு போராட்டங்களும், பழங்குடி மக்கள் சமூகங்களின் மாநிலக் கோரிக்கைகளும், மக்களின் தேசியச் சிந்தனையைத் தூண்டிவிட்டு தேசிய ரீதியில் அவர்களை ஒருங்கி ணைக்கும் என்பதால் அது தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளின் இந்தியத் தேசிய ஏகாதிபத்தியக் கனவுகளுக்கு எதிரானதென்பதால் தேசிய விடுதலைக்குக் குறைவான இத்தேசியக் கோரிக்கைகள்கூட முளையி லேயே ஒடுக்கப்படுகின்றன. இவ்வாறு இந்தியாவில் உள்ள தேசிய இனங்களும், தேசிய இனங்களாக உருவாகிவரும் சமூகங்களும் சுதந்திரமான வளர்ச்சியின் மூலம் நவீனத்தேசங்களாக மலர்வதற்கான சுதந்திரம் முற்றாகப் பறிக்கப்பட்டு அவை பின்தங்கிய நிலையில் அடிமை நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மூன்றாவதாக : தரகுப் பொருளாதாரத்தால் நிலப்பிரபுத்துவ, அரைநிலப்பிரபுத்துவ உறவுகளில், பின்தங்கிய நிலையில் விட்டு வைக்கப்பட்டிருக்கும் மக்கள் வர்க்கரீதியில் ஒன்றுபட்டுவிடாமல் அவர்களைச் சாதிரீதியில் பிளவுபடுத்தி தரகு-நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் பாதுகாப்புக்குப் பார்ப்பனியம் வெற்றிகரமாக சேவை செய்து வருகிறது. இந்துமத நூல்கள், நிறுவனங்களின் புனிதம் குறித்து இடைவிடாத பிரச்சாரம் செய்து வருவதன்மூலம் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் பார்ப்பனியத்தின் இந்த வெற்றியை மேலும் எளிதாக்குகிறது. இது. மக்கள் தொடர்ந்து சாதிய ரீதியில் பிளவுபட்டிருப்பதற்கும், வர்க்க ரீதியிலோ, தேசிய இன ரீதியிலோ ஒன்றுபடாமல் தடுப்பதற்கும் பயன்படுகிறது; அதே நேரத்தில் இந்தியத் தேசியம், இந்தியன், இந்தியத் தேசிய ஒருமைப்பாடு என்கிற பொய்மையான உணர்வுகளை வலிந்து ஊட்டி வருகிறது.

நான்காவதாக : தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகள் மேலை ஏகாதிபத்திய-பார்ப்பனியக் கலாச்சாரத்தின் மேலாண்மையை நிறுவி தேசிய மக்களின் மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரத்தினை நசுக்கி அழித்து வருகின்றன.

தரகு முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ வர்க்கங்களைச் சுற்றி யுள்ள மிகச்சிறிய மேல்தட்டு சதவீதத்தினரின் கலாச்சாரம்தான் தரகு முதலாளிய-பார்ப்பனியக் கலாச்சாரம். மேலை ஏகாதிபத்திய நாகரிகமும், வரலாறும், பண்பாடும், மொழியும், வாழ்க்கைமுறையும் உயர்வானவை விஞ்ஞானப் பூர்வமானவை; பார்ப்பனிய

படிப்பகம்

www.padippkam.com



வாழ்க்கைமுறையும், தேவ மொழியும், கலையும் இலக்கியமும், நாகரிகமும், பண்பாடும் உயர்வானவை, புனிதமானவை; இவை போற்றப்பட வேண்டியவை, பின்பற்றப்பட வேண்டியவை; அதே நேரத்தில் மிகப்பெரும் பான்மையாய் இருக்கும் தேசிய இன (உழைக்கும்) மக்களின் மொழி, கலை இலக்கியம், வரலாறு, பண்பாடு அனைத்தும் இழிவானவை; கைவிடப்படவேண்டியவை. இதுவே தரகு முதலாளிய-பார்ப்பனிய கலாச்சாரத்தின் சாரம். தரகு முதலாளிய-பார்ப்பனிய நெறிகள் தமது கலாச்சாரத்தின் ஆதிக்கத்தை நிறுவியிருப்பதன் மூலம் தமது சொந்தத் தேசிய வரலாறு, தத்துவம், பண்பாடு, மொழி, இலக்கியம் குறித்த அறியாமையையும் தமது சொந்தத் தேசியக் கலாச்சாரம் குறித்த தாழ்வு மனப்பான்மையையும் அனைத்து தேசிய இன மக்களிடையேயும் உருவாக்கி அவர்களைத் தமது கலாச்சார அடிமைகளாக்கியிருக்கின்றன.

தேசிய மக்களின் வரலாறும், பண்பாடும் பார்ப்பனிய வேதவரலாற்றின், பண்பாட்டின் பகுதிகளாக, கீழ்ப்பட்டதாக ஆக்கப் பட்டிருக்கிறது. தேசிய மொழிகள் பார்ப்பனிய தேவமொழிக்கு கீழ்ப்பட்டதாக்கப்பட்டிருக்கிறது. அனைத்து உழைக்கும் மக்களும் பார்ப்பனர்களுக்குக் கீழ்ப்பட்ட சாதியாக்கப்பட்டிருக்கிறார்கள். வாழ்க்கைத்தரத்தில் பஞ்சை பராரிகளாகவும், கல்வியறிவற்ற பாமரர் களாகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேசிய அரசுரிமை எல்லைகள் இந்துப் பார்ப்பனிய அரசு எல்லைகளால் விழுங்கப்பட்டுள்ளன; ஆங்கிலமும், இந்தி மொழியும் ஆதிக்கப்பீடத்தில் இருக்க தேசிய மொழிகள் பிராந்திய மொழிகளாய் நசுக்கப்படுகின்றன. தேசிய மொழிகளும், கலை இலக்கியங்களும் ஆங்கில–பார்ப்பனிய மொழி, கலை இலக்கியங்களால் சிதைக்கப் படுவதும், ஆங்கில, பார்ப்பனிய வாழ்க்கைமுறையை மேற்கொள்வதும் பெருமைக்குரியதாக்கப்பட்டிருக்கின்றன.

தேசிய இனமாக உருவாகிவரும் பழங்குடிமக்கள் சமூகங்களில் இந்துப் பார்ப்பனிய கலாச்சாரத்தையும், இந்தி மொழி ஆதிக்கத்தையும் திணித்து அவர்களுடைய மொழி, கலாச்சாரத்தை ஒழித்துக் கட்டுவதன் மூலம் அவர்களை இந்தியத் தேசியத்தின் அங்கமாக்கி வருகின்றன.

மொத்தத்தில் தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகள் தேசிய இன மக்கள் சமூகங்களை இந்தியத் தேசியத்தால் படிப்படியாக விழுங்கி வருகின்றன. தேசிய இன மக்களின் தேசியத் தனித் தன்மையையும், உணர்வையும் அழித்து அவற்றின் சுய வளர்ச்சியையும், தன்னம்பிக் கையையும் முடமாக்கி அவற்றை அடிமைப்படுத்தி வருகின்றன.



இவ்வாறு தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளின் இந்தியத் தேசியம் என்பது தேசிய இன மக்கள் சமூகங்களை அரசியல் ரீதியில் அடிமைப்படுத்தி, பொருளாதார ரீதியில் பஞ்சைபராரிகளாக - வறுமைக்குள்ளாக்கி, கலாச்சார ரீதியில் இழிவுபடுத்துகின்ற தேசிய ஒடுக்குமுறையையே ஆதாரமாகக் கொண்டுள்ள ஒரு ஏகாதிபத்தியக் கொள்கையாகவன்றி வேறாக இல்லை.

இந்த ஏகாதிபத்தியக் கொள்கை தேசிய இனங்களின் சுயசார்பு தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கும், தேசிய இனங்கள் முழுவளர்ச்சியடைந்த தேசங்களாக வளர்வதற்கும், அவற்றின் மொழி, கலை, இலக்கிய வளர்ச்சிக்கும், தடையாக இருப்பதுடன் இக்காரணத்தால் மக்கள் சுதந்திரமான விரிவான வர்க்கங்களாக அமைவதற்கும் தடையாக இருக்கிறது. இவ்வாறு சனநாயகத்திற்கும் எதிர்கால சோசலிசத்திற்கும்கூட தடையாக இருக்கிறது.

## 5

## இந்தியாவில் இருவகை அரசியல் போக்குகள் தேசிய விடுதலையே சனநாயகப் புரட்சியின் வெற்றிக்கான ஒரே வழி

இந்தியாவில் தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகள் ஒருபுறம் ஏகாதி பத்தியங்களுடனும் மறுபுறம், ஒவ்வொரு தேசியஇனத்திலும் இருக்கும் நிலப்பிரபுத்துவ சக்திகளுடனும் கைகோத்துக் கொண்டுள்ளன. எனவே இச்சக்திகளை முற்றாகத் தூக்கி எறிவதன் மூலமே இங்கு சனநாயகப் புரட்சியை நிறைவுசெய்ய முடியும். இது ஒவ்வொரு தேசிய இனமும் முழுமையான நவீனத் தேசங்களாக வளரும் நிகழ்வுடன் இணைந்துள்ளது. ஆனால் ஒவ்வொரு தேசிய இனமும் முழுமையான வளர்ச்சி பெற்ற நவீனத் தேசங்களாக வளர்ச்சி அடைவதற்கு அவை தமது சொந்தத் தேசிய அரசுகளை அமைத்துக் கொள்வது அவசியமாகும். தேசிய அரசு இன்றி ஒரு தேசிய இனத்தின் மொழியும், இலக்கியமும் எல்லாத் துறைகளிலும் முழுமையாக வளர்ச்சியடைய முடியாது. மாறாக அதன் சொந்த மக்களாலேயே புறக்கணிக்கப்படுவதற்கும் தாழ்ந்த நிலையில்

படிப்பகம்

www.padippkam.com



வைத்தெண்ணப்படுவதற்குமே இட்டுச் செல்லும். இந்தியாவில் ஒரு தேசிய இனம் தனது சொந்தத் தேசிய அரசை அமைப்பதென்பது இந்தியத் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறாமல் சாத்தியமில்லை. எனவே ஒவ்வொரு தேசிய இனத்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சனநாயகப்புரட்சியை தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியத் திலிருந்து விடுபடுவதற்கான தேசிய விடுதலையுடன் இணைக்கும் போது மட்டுமே இந்தியாவில் சனநாயகப் புரட்சி வெற்றிபெறமுடியும். ஒடுக்கும் தேசிய இனமோ அதில் பலம்பெற்ற பாட்டாளி வர்க்க இயக்கமோ இல்லாத நிலையில் இந்தியாவில் சனநாயகப் புரட்சியின் வெற்றிக்கு இதைத் தவிர வேறுவழி எதுவும் இல்லை.

பல்தேசிய இன நாடாயிருந்த இரசியாவில் ஒடுக்கும் தேசிய இனத்தில் பாட்டாளி வர்க்கம் புரட்சிக்குத் தலைமையளிக்கும் சக்தியாகவும் தீர்மானகரமான சக்தியாகவும் லெனின் தலைமையில் வளர்ச்சியடைந்திருந்ததால் ஒடுக்கப்படும் பிற தேசிய இனங்கள் தேசிய அரசுரிமையுடன் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்து நின்று போராடி ஜாராட்சியை வீழ்த்தி ஒரு சுதந்திரக் குடியரசுகளின் ஒன்றியத்தை சமத்துவ அடிப்படையில் அமைக்க முடிந்தது. ஆனால் இந்திய நிலைமைகள் அவ்வாறில்லை. இங்கு தேசிய ஒடுக்குமுறை செலுத்துவது தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளே. இது ஒரு தேசிய இனம் அல்ல. எனவே இங்கு ஒடுக்கும் தேசிய இனத்தில் பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சி, ஒடுக்கும் தேசிய இனத்துடன் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் சமத்துவ அடிப்படையில் இணைந்து ஒன்றுபட்டுப் போராடுவது என்ற பிரச்சினைகளுக்கெல்லாம் இடமில்லை. ஒடுக்கும் தேசிய இனத்தின் விடுதலையைப் போல எந்த ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலையும் பிற ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் விடுதலைக்குக் காரணமாக அமைய முடியாது என்பதால் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் இணைந்து போராடுவது என்பதற்கும் இடமில்லை.

இந்தியத் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியவாதிகள் தமது தேசிய ஒடுக்குமுறைக்கு ஆதரவாக இந்தி தேசிய இனம் என்ற சலுகைபெற்ற பெரிய தேசிய இனம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. அவர்கள் வட இந்தியாவில் இந்திபேசும் மாநிலங்கள் என சிலவற்றைக் காட்டி இந்திப் பெருந்தேசிய இனம் ஒன்று இருக்கிறது என நிரூபிக்க முயல்கிறார்கள். வடஇந்திய நகர்ப்புற மேல்தட்டு வர்க்க-சாதியினரிடம் வழங்கிய இந்துஸ்தானியிலிருந்து அதை இருபதாம் நூற்றாண்டின்



தொடக்கத்தில் சமக்கிருதமயமாக்கியதன் மூலம் உருவாக்கப்பட்ட இந்தியை மத்தியஅரசிலும் அவர்கள் கூறும் மாநிலங்களிலும் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் திணித்துவிட்டதன் மூலம் அந்த மாநிலங்கள் இந்திபேசும் மாநிலங்களாகிவிட்டதாக நம்பச் சொல்கிறார்கள். அம்மாநிலங்களில் வாழும் மக்களின் மொழிகளில் வழங்கும் இலக்கியங்களையெல்லாம் இந்தி இலக்கியங்கள் எனப் பட்டியலிட்டு இந்திமொழியின் தொன்மையைக் காட்டவும் முயல்கிறார்கள். ஆனால், இவை எல்லாம் வட இந்திய மாநிலங்களில் வழங்கும் மக்கள் மொழிகள் அனைத்தையும் நசுக்கி ஒழித்துக் கட்டி இந்தித் தேசிய இனம் என்ற சலுகை பெற்ற பெரிய தேசிய இனம் ஒன்றை உருவாக்கும் முயற்சி என்பதன்றி வேறல்ல.

கூடவே, இந்தியத் தேசியம், தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் பிற வளர்ச்சியடைந்த தேசிய இனங்களின் தனித்தன்மை களுக்கு எதிராக அவற்றின் உரிமைகளை மறுத்து தொடர்ந்து அடக்குமுறைகளை ஏவிவிட்டு இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இன மக்களையும் ஒரே இந்தியத் தேசிய இனமாக உருவாக்கும் முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வரலாறு அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராகவே முன்னேறி வருகிறது.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பார்ப்பனியச் சாதிய-சமக்கிருத ஆதிக்கத்தால் மக்கள் சாதிகளாகப் பிளவுபடுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டது மட்டுமின்றி அவர்கள் பேசும் மொழிகளும் நசுக்கப்பட்டன. அதில் பாலியும், பிராகிருதமும் ஒழிந்தன. எனினும் மக்கள் பேசும் மற்றொரு மொழியாக இருந்த தமிழை அது ஒழிக்க முடியவில்லை. மத்தியகாலத்தில் பக்தி இயக்கத்தைத் தொடர்ந்து தெலுங்கு, கன்னடம், மராத்தி, குஜராத்தி, ராஜஸ்தானி, வங்காளி முதலான தேசிய இனங்களும் மொழிகளும் அவற்றின் இலக்கியங்களும் தோன்றுவதை அது தடுக்க முடியவில்லை. பார்ப்பனியச் சாதி-சமக்கிருத ஆதிக்கத்துடன், மொகலாயர்கள் ஆட்சியில் பாரசீகமும், ஆங்கிலேயர்கள் ஆட்சியில் ஆங்கிலமும் ஆதிக்கம் செலுத்தியபோதும் காலனியத்திற்கு எதிரான போராட்டத்தின்போது பல்வேறு தேசிய இனங்களும் மொழிவழி மாநிலக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுவதை இவ்வாதிக்கங் களால் தடுக்கமுடியவில்லை. தேசியஇன மக்களின் தொடர்ந்த இடை விடாத தீரமான போராட்டங்களின் விளைவாக தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியவாதிகளின் விருப்பத்திற்கு மாறாகவே மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எந்த ஒரு சிறு தேசியக் கோரிக்கையும்கூட பிரிவினைவாதம், தேசத் துரோகம் என

படிப்பகம்

www.padippkam.com



முத்திரை குத்தப்பட்டு ஒடுக்குமுறை ஏவிவிடப்பட்டுக் கொண்டிருந்தாலும் இன்னும் மொழிவழி மாநில அமைப்புகளுக்கான புதிய புதிய போராட்டங்கள், தங்கள் மொழி, இன உரிமைக்கான போராட்டங்கள், தேசிய விடுதலை முழக்கங்கள் எழுந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்திப் பிரதேசங்களெனக் கூறப்படும் வடமாநிலங்களில்கூட இன்று பல்வேறு மொழிகளைச் சேர்ந்த மக்கள் தமது மொழி, இன உரிமைக் கோரிக்கைகளை மேலும் மேலும் எழுப்பி வருவது அன்றாடச் செய்திகளாய் இருக்கின்றன.

இவை எல்லாம் இன்றைய இந்திய வரலாற்றில் நேரெதிரான இருபோக்குகள் நிலவுவதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. இன்று இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருப்பெற்றுவிட்ட தேசிய இனம், மத்திய காலத்திலும், பின்னரும் உருவான தேசிய இனங்கள் சமீபத்தில் உருவான, உருவாகிவருகின்ற தேசிய இனங்கள் எனப் பல்வேறு வளர்ச்சி மட்டங்களுடனும் வரலாறுகளுடனும் நிலவும் எண்ணற்ற தேசிய இனங்கள் தரகுப் பார்ப்பனிய ஏகாதிபத்தியத்தால் இந்தியத் தேசியம் என்ற பெயரில், முழுத் தேசங்களாக வளர்ச்சியடைய விடாமல் தடுக்கப்பட்டு நசுக்கி அழிக்கப்படுமா? அல்லது அவை தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தி யத்தை ஒழித்துக்கட்டி முழுமையான தேசங்களாக வளர்ச்சியடைந்து முன்னேறுமா? இதில் எந்தப் போக்கு வெற்றி பெறும்?

இதில் இரண்டாவது போக்கின் வெற்றி அதாவது தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் ஒழித்துக்கட்டப்பட்டு அனைத்துத் தேசிய இனங்களும் முழுமையான நவீனத் தேசங்களாக வளர்ச்சியடைந்து முன்னேறுவது யாராலும் மாற்றமுடியாத வரலாற்று விதியாகும். இந்த இரண்டாவது போக்கின் வெற்றியோடுதான் இந்தியாவில் சனநாயகப் புரட்சியின் வெற்றியும், பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியும் பிணைக்கப்பட்டிருக்கிறது.

## 6

## ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதமும் அது விளைவித்த கேடுகளும்

ஒரு அரசு சமூகத்திற்கும், தேசியச் சமூகத்திற்கும் இடை யிலான வேறுபாட்டை மார்க்சியம் தெளிவுபடுத்தியிருக்கிறது. தேசிய இனம்-தேசிய சமூகம்-நவீனத் தேசமாக உருவாவதற்கும் சனநாயகப்



புரட்சிக்கும் இடையிலான உறவு குறித்தும் மார்க்சியம் தெளிவு படுத்தியிருக்கிறது.

எனினும் இந்தியப் பொதுவுடைமை இயக்கம் 1947க்கு முந்திய காலனிய கால இந்தியப் பல்தேசிய அரசு சமூகத்தையும் சரி, அதற்குப் பிந்தைய கால இந்தியப் பல்தேசிய அரசு சமூகத்தையும் சரி ஒரு தேசியச் சமூகமாகக் கருதியே தனது வேலைத்திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வந்திருக்கிறது. இந்தியப் பொதுவுடைமை இயக்கம் இ.பொ.க., இ.பொ.க.(மா), இ.பொ.க.(மா-லெ) எனப் பிரிவுபட்ட பின்னும் இப்பிரச்சினையில் இப்பிரிவுகளுக்கிடையே அடிப்படை வேறுபாடு எதுவும் இல்லை.

1942-43இல் தான் தேசம், தேசிய இனம் பற்றிய மார்க்சிய கோட்பாடுகளை இ.பொ. இயக்கம் முதன்முதலாகத் தெரிந்துகொண்டு இந்தியாவில் பல்வேறு தேசியச் சமூகங்கள்- தேசிய இனங்கள் இருப்பதை அங்கீகரித்தது. எனினும் இந்தியாவில் தேசிய விடுதலைப் புரட்சியுடன் இணைந்த வடிவிலேயே சனநாயகப் புரட்சியை நிறைவு செய்யமுடியும் என்பதை அது இறுதிவரையிலும் உணரவில்லை. காரணம் இந்தியா ஒரு தேசிய சமூகம் என்பதிலிருந்து அது இறுதிவரை விடுபடாததுதான்.

ஒரு பல்தேசிய அரசு சமூகத்தை ஒரு தேசியச் சமூகமாகக் காட்டுவது ஏகாதிபத்தியவாதம் ஆகும். காரணம் அது, அந்த அரசு சமூகத்தில் இருக்கும் பல்வேறு தேசிய இனங்களுக்கும் உள்ள அரசுரிமையை மறுத்து அடிமைப்படுத்துகிறது. இந்தியாவில் தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகள் இந்தியாவை ஒரு தேசமாகக் காட்டுவது இக்காரணத்தினால்தான் ஏகாதிபத்தியவாதமாக இருக்கிறது.

இந்தியப் பொதுவுடைமை இயக்கமும் தொடக்கத்திலிருந்து இன்றுவரை அதன் எல்லாப் பிரிவுகளுமே இந்தியத் தேசம் என்ற கருத்தைக் கொண்டிருப்பதால் இந்த ஏகாதிபத்தியவாதத்திலிருந்து வேறுபடவில்லை. 1942லிருந்து ஒன்றுபட்டிருந்த இந்தியப் பொது வுடைமைக் கட்சியும், பின்னர் இ.பொ.கட்சி (மா-லெ)யும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டதும், எல்லாப் பிரிவுகளுமே இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருப்பதை ஏற்றுக்கொண்டதும், இ.பொ.இயக்கத்தின் ஏகாதிபத்தியவாதத்தை மாற்றி விடவில்லை. இந்தியத் தேசம் என்கிற கருத்தை வைத்துக் கொண்டே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைபற்றி கூறுவது முரண் பாடானதும் மார்க்சியமல்லாத சந்தர்ப்பவாத முடிவுமே ஆகும்.

படிப்பகம்

www.padippkam.com



ஏகாதிபத்திய எதிர்ப்பு-நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்தியத் தேசியம் என்ற வரையறுப்பை முன்வைப்பதால்கூட இ.பொ. இயக்கம் ஏகாதிபத்தியவாதத்திலிருந்து விடுபட்டுவிடவில்லை. இந்தியத் தேசம் என்ற கருத்தாக்கமே அது எந்த வடிவத்தில் முன்வைக்கப்பட்டாலும் இந்தியாவில் இருக்கும் பல்வேறு தேசிய இனங்களின் அரசுரிமை மறுக்கும் ஏகாதிபத்தியவாதக் கருத்தாக்கமன்றி வேறல்ல. ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்தியத் தேசியம் என்பது புதிய சனநாயகப் பொருளுற்பத்தி அடிப்படையிலான இந்தியத் தேசியம் பற்றிக் கூறுவதால் இது ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதமாக இருக்கிறதேயன்றி மார்க்சியமாக இல்லை. இதனுடன் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறுவது முரண்பாடானதும் மார்க்சியத்தை ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்துக்குப் பலியிடும் சந்தர்ப்பவாதமும் தானேயன்றி மார்க்சியமல்ல.

ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தை முற்றிலும் முடமாக்கிவிட்ட ஒரு கடுமையான நோய். இந்தியப் புரட்சி இயக்கத்திற்கு அது விளைவித்த கேடுகள் மிகப் பல. இந்நோயிலிருந்து மீளாதவரை இந்தியாவில் பொதுவுடைமை இயக்கம் ஒரு புரட்சி இயக்கமாக இருக்க முடியாது; சனநாயகப் புரட்சிக்கு வெற்றிகரமாகத் தலைமையளிக்கவும் முடியாது.

கடந்த எழுபதாண்டுகளுக்கும் மேலாக இ.பொ.இயக்கம் சனநாயகப்புரட்சித் திட்டத்துடன் செயல்பட்டுக்கொண்டிருந்தபோதிலும் அது இன்றுவரையிலும் வெற்றிபெற முடியாமல் போனதற்கு எத்தனை காரணங்கள் இருப்பினும் அடிப்படையான காரணம் இ.பொ. இயக்கத்தின் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதமே. இது கட்சியை மிகப்பெரும்பான்மையான தேசியஇன உழைக்கும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்திவிட்டதுடன் கம்யூனிசத்தையும், கம்யூனிஸ்டுகளையும் மக்களுக்கு அன்னியமானதாக்கிவிட்டது. கம்யூனிஸ்டுகளின் புரட்சிகர சாராம்சத்தைக் கரைத்து அவர்களை வெறும் பொருளாதாரவாதிகளாக, பாராளுமன்றவாதிகளாக, தீவிரவாதிகளாக, திரிபுவாதிகளாக, வறட்டுவாதிகளாக மாற்றிவிட்டது. இது மிகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் பாராளுமன்றவாத, சாதிவாத, மதவாத அமைப்புகள் பின்னே விட்டுவைக்கப்படுவதற்கும், தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் சிறுபான்மை மதவாத, குட்டிமுதலாளிய தீவிரவாத போக்குகளுக்குப் பலியாவதற்கும் காரணமாகிவிட்டது.

இந்தியத் தேசியம் என்கிற ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதப் பார்வை மார்க்சிய வரலாற்று ஆசிரியர்களையும் பாதித்து



அவர்களை இந்திய வரலாறு பற்றிய பார்ப்பனியக் கண்ணோட்டத்திற்குப் பலியாக்கிவிட்டது. ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவைத் தொடர்ந்து அடக்கி ஆள்வதற்காக இந்திய வரலாற்றை ஆய்வு செய்து எழுதியபோது இந்திய வரலாறு நீண்டகாலமாக இயக்கமற்று தேங்கிக்கிடப்பது, அரசியல், பொருளாதாரத் துறைகளில் பெருமை களற்றது, தேசிய உணர்வற்ற மக்களைக் கொண்டது என்று வலியுறுத்தி எழுதினார்கள். இதை எதிர்த்து இந்துப்பார்ப்பனிய-இந்தியத் தேசிய வரலாற்றாசிரியர்கள் இந்திய வரலாற்றை சித்தரிக்கும் போது, இந்துப்பார்ப்பனியம் இந்தியத் தேசியத்தின் அடிப்படையாக பழம்பெருமை வாய்ந்ததாக தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது என்று வலியுறுத்தினார்கள். மன்னர்களின் வரலாற்றைத் தொகுத்த இவர்கள் மக்கள் சமுதாய வரலாற்றைத் தொடவே இல்லை. இந்துப் பார்ப்பனியத்தின் பெருமை என்று கருதியவற்றையெல்லாம் எடுத்தோதிய இவர்கள் அதன் எதிர்மறையான, ஒடுக்குமுறை அம்சங்களையெல்லாம் மூடி மறைத்துவிட்டார்கள். இதற்கு மாறாக இந்தியப் பொதுவுடைமை இயக்கத் தோற்றத்தின் விளைவாய் உருவான மார்க்சிய வரலாற்றாசிரியர்கள் இந்தியச்சமுதாய வரலாற்றை மார்க்சிய வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். மன்னர்களின் வாழ்க்கை வரலாற்றைவிட மக்கள் சமூக வரலாற்றில் அக்கறை செலுத்தினார்கள். சமுதாய வரலாற்றில் வர்க்கங்களையும் வர்க்கப்போராட்டத்தையும் அடையாளம் காண முயன்றார்கள். இந்தியா முழுவதும் நிறைந்து கிடக்கும் வர்ண-சாதிமுறைகள், மத உறவுகள் மற்றும் முரண்பாடுகளில் உள்ள வர்க்க சாராம்சத்தை, இந்துப் பார்ப்பனியத்தின் சாதி, மத ஒடுக்குமுறையின் வர்க்க சாராம்சத்தைக் கண்டறிய முயன்றார்கள். ஆனால் அவர்களில் யாரும் இந்துப் பார்ப்பனியத்தின் மற்றொரு ஒடுக்குமுறை அம்சமான தேசிய ஒடுக்குமுறை பற்றியோ, அதன் வர்க்க சாரம் பற்றியோ அறியும் முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவே இல்லை. இந்தியாவில் வர்ணங்கள், சாதிகள், மதங்கள் இவற்றின் தோற்றம், மாற்றம், வளர்ச்சி பற்றியெல்லாம் வர்க்க உறவுகளுடன் கண்டறிய முயன்றவர்கள் தேசியச் சமூகங்கள், தேசிய இனங்கள், நவீனத்தேசங்கள், ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, அதன் வர்க்க சாரம் அதன்மீதான பார்ப்பனிய ஒடுக்குமுறைபற்றி அறியும் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இது தற்செயலானதல்ல. இ.பொ. இயக்கத்தின் இந்தியத் தேசம் என்கிற ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் இந்த வரலாற்றாசிரியர்களையும் பற்றிகொண்டதன் விளைவே இது. இந்தியாவே ஒரு தேசமானபின் இந்தியாவுக்குள் இருக்கும் பல்வேறு தேசியச் சமூகங்கள் குறித்த ஆய்வுகள் இவர்களுக்கு அர்த்தமற்றவையாகிவிட்டதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. இதன்

படிப்பகம்

www.padippkam.com



விளைவாக இவர்கள் எழுதிய இந்திய வரலாறு, இந்தியப் பார்ப்பனிய தேசிய வரலாற்றாசிரியர்கள் எழுதிய வரலாறுகளைப் போலவே பிரதானமாக சிந்து-கங்கைச் சமவெளிப் பார்ப்பனிய சமூக வரலாறாகவும் அவர்களுடைய இலக்கியங்கள் சார்ந்த வரலாறாகவும் ஆகிவிட்டது. இந்தியாவில் இருக்கும் மிகப் பெரும்பான்மையான தேசிய இன மக்களின் வரலாறுகள் பின்தள்ளப்பட்டுவிட்டன. அல்லது பார்ப்பனிய வரலாற்றுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டன. இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு எழுதிய இந்திய வரலாறு இதற்கு ஒரு உதாரணம். இதில் சாதி, வர்ணம், வர்க்கம், மதங்கள், பேரரசுகள், ஆரிய, திராவிட இனங்கள் இன்னும் இவை போன்ற பல விவாதத்திற்குட்படுத்தப் பட்டிருப்பினும் தேசிய இனங்கள், நவீனத் தேசங்கள் பற்றிய பிரச்சினை அந்நூலில் இடம்பெறவே இல்லை.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் மற்றும் மார்க்சிய அறிஞர்களின் பார்வையில் இப்பிரச்சினை இடம் பெறாததற்குக் காரணம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் அவர்களுக்குத் தேசம் பற்றிய பார்ப்பனியப் பார்வையை வழங்கிவிட்டது என்பதன்றி வேறல்ல.

ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் இந்திய வரலாறு பற்றிய பார்வையை பார்ப்பனியத்துக்குப் பலியாக்கி விட்டது மட்டுமல்ல அதன் விளைவாக மார்க்சியத்துடன் பெரியார், அம்பேத்கார் கருத்துகளை ஒட்டுப்போட்டு இந்திய நிலைமைகளுக்குப் பொருத்தமான புரட்சிகரமான சித்தாந்தத்தை உருவாக்க வேண்டும் என்கிற கலவைவாத சித்தாந்தப் போக்குகளுக்கும், மார்க்சியத்தின் போதாமை பற்றிப் புலம்பும் போலி அறிவாளிகளின் தோற்றத்திற்கும் காரணமாயிருக்கிறது.

ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்தால் இ.பொ.க.(மா-லெ) குழுக்கள் மீள முடியாத சந்தர்ப்பவாத சகதிக்குள் சிக்கிக் கொண்டுள்ளன. இந்தியத் தேசியம் என்ற கருத்திலிருந்து மீளாமலே, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து மார்க்சியத்தை ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்திற்குப் பலியிடும் இ.பொ.க.(மா-லெ)யின் சந்தர்ப்பவாதம் இ.பொ.க.(மா-லெ) குழுக்களை கடும் நெருக்கடியில் சிக்கவைத்திருக்கிறது.

"முன்னோடி" குழுவினர் சுயநிர்ணய உரிமை என்ற முழக்கத்திற்குப் பதிலாக சுதந்திரத் தமிழ்நாடு என்ற முழக்கத்தை முன்வைத்திருக்கிறார்கள். புரட்சிக்குப்பின் ஒவ்வொரு தேசியஇனமும் தனித்தனிக் குடியரசுகளாக அமைந்து அவற்றின் விருப்பப்பூர்வ அடிப்படையில் இந்திய மக்கள் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்படும் என்கிறார்கள். ஏதோ புதிதாகக் கூறுவது போல் தோன்றினாலும் இது புதிய மொந்தையில் பழைய கள் தான். இது ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்திலிருந்து அவர்களை மீட்கவில்லை. மாறாக அதில் அவர்கள் எவ்வளவு உறுதியாக ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையே நிரூபிக்கிறது.



புரட்சிக்குப் பின் சுதந்திரக் குடியரசுகள் அமையும் என்றும் அவற்றின் விருப்பப்பூர்வ அடிப்படையில் இந்திய மக்கள் குடியரசுகளின் ஒன்றியம் அமையும் என்றும் கூறுகிறார்கள். புரட்சி இன்னும் முடியவில்லை; சுதந்திரக் குடியரசுகள் இன்னும் அமையவில்லை. அவற்றின் விருப்பம் நிச்சயமாக இன்னும் அறியப்படவில்லை. ஆனால் அவை இணைந்து குடியரசுகளின் ஒன்றியம் அமைக்கும் என்றும், அது இந்திய மக்கள் குடியரசுகளின் ஒன்றியமாகத்தான் இருக்கும் என்றும் வேலைத்திட்டத்தில் வரையறுத்து விடுகிறார்கள் "முன்னோடி" குழுவினர்.

சுதந்திரக் குடியரசுகள் பற்றி உறுதிமொழியளித்துவிட்டு, எதேச்சதிகாரமான முறையில் முன்கூட்டியே அவற்றின் விருப்பம் அறியாமலேயே அவை இணைந்திருக்க வேண்டிய ஒன்றிய அரசு பற்றியும் அவற்றின் எல்லைபற்றியும் முடிவுசெய்து திட்டம் வைப்பது தான் புதிய சனநாயகமா? அல்ல. மாறாக ஏகாதிபத்தியவாதமே. இதை அவர்கள் உணரமுடியாமல் தடுப்பது இ.பொ.க.(மா-லெ)யின் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதமேயாகும்.

அடுத்து "சமரன்" குழுவினர் ஈழத்தில் தேசிய விடுதலையை ஆதரிக்கும் அதே நேரத்தில் தமிழகத்தில் இந்தியப் புதிய சனநாயகப் புரட்சித் திட்டம்தான் சரியானது என்கிறார்கள். அதாவது தேசிய ஒடுக்குமுறை சகித்துக்கொள்ள முடியாததாகும் போதுதான் தேசிய விடுதலை என்பது சரியானதாகும் என்கிறார்கள். இவர்களுடைய கருத்துப்படி தேசிய அரசுரிமை மறுக்கப்பட்டிருப்பது, இந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்பட்டிருப்பது ஆகிய இவை எல்லாம் சகித்துக் கொள்ளக்கூடிய தேசிய ஒடுக்குமுறைகள். இ.பொ.க.(மா-லெ)யின் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம் இவர்களை காலனியக் கொள்கையின் ஆதரவாளர்களாக மாற்றிவிட்டதுதான் மிச்சம்.

பு.ஜ. குழுவினர் இப்படிப்பட்ட விளக்கங்கள் கொடுத்து மாட்டிக்கொள்ள விரும்புவதில்லை. அவர்களைப் பொருத்தவரை

படிப்பகம்

www.padippkam.com



இந்தியப் புதிய சனநாயகப் புரட்சித் திட்டம் தான் சரியானது என்று இம்மிபிசகாமல் அப்படியே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தாலே போதுமானது என்று கருதக்கூடிய மிகத் தூய்மையான ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகள். ஒருபுறம் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்த தீர்மானத்தை ஆதரித்துக்கொண்டே இன்னொருபுறம் இந்தியத் "தேசியத்திட்டம்" நிறைவேற்றுவது பற்றியோ, இந்தியத் "தேசியப்புரட்சி" குறித்து ஆவணங்கள் நிறைவேற்றுவது பற்றியோ அவர்கள் சிந்தனையில்கூட சிறு நெருடல் ஏற்படுவதில்லை.

இ.பொ.க (மா-லெ) குழுக்களின் ஊறிப்போன இந்த ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதம், இந்தியாவில் சுற்றிச் சுற்றி வரும் சாதி, மத, இன முரண்பாடுகளைக் கையாளும் தகுதியற்றவர்கள் கம்யூனிஸ்டுகள், நிறைவற்றது மார்க்சியம் என்ற கருத்தைப் பரவலாக ஏற்படுத்தியிருப்பதுடன் இக்குழுக்களை தேசியச்சூனியவாத அமைப்பு களாகவும் தத்துவ வறட்சியால் பாதிக்கப்பட்ட அமைப்புகளாகவும் மாற்றியுள்ளது. இதனால் இக்குழுக்கள் மீளமுடியாத குறுங்குழு வாதத்திலும், அனுபவவாதத்திலும், சந்தர்ப்பவாதத்திலும் சிக்கிக் கொண்டுள்ளன.

## 7

## அம்பேத்கார் மற்றும் பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பும் தேசிய விடுதலைப் புரட்சியும்

இந்திய வரலாற்றில் டாக்டர் அம்பேத்காரைப் போல பார்ப்பனியத்தின் வர்ண-சாதி ஒடுக்குமுறையை அம்பலப்படுத்தி எதிர்த்துப் போராடிய வேறு ஒருவரைக் காண்பது அரிது. இந்துமதத் திற்கும், பார்ப்பனியத்திற்கும், வர்ண-சாதிமுறைக்கும் பாதுகாவலாக விளங்கிய காந்தியையும், காங்கிரசையும் கூட அவரைப்போல் வேறு யாரும் அம்பலப்படுத்தி இருக்கமுடியாது.

அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். வர்ண-சாதிமுறை ஒழிந்த, சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் கொண்ட சனநாயக சமுதாயம் தான் தனது இலட்சியம் என்று பிரகடனப்படுத்தியவர். வர்ண-சாதிமுறையே இந்துமதம் என்று அடையாளம் காட்டிய அவர், இந்தியாவில் நிலவிவரும் சாதியக் கொடுமைகளையும், தீண்டாமை யையும் ஒழித்துக்கட்ட சாதி மதமான இந்துமதத்தை-சாதியின்



மறுவடிவமான பார்ப்பனியத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று தீர்க்கமாக முன்வைத்தார். அதற்காக இந்துமதத்தைக் கற்றுத் தருகிற வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தர்மசாத்திரங்கள் முதலான இந்துமதச் சாத்திர நூல்களின் புனிதத்தன்மையையும் தெய்வீகத் தன்மையையும் நிராகரிக்கவேண்டும் என்றார். இந்துமத இலக்கியங் களை அம்பலப்படுத்தி நிறைய எழுதினார். அதே நேரத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக இட ஒதுக்கீட்டுக் கொள்கையை முன்வைத்துப் போராடினார்.

இட ஒதுக்கீட்டுக் கொள்கையினால் தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு சிறுபகுதியினர் மிகப் பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்ட மேல்தட்டு வர்க்க சமூகப் பிரிவினராக மாறியிருக்கிறார்கள். இக்கொள்கையால் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த நிலைமையில் மாற்றம்-முன்னேற்றம் எதுவும் நிகழவில்லை. சாதியக் கொடுமைகள் இன்றளவும் மறையவில்லை.

அம்பேத்கார் வழியின் இத்தோல்விக்குக் காரணம் என்ன? இந்துப் பார்ப்பனிய ஒடுக்குமுறை இரண்டு முகங்களைக் கொண்டி ருக்கிறது. முதலாவது வர்ண-சாதி ஒடுக்குமுறை; இரண்டாவது தேசிய ஒடுக்குமுறை. அம்பேத்கார் பார்ப்பனியத்தின் வர்ண-சாதி ஒடுக்கு முறை முகத்தை அடையாளம் கண்டு அம்பலப்படுத்தினார், ஆனால் அதன் தேசிய ஒடுக்குமுறை முகத்தை அடையாளம் காணத் தவறிவிட்டார் என்பதிலேயே அவருடைய தோல்விக்கான காரணம் அடங்கியிருக்கிறது.

பார்ப்பனியம் உழைக்கும் மக்களைத் தொடக்கத்திலிருந்தே சூத்திரர்கள், சண்டாளர்கள் என்று இழிவுபடுத்தி வர்ணங்களாகவும் சாதிகளாகவும் பிரித்து அடக்கிஒடுக்கி வந்திருக்கிறது. அதன் சாதியப் பிரிவினை மக்கள் வர்க்கங்களாக இணைவதற்குத் தடையாக-இதனால் சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்து வந்திருக்கிறது. அதே நேரத்தில் அது உழைக்கும் மக்களின் மொழிகளைச் சூத்திர பாசை என்றும் நீசபாசை என்றும் இழிவுபடுத்தி அம்மொழிகளில் கலை, இலக்கியங்கள் வளராமல் தடுத்து வந்துள்ளதுடன் பார்ப்பனிய மொழியான சமக்கிருத மொழியை அரசு மொழியாகவும், வழிபாட்டு மொழியாகவும், இலக்கிய மொழியாகவும் திணித்து வந்துள்ளது. இதனால் மக்கள்மொழியும் ஆதிக்க மொழியும் தொடர்ந்து வெவ்வேறாகி மக்கள் தேசிய இனரீதியில் ஒன்றுபட்டு வளர்வதற்குத் தடையாக இருந்துவந்துள்ளது. அது இன்று வரையிலும் நீடிக்கிறது.

படிப்பகம்

www.padippkam.com



சமக்கிருதமயமாக்கப்பட்ட இந்திமொழியை ஆதிக்க மொழியாக்கி இருப்பதிலும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்திருப்பதிலும் பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறையின் தொடர்ச்சி உண்டு.

ஆனால் பார்ப்பனியத்தின் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக நின்ற அம்பேத்கார், பார்ப்பனியத்தின் இந்தத் தேசிய ஒடுக்குமுறை களுக்கு ஆதரவாளராக இருந்தார். இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக இந்தி மட்டுமே இருக்க வேண்டும் என்று தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளைப் போலவே அவரும் வலியுறுத்தினார். இந்தியா முழுவதும் ஒரே தேசம்-அது சாதி வேறுபாடற்றதாக சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் கொண்ட சனநாயக சமுதாயமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

மொழிவழி மாநிலம் குறித்த விவாதத்தின் போது அவர் கூறினார்: "சனநாயகத்திற்கான பாதையை எளிமைப்படுத்துவது, கலாச்சார இனமோதல்களை அகற்றுவது ஆகிய இருகாரணங்களுக் காக நாம் மொழிவழி மாநில அமைப்புகளை விரும்புகிறோம்..... மொழிவழி மாநிலத்தின் சாதகமான அம்சங்களைச் சொல்லும்போதே அதன் அபாயத்தையும் நான் சொல்ல வேண்டும். ஒரு மொழிவழி மாநிலம் அதன் சொந்த மொழியை ஆட்சிமொழியாகக் கொண்டி ருக்குமானால் அது எளிமையாக ஒரு சுதந்திரமான தேசிய இனமாக வளர்ந்துவிடும். சுதந்திரமான தேசிய இனத்திற்கும், சுதந்திரமான அரசுக்கும் இடைவெளி மிகக் குறுகியது. அவ்வாறு நிகழுமானால் இந்தியா நவீன இந்தியாவாக மாறாது. மாறாக மத்தியகாலத்தைப்போல மோதலும் பகையும் கொண்ட பல அரசுகளின் இந்தியாவாகிவிடும். இந்த அபாயத்தைத் தவிர்ப்பது எப்படி? இதற்கு ஒரே வழி பிரதேச மொழிகள் மாநிலங்களின் ஆட்சிமொழிகளாகலாம் என்று அரசியல் சட்டம் அனுமதிக்கக் கூடாது. மாநிலங்களின் ஆட்சிமொழியாக இந்தி மட்டுமே இருக்கலாம். இதை இந்தியர்கள் ஒப்புக்கொள்ளவில்லை எனில் மொழிவழி மாநிலங்கள் என்பது எளிதில் ஆபத்துக்குள்ளாகி விடும்."

"ஒருமொழி மக்களை இணைக்கும்; இரண்டு மொழிகள் நிச்சயமாகப் பிளவுபடுத்தும். இது ஒரு தவிர்க்கமுடியாத விதி. கலாச்சாரம் மொழியால் பாதுகாக்கப்படுகிறது. இந்தியர்கள் ஒரு பொதுக் கலாச்சாரத்தில் இணைந்து அதை வளர்க்க விரும்பினால் எல்லா இந்தியர்களும் இந்தியைத் தமது சொந்த மொழியாக ஏற்றுக் கொள்வது அவர்களது கடமையாகும். எந்த ஒரு இந்தியனும் இந்த ஆலோசனையை மொழிவழி மாநிலத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ள மறுத்தால் அவன் இந்தியனாக இருப்பதற்கு உரிமையற்ற வனாவான். அவன் நூறு விழுக்காடு மராத்தியனாகவோ, குசராத்திய னாகவோ, தமிழனாகவோ இருக்கலாம். ஆனால் நில எல்லைகளின் அர்த்தத்திலன்றி உண்மையான அர்த்தத்தில் அவன் ஒரு இந்தியனாக இருக்க முடியாது." (vol.1 Page 145-6)



பல்வேறு தேசிய இனங்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டு அவற்றின் கலாச்சாரம் ஒழிக்கப்பட்டு இந்திமொழியால் உருவாகும் ஒரே கலாச்சாரத்தில் ஒரு நவீன இந்தியா உருவாக வேண்டும் என்று அம்பேத்கார் விரும்புகிறார். இதுதான் தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளின் விருப்பம்கூட. வர்ண-சாதிமுறைக்கு ஆதரவாய் இருந்த காந்தியை எதிர்த்தபோது பனியா-பார்ப்பனக் (தரகு முதலாளித்துவ-பார்ப்பனிய) கூட்டை அம்பலப்படுத்தி எதிர்த்த அம்பேத்கார் தேசிய ஒடுக்குமுறை மூலம் நவீன இந்தியாவை உருவாக்கும் கொள்கையில் அவர்களுடன் இணைந்து நிற்கிறார். இது தேசிய இனங்களின் சனநாயக உரிமைகளுக்கு எதிரானது மட்டுமல்ல, அவர் விரும்பிய சனநாயகச் சமுதாயத்திற்கேகூட எதிரானது.

ஒரு சனநாயக சமுதாயம் உருவாவது ஒரு தேசிய இனம் தேசிய அரசுரிமை பெறுவதுடன்-நவீனத் தேசமாக உருவாவதுடன் இணைந்துள்ளது. தேசிய ஒடுக்குமுறைக் கொள்கையுடன் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இணைத்துவிடுவதால் ஒரு சனநாயகச் சமுதாயத்தை அமைத்துவிட முடியாது. அம்பேத்காரின் தோல்வி இந்த உண்மையைத்தான் உணர்த்த வேண்டும்.

அம்பேத்காருக்கு சற்று மாறுபட்ட அம்சங்களைக் கொண்டி ருந்தது பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பு. அவர் பார்ப்பனியத்தின் வர்ண-சாதி-ஒடுக்குமுறையை எதிர்த்தார். அதற்குக் காரணம் பார்ப்பனியமும், இந்துமதமுமே என்பதை அம்பலப்படுத்தினார். சாதியை ஒழிப்பதற்கு இந்துமதத்தை ஒழிக்கவேண்டும் என்றார். அதற்குப் புனிதத் தன்மையை-தெய்வீகத் தன்மையை வழங்கும் இந்து வேதங்கள், புராணங்கள், இதிகாசங்களை அம்பலப்படுத்தி அவற்றின் அதிகாரத்தை நிராகரித்தார். இந்துக் கடவுள்கள், நிறுவனங்களை அம்பலப்படுத்தினார். கூடவே ஒடுக்கப்பட்ட சாதியினரின் முன்னேற்றத்திற்காக அம்பேத்காரைப் போலவே இட ஒதுக்கீட்டுக்குப் போராடினார்.

படிப்பகம்

www.padippkam.com



ஆனால் பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பு இந்த அளவில் மட்டும் வர்ண, சாதி ஒடுக்குமுறைக்கு எதிரானதாக மட்டும் நிற்கவில்லை. அவர் பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறையையும் உணர்ந்திருந்தார். இதன் காரணமாக அவர் சமக்கிருத-இந்தி ஆதிக்கத்தையும், இந்தியத் தேசம் என்ற கருத்தையும் எதிர்த்தார். இந்தியத் தேசம் என்பது பார்ப்பனியத் தேசமே என்று அம்பலப் படுத்திய அவர் அதன் ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்ட தனிநாடு பெறவேண்டும் என்று முழங்கினார். இது பெரியாரை அம்பேத்காரிட மிருந்து வேறுபடுத்தும் சிறப்பம்சமாகும்.

பெரியார் பார்ப்பனிய ஒடுக்குமுறையின் இரண்டு முகங் களையும் – வர்ண-சாதி ஒடுக்குமுறையையும், தேசிய ஒடுக்குமுறை யையும்–உணர்ந்திருந்தார், அம்பலப்படுத்தினார், எதிர்த்தார். எனினும் அவர் தன்னை ஒரு சனநாயகப் புரட்சியாளராகவோ, தேசிய விடுதலைப் போராளியாகவோ, அமைத்துக் கொள்ளவில்லை. ஒரு சமூகச் சீர்திருத்தவாதியாகவே அதற்கான அமைப்பு-இயக்க நடை முறைகளைக் கொண்டவராகவே நிறுத்திக்கொண்டார் (இது ஒரு சமரசமே) என்பதில்தான் அவருடைய பலவீனம் அடங்கியிருக்கிறது.

பார்ப்பனியத்தின் வர்ண-சாதிமுறையை எதிர்த்த பெரியார் நடைமுறையில் இட ஒதுக்கீட்டுக்காகப் போராடுவது, இந்துமத இலக்கியங்கள், நிறுவனங்களை அம்பலப்படுத்துவது என்கிற அம்பேத்கார் முன்வைத்த அதே சீர்திருத்த வழிமுறைகளையே பின் பற்றினார். பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறையை எதிர்ப்பதில் தனிநாடு கோரிக்கையை அவர் முன்வைத்தபோதிலும் அதை ஒரு தெளிவான தேசியக் கோரிக்கையாக முன்வைப்பதில் (திராவிட நாடா, தமிழ்நாடா என்பதில்) குழப்பமுடையவராகவே இருந்தார். மேலும் அந்தக் கோரிக்கையை அடைவதற்கான தொடர்ச்சியான அமைப்பு, இயக்க நடைமுறை கொண்டவராகவும் இல்லை. இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் போராட்டம்கூட அது ஆட்சிமொழியிலிருந்து அகற்றப் படும் வரையிலான போராட்டமாக அவரால் முன்னெடுத்துச் செல்லப் படவில்லை.

பார்ப்பனியத்தின் வர்ண-சாதி ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை ஆகிய இரண்டு கூறுகளில் வர்ண-சாதி ஒடுக்கு முறையை எதிர்த்த அம்பேத்கார் தேசிய ஒடுக்குமுறையில் அதனுடன் இணைந்துகொண்டுவிட்டார். இரண்டு ஒடுக்குமுறை களையும் எதிர்த்த பெரியார் ஒரு தேசிய விடுதலைப் போராளி யாகவோ, சனநாயகப் புரட்சியாளராகவோ இல்லை. ஆனால், தரகு



முதலாளிய-பார்ப்பனியத்தை வீழ்த்தும் போராட்டத்தின் வெற்றிக்கு ஒருவர் பார்ப்பனியத்தின் இரண்டு ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான சனநாயகப் புரட்சியாளனாகவும் தேசிய விடுதலைப் போராளியாகவும் இருப்பது அவசியமாகும்.

## 8

## 'தன்னுரிமை' முழக்கம் : சட்டவாதமும், சந்தர்ப்பவாதமும்

இன்று தேசியத் தன்னுரிமை-சுயநிர்ணய உரிமை-முழக்கம் பலராலும் பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது. இது தேசிய இனங்களின் சனநாயக உரிமைபற்றிய விசயமாகும்; ஒரு பல்தேசிய அரசிலிருந்து ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம் பிரிந்து தனது சொந்தத் தேசிய அரசை அமைத்துக் கொள்வதற்கான உரிமைபற்றிய விசயமாகும்.

இந்த உரிமை இருவகைச் சாத்தியப்பாடுகளைக் கொண்டிருக் கிறது. முதலாவது ஒரு தேசியஇனம் அந்தப் பல்தேசிய அரசிலிருந்து பிரிந்து தனியான தேசியஅரசு அமைத்துக் கொள்வது; இரண்டாவது, அந்த உரிமையுடன் சமத்துவ அடிப்படையில் பிற தேசிய இனங் களுடன் ஒரு கூட்டரசில் நீடிப்பது.

ஒரு பல்தேசிய இன நாட்டில் ஒடுக்கும் தேசிய இனத்தில் பலம்வாய்ந்த, புரட்சிக்குத் தலைமை தாங்குகின்ற புரட்சி இயக்கம் இருக்கும் போது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை-தன்னுரிமை-என்பது அந்நாட்டிற்கான புரட்சிகர சனநாயகத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். இத்திட்டம் சமத்துவ அடிப்படையிலான ஒரு கூட்டரசுக்கான திட்டம் ஆகும்.

இவ்வாறன்றி ஒடுக்கும் தேசிய இனத்தில் பலம்வாய்ந்த புரட்சி இயக்கமோ அல்லது ஒடுக்கும் தேசிய இனமோகூட இல்லா திருக்கும் நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தன்னுரிமை என்பது தேசியவிடுதலைத் திட்டமாகவன்றி வேறாக இருக்கமுடியாது.

இந்தியாவின் நிலைமை என்ன? இங்கு ஒடுக்கும் தேசிய இனமோ, அதில் பலம்வாய்ந்த புரட்சி இயக்கமோ இல்லை. இந்நிலையில் ஒடுக்கப்படும் தேசியஇனங்களின் சுயநிர்ணய உரிமை-தன்னுரிமை-என்பது தேசிய விடுதலைத் திட்டமன்றி வேறில்லை.

படிப்பகம்

www.padippkam.com



ஆனால் தன்னுரிமை முழக்கத்தை முன்வைப்பவர்கள் தேசிய விடுதலைக்கு மாற்றாகவே இதை முன்வைக்கிறார்கள். அதே நேரத்தில் ஒருபுரட்சிகர சனநாயகக் கூட்டரசுத் திட்டத்தின் ஒரு பகுதியாகவும் அது இல்லை. இந்திய நிலைமைகளில் அப்படி வைப்பதும் ஏகாதிபத்தியப் பொருளாதார வாதமேயன்றி மார்க்சியமோ, புரட்சியோ அல்ல. இ.பொ.க(மா-லெ) இப்படிப்பட்ட ஏகாதிபத்தியப் பொருளாதாரவாத அமைப்பாகவே இருக்கிறது.

இந்நிலையில் இந்திய நிலைமையில் தன்னுரிமை என்ற முழக்கத்தைத் தனியாக ஓங்கி ஒலிப்பதன் பொருள் என்ன? அது, இன்றைய இந்திய அரசியல் சட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று ஆளும் வர்க்கங்களைக் கோருவதன்றி வேறல்ல. இது வெறும் சட்டவாதமே! பா.ம.கட்சி போன்றவை இதை வெளிப் படையாகவே ஒப்புக்கொள்கின்றன. மற்றவர்கள் அவ்வப்போது தாம் இந்திய ஒருமைப்பாட்டை எதிர்ப்பவர்கள் அல்ல என்றும், பிரிவினையை ஆதரிப்பவர்கள் அல்ல என்றும் கூறி ஒப்புக்கொள் கின்றனர். எனினும், சிலர் தன்னுரிமை என்னும் சட்டவாத முழக்கத்தைத் தேசிய விடுதலையுடனும், புரட்சியின் கட்டத்துடனும் இணைத்துக் காட்ட விரும்புகிறார்கள்.

எவ்வாறாயினும் இவை எல்லாம் முற்றிலும் சந்தர்ப்ப வாதமாகும். இந்திய அரசு மற்றும் ஆளும் வர்க்கங்கள்பற்றி பொய்மையான மதிப்பீடுகளைப் பரப்புவதும் மக்களைத் தவறாக வழிநடத்துவதும் ஆகும்.

## 9
## தேசிய விடுதலைப் புரட்சியில் சாதி, மத பிரச்சினைகளும் வர்க்கப் போராட்டமும்

தேசிய விடுதலைப் புரட்சி என்பது ஒரு வர்க்கப் புரட்சி. அது இருநோக்கங்களைக் கொண்டிருக்கிறது. முதலாவது தேசிய அரசு அமைப்பது; இரண்டாவது சனநாயகப்புரட்சியை நிறைவு செய்வது. இது ஏகாதிபத்தியம், தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றை வீழ்த்தும் ஒரு மக்கள் புரட்சியின் மூலமே நிறைவு செய்யப்பட முடியும். இதற்குப்



பிரதானமாக தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களையும் அணிதிரட்டுவது அவசியமாகும்.

ஆனால் உழைக்கும் மக்கள் சாதி, மதப்பிரிவுகளுக்குக் குறிப்பாகச் சாதியஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் அவர்களைத் தேசிய விடுதலைப் புரட்சிக்கு அணி திரட்டுவது எப்படி?

இது சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திற்கும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்திற்கும் இடையிலான உறவு பற்றிய கேள்வியாகும்.

தேசிய விடுதலை என்பது மற்றெல்லோரையும்விட முக்கியமாக உழைக்கும் மக்களின் கோரிக்கை-தேசியக்கோரிக்கைகள் அனைத்தும் பிரதானமாக உழைக்கும் மக்களின் கோரிக்கைகளே. எனவே இக்கோரிக்கைகள் உழைக்கும் மக்களை அவர்களுடைய சாதி வேறுபாடுகளுக்கும் மேலாக ஒன்றுபடுத்தக் கூடியவையாகும். இது சாதியாதிக்கத்துக்கு எதிரான அவர்களுடைய ஒற்றுமையைப் பலப்படுத்தக்கூடியதும், சாதியாதிக்கச் சக்திகளை பலவீனப்படுத்தக் கூடியதும் ஆகும்.

உதாரணமாக ஆங்கிலம், இந்தி போன்ற அன்னிய மொழி ஆதிக்கங்களால் வேறு எவரையும்விட அதிகம் பாதிக்கப்படுகின்ற வர்கள் ஏழ்மையில் உழலும் உழைக்கும் மக்களே. அரசு மொழி யாகவும், அலுவலக மொழியாகவும், கல்வி மொழியாகவும் அன்னிய மொழிகள் விளங்குவதால் தாய் மொழி மட்டுமே அறிந்த உழைக்கும் மக்கள் இழிவு படுத்தப்படுகிறார்கள், அவமானப் படுத்தப்படுகிறார்கள், தாழ்வு மனப்பான்மைக்கும் அடிமைத் தனத்திற்கும் உள்ளாக்கப்படு கிறார்கள். சமுதாயத்தில் இரண்டாம்தர குடிமக்களாக நடத்தப்படு கிறார்கள். மற்ற வர்க்கங்களைப்போல ஆதிக்க மொழிகளைக் கற்று ஆதிக்க வர்க்கங்களின் நிறுவனங்களில் அங்கம் பெறும் வாய்ப்பு எதுவும் இவர்களுக்கு இல்லை என்பதால் தாய்மொழியின் ஆட்சி யுரிமை (இது தேசிய அரசு அமைத்தாலன்றி சாத்தியமில்லை) மற்ற எவரையும்விட உழைக்கும் மக்களுக்கே முதல் தேவையாகும். இது உழைக்கும் மக்களுக்கிடையிலான சாதி, மத வேறுபாட்டை இரண்டாம் நிலைக்குத் தள்ளி தேசிய அளவிலான ஒற்றுமையை முதன்மை நிலைக்குக் கொண்டுவருவதுடன் தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளையும் அவற்றால் பயன்பெறும் அவற்றின்

படிப்பகம்

www.padippkam.com



ஆதரவு, சார்பு சக்திகளையும் இதற்கு எதிர்நிலைக்கு கொண்டுவந்துவிடுகிறது.

மத ஒடுக்குமுறை என்பது சிறுபான்மை மதப் பிரிவினரின் மீதான இந்துமதவாதிகளின் ஒடுக்குமுறையே. இது இந்துமத வாதிகளின் இந்தியத் தேசிய- தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்திய ஒடுக்கு முறையேயன்றி வேறல்ல. எனவே சிறுபான்மை மதத்தினரின் மத உரிமை, வழிபாட்டுரிமைப் பிரச்சினை தரகு முதலாளிய-பார்ப்பனிய இந்திய ஏகாதிபத்தியத்திற்கெதிரான தேசிய விடுதலைப் போராட்டங்களுடன் இணைக்கப்படும்போது மட்டுமே தீர்க்கப்பட முடியும். இந்தியத் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் இருக்கும்வரை சிறுபான்மை மதத்தினரின் உரிமைக்குப் பாதுகாப்பு இல்லை. அதன் அழிவு தேசியவிடுதலைப் புரட்சியுடன் இணைந்திருப்பதால் சிறுபான்மை மதப்பிரிவினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதும், அதாவது அவர்கள் மத ஒடுக்கு முறையில் இருந்து விடுபடுவதும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றியைச் சார்ந்தே இருக்கிறது. ஆனால் சிறுபான்மை மதத் திலிருக்கும் தரகுசக்திகள் இந்திய ஒருமைப்பாட்டிற்காக இந்துத்தரகு சக்திகளுடன் சமரசம் செய்யவே முயலும்.

எனவே, மதஅடிப்படையிலான முரண்பாடுகளில்கூட தேசியக் கோரிக்கைகள் மதவேறுபாடற்ற முறையில் உழைக்கும் மக்களை தேசிய விடுதலை முகாமிலும், மத வேறுபாடற்ற முறையில் இந்திய ஒருமைப்பாட்டை விரும்பும் தரகு சக்திகளை எதிர்முகாமிலும் அணிதிரளச் செய்துவிடுகிறது.

இவ்வாறு தேசிய விடுதலை மற்றும் அதனோடு இணைந்த அனைத்து தேசியக் கோரிக்கைகளும் சாதி, மத, வேறுபாடற்ற முறையில் மக்களையும், எதிரிகளையும் வர்க்க ரீதியில் இருமுகாம் களாக்கி வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் இணைப்புக் கண்ணியாக விளங்குகின்றன என்பது தெளிவாகும்.

இதற்கு மாறாக சாதி, மத ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை முதன்மைப்படுத்துவது அல்லது தேசிய ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு சமப்படுத்துவது, அக்கம் பக்கமாக வைப்பது என்ற கொள்கை உழைக்கும் மக்களைச் சாதி, மத ரீதியில் பிளவுபடுத்துகின்ற. இதனால் இவர்களின் வர்க்க ஒற்றுமைக்கும் தேசிய ஒற்றுமைக்கும் தீங்கு விளைவித்து எதிரி வர்க்க முகாமுக்கு உதவுகின்ற கொள்கையாகவே அமையும்.

---



**'இந்தியாவில் தேசியப் பிரச்சினையும் சனநாயகப் புரட்சியும்' கட்டுரைக்கான ஆதார நூல்கள், இதழ்கள்.**


1) Indian Tribes through the Ages –R.C. Varma
2) The Gazetteer of India vol. I (1973)
3) Caste System in India-Myth and Reality –R.Sangeetha Rao
4) Discovery of India –Nehru
5) National Question in India CPI Documents 1942-47 – Odyssey
6) Documents of the History of the Communist Party of India vol. VII, VIII
7) Economic and Political Weekly June, 9, 1990
8) மலர்க மாநில சுயாட்சி –கே. எஸ். ஆனந்தம்
9) History of Medieval India –V.D. Mahajan.
10) A Social and Economic Atlas of India –Oxford 1987
11) வரலாறும் வக்கிரங்களும் –ரொமிலா தாப்பர்
12) A History of India – Romila Thapar
13) Ancient Indian Social history – Romila Thapar
14) பழங்கால இந்தியாவில் அரசியல் கொள்கைகள் நிலையங்கள்- சில தோற்றங்கள் –ஆர். எஸ். சர்மா
15) Economic and Political Weekly March, 4, 1989
16) கண்ணோட்டம், அக். 1992
17) பழங்கால இந்தியா அதன் நாகரிகமும் பண்பாடும் பற்றிய வரலாறு - டி.டி. கோசாம்பி
18) இந்தியாவில் சாதிகள் –அம்பேத்கார்
19) சாதி ஒழிப்பு –அம்பேத்கார்
20) Nationality Question of India –Seminar papers, APRSU, July 1982
21) பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள் (தொகுப்பு 1, 2, 3)


படிப்பகம்

www.padippkam.com



# தமிழ்த் தேசத் தன்னுரிமை புரட்சியா? புரட்டலா?

சமீபத்தில் தமிழர் தேசிய இயக்கம், த. தே. பொ. க., திலீபன் மன்றம் ஆகிய அமைப்புகள் இணைந்து தமிழ்த்தேசத் தன்னுரிமை முன்னணியின் 'கொள்கைப்பட்டயம்' ஒன்றை வெளியிட்டிருக்கின்றன.

"தமிழ்த் தேசிய இனம் தனது அரசியல் பொருளாதார, பண்பாட்டு வாழ்வியலைத் தானே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை– அதாவது தன்னுரிமை பெறவேண்டும்" எனக் கூறும் அப்பட்டயம் தமிழக அரசுக்கு என்னென்ன உரிமைகள், அதிகாரங்கள், அரசியல், பொருளாதார, பண்பாட்டுத்துறைகளில் வழங்கப்படவேண்டும் என பின்வருமாறு பட்டியலிடுகிறது:

- தமிழ்நாட்டிற்குள் குடியுரிமை வழங்கும் அதிகாரம் தமிழக அரசிடமே இருக்க வேண்டும். தமிழகத்தின் எல்லைகளைத் தீர்மானிப்பதில் தமிழக அரசின் ஒப்புதலை கட்டாயமாக்க வேண்டும்.
- தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக வேண்டும். தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் தமிழே பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், நீதி மொழியாகவும் விளங்க வேண்டும்.
- தொழில், வணிகத் துறைகளின் முழுமையான அதிகாரங்கள் தமிழ்நாடு அரசுக்கு வேண்டும்.
- அனைத்து வரிகளையும் விதித்து திரட்டும் அதிகாரம் தமிழக அரசுக்கே வேண்டும்.
- தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், திரைப்படத் தணிக்கை துறை அதிகாரங்கள் அனைத்தும் தமிழக அரசுக்கு வேண்டும்.
- தமிழகத்தில் உள்ள இந்திய அரசு அலுவலகங்கள், தொழிற்நிலையங்கள், நிதிநிறுவனங்களில். தமிழ் மக்களுக்கே முன்னுரிமை வேண்டும். தில்லியில் உள்ள இந்திய அரசு அலுவலகங்களில் தமிழ்நாட்டு மக்கள் தொகைக்கு ஏற்ப தமிழர்கள் நியமிக்கப்பட வேண்டும்



- தமிழக ஆட்சியிலும், அன்றாட நிர்வாகத்திலும் இந்திய அரசு தலையிடவோ, அரசியல் உரிமையைப் பறிக்கவோ கூடாது.

என்றிவ்வாறு பட்டியலிடும் பட்டயம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் தமிழ்த் தேசிய இனத்தின் 'அடிமை முறி' என்றும் அதற்கு உட்பட்டோ அதில் சில திருத்தங்கள் செய்தோ தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்றும் கூறுகிறது.

சாராம்சமாகக் கூறுவதெனில் இந்திய அரசியல் அமைப்பில் தமிழக அரசு ஒரு தன்னுரிமை பெற்ற அரசாக இருக்கவேண்டும். அதற்கேற்ப ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வரையப்பட வேண்டும் என்பதே கொள்கைப் பட்டயத்தின் கருத்தாகும்.

ஆனால் இந்தப் பட்டயம் புதிய இந்திய அரசியல் அமைப்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று எதுவும் கூறவில்லை. பிப். 25, 1990இல் நடைபெற்ற தமிழ்த்தேசிய தன்னுரிமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், ஏப். 20, 1991இல் தஞ்சை மாநாட்டில் நெடுமாறன் நிகழ்த்திய பேருரையும் புதிய இந்திய அரசியல் அமைப்பு தன்னுரிமை பெற்ற தேசிய இனக்குடியரசுகளின் ஒன்றியமாக இருக்கவேண்டும் எனக் கூறுகின்றன. கொள்கைப் பட்டயத்தில் இவ்வாறு எதுவும் கூறப்படாததால் புதிய இந்திய அரசியல் அமைப்பைப் பொருத்தவரை கொள்கைப் பட்டயம் இரு சாத்தியப்பாடுகளைக் கருத்தில் கொண்டுள்ளது எனக் கருதலாம். முதலாவது, தன்னுரிமை அங்கீகரிக்கப்பட்ட தேசிய இனக் குடியரசுகளின் ஒன்றியத்துக்கான அரசியல் அமைப்பு; இரண்டாவது, தமிழ்த் தேசத்திற்கு மட்டும் தனிச்சலுகையாக தன்னுரிமையை அங்கீகரிக்கும் அரசியல் அமைப்பு.

ஆனால் இந்த இரு சாத்தியப்பாடுகளும் கற்பனையே. காரணம் இந்தியா ஒரு தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம்; தரகு முதலாளிகளும், பார்ப்பனிய சக்திகளும் தமது உயிர்வாழ்க்கைக்கு தேசிய (இன) ஒடுக்குமுறையையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. தேசிய இனங்களின் தன்னுரிமையை அங்கீகரிப்பது ஒவ்வொரு தேசிய இனமும் தனது சொந்த தேசியப் பொருளாதாரத்தை–சுதந்திரமான, சுயசார்பான பொருளாதாரத்தை கட்டியமைத்துக்கொள்ள அங்கீகரிப்பதாகும். இது தரகு முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கு எழுதப்படும் மரண

படிப்பகம்

www.padippkam.com



சாசனமாகும். எனவே எக்காரணம் கொண்டும் இந்தியத் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியசக்திகள் தேசிய இனங்களின் தன்னுரிமையை அங்கீகரிக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தனி ஒரு சலுகையாக தமிழ்த் தேசிய இனத்திற்கு மட்டுமே தன்னுரிமை வழங்கும் ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தையும் அங்கீகரிக்கப் போவதில்லை. காரணம் அதுவே பிற தேசிய இனங்களும் அதே மாதிரியான கோரிக்கைக்காகப் போராடுவதைத் தூண்டிவிட்டு தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் அழிவைத் துரிதப்படுத்தும் என்பது இந்திய ஆளும் வர்க்கங்கள் அறியாததல்ல.

ஆனால் பட்டயம் தரகு முதலாளிகளைப் பெருமுதலாளிகள் என்றே மிகவும் கவனமாகக் குறிப்பிடுகிறது. மேலும் பன்னாட்டு முதலாளிகள் அவர்களுடைய கூட்டாளிகள் என்று வர்ணிக்கிறது. அதாவது இந்தியப் பெருமுதலாளிகள் பட்டயத்தைப் பொருத்தவரை தரகு முதலாளிகள் அல்லர். பன்னாட்டு முதலாளிகளுக்குக் கூட்டாளிகளாய் இருக்கும் அளவுக்கு (அவர்களைச் சார்ந்தவர்கள் அல்லர்) சுதந்திரத்தன்மை பெற்ற 'தேசிய' முதலாளிகள். இவர் களுடைய உயிர் வாழ்விற்கு ஆதாரமாய் இருப்பது தேசிய (இன) ஒடுக்குமுறையல்ல; மாறாக முதலாளித்துவச் சுரண்டலே. தேசிய இனங்களின் தன்னுரிமை தற்போது மறுக்கப்பட்டிருப்பது ஆளும் வர்க்கங்களின் வாழ்க்கைக்கே அது ஆதாரம் என்பதால் அல்ல. மக்கள் இன்னும் தேசிய (இன) உணர்வு பெற்று போராடாமல் இருப்பதால்தான். எனவே தமிழகத்தில் பலமான தன்னுரிமை இயக்கம் கட்டப்பட்டால் இந்திய ஆளும் வர்க்கங்கள் மேற்கூறிய இரு சாத்தியப்பாடுகளில் ஒன்றை நிறைவேற்றுவது சாத்தியமே. இதுதான் 'கொள்கைப் பட்டயக்' காரர்களின் கோட்பாடு. மக்கள் போராட்டங்களுக்குப் பின்னும் ஒருவேளை ஆளும் வர்க்கங்கள் தன்னுரிமையை மறுத்துவிட்டால் அப்போது தேசிய விடுதலைப் புரட்சியை முன்னெடுப்போம் என்று இந்தப் பட்டயக்காரர்கள் கூறலாம். இப்படித்தான் அமைதி வழியில் புரட்சிக்கு முயல்வது முடியாவிட்டால் ஆயுதப் புரட்சி செய்வது என நம்பூதிரிக் கும்பல் பசப்பி வருகிறது. நாம் அவர்களிடம் கேட்கும் கேள்வி இதுதான். இந்திய ஆளும் வர்க்கங்களைப் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன? நம்பூதிரிபாட் புரட்டல்வாதிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட மதிப்பீடே பட்டயக்காரர்களின் மதிப்பீடு. அதுதான் அவர்களுடைய கோட்பாட்டிற்கு ஆதாரம். புரட்டல்வாதிகளின் மதிப்பீட்டிலிருந்து கோட்பாடுகளை உருவாக்கிக் கொண்டவர்கள் அவர்களைவிட புரட்சிக்காரர்களாய் இருக்கமுடியும் என்று ஆசைப்படக்கூடாது.



தேசிய விடுதலை இயக்கம் தமிழகத்தில் ஒரு தீர்மானகரமான சக்தியாக வளர்ச்சியடையும் நிலை தோன்றும்போது ஒரு வேளை இந்திய ஆளும்வர்க்கங்கள் தமது சுரண்டல் ஆதிக்கத்தைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வதற்காக இந்த தன்னுரிமைக்காரர்களிடமிருந்து மகாத்மாக்களைக் கண்டறிந்து ஒரு உடன்பாட்டுக்கு வரலாம். ஆனால் அந்த உடன்பாடு வரலாற்றில் 'துரோகம்' என்று குறிக்கப்படுமே தவிர புரட்சி என்று குறிக்கப்படாது.

தன்னுரிமை என்பது இரண்டு சாத்தியப்பாடுகளை கொண்டது ஒன்று, பிரிந்துபோகும் உரிமையுடன் ஒரு கூட்டரசில் நீடிப்பது. இரண்டு, விடுதலை பெற்று தனியரசு அமைப்பது. ஒரு பல்தேசிய அரசில் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருக்கும் ஒவ்வொரு தேசிய இனமும் இந்த இரு சாத்தியப்பாடுகளில் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும். பிரிந்து போகும் உரிமையுடன் ஒரு கூட்டரசு அமைப்பது சாத்தியமில்லாத போது தேசிய விடுதலைதான் அதன்முன் உள்ள ஒரே வழி.

இந்தியாவைப் பொருத்தவரை இந்திய ஆளும்வர்க்கங்களின் உயிர் வாழ்க்கை தேசிய இன ஒடுக்குமுறையையே ஆதாரமாகக் கொண்டிருப்பதாலும் இங்கு ஒடுக்கும் தேசிய இனமோ அதில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தன்னுரிமையை அங்கீகரிக்கும் பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சியோ இல்லாததாலும் இங்கு பிரிந்து போகும் உரிமையுடன் தேசிய இனக் குடியரசுகளின் ஒரு கூட்டரசு என்ற திட்டத்திற்கு வாய்ப்பே இல்லை. இந்நிலையில் இங்கு ஒடுக்கப்படும் தேசிய இனம் ஒவ்வொன்றுக்கும்–தமிழ்த் தேசிய இனத்திற்கும் தன்னுரிமை என்பது தேசிய விடுதலையின் மூலம் தனி அரசு அமைப்பது என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை.

எனவே தமிழக விடுதலைப்புரட்சி என்ற முழக்கத்தை 'தீவிரவாதம்', 'தாவல்' என்று விமர்சிப்பதும் அதற்கு மாற்றாக, 'தமிழ்த் தேசத் தன்னுரிமை' என்ற சட்டவாத முழக்கத்தை முன்வைத்து அதை 'தன்னுரிமைப் புரட்சி', 'தமிழகப் புரட்சியின் மறுபெயர்' என்றெல்லாம் வர்ணிப்பதும் வெறும் புரட்டலேயாகும். ◆

படிப்பகம்

www.padippkam.com



# தேசிய விடுதலைப் புரட்சியும் சாதி ஒழிப்பும்

*(தாழ்த்தப்பட்டோர் தலைமை பற்றி)*

தேசிய விடுதலையிலும், தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையிலும் அக்கறை கொண்ட சிலர் 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' என்ற கருத்தை சமீப காலமாக முன்வைத்து வருகிறார்கள்.

பாட்டாளி வர்க்கத் தலைமைக்கு மாற்றீடாக 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' என்ற கருத்தை அவர்கள் முன்வைப்பதற்கு காரணம் என்ன? பாட்டாளி வர்க்கத் தலைமையிலிருந்து 'தாழ்த்தப்பட்டோர் தலைமை' எவ்விதம் வேறுபடுகிறது?

தாழ்த்தப்பட்டோர் தலைமைக்கு சாராம்சமாகப் பின்வரும் காரணங்களைக் கூறுகிறார்கள்:

பிற நாடுகளைப் போல் அல்லாது இங்கு சமுதாயம் சாதிய சமுதாயமாக உள்ளது. சாதியை ஒழிக்காமல் மக்களை தேசிய விடுதலைப் புரட்சிக்கு அணிதிரட்ட முடியாது. மேலும் எந்த ஒரு சமுதாயப் புரட்சியும் சாதிய ஒழிப்பை உள்ளிட்டதாகவே இருக்க வேண்டும். இதற்குப் பாட்டாளி வர்க்கத் தலைமை போதுமானதல்ல. சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமையில்லாமல் சாதியத்தை ஒழிக்கமுடியாது. எனவே தாழ்த்தப்பட்டோர் தலைமை என்பது அவசியமாகும்.

அதாவது, தாழ்த்தப்பட்டோர் தலைமை என்பதில் மையமாக எழுப்பப்படும் பிரச்சினை சாதி ஒழிப்பு என்பதே. பாட்டாளி வர்க்கத் தலைமை இதற்குப் போதுமானதல்ல என்ற கருத்தின் அடிப்படையிலேயே தாழ்த்தப்பட்டோர் தலைமை என்ற கருத்தை முன்வைக்கிறார்கள்.

எனவே பாட்டாளி வர்க்கத் தலைமை மற்றும் சாதி ஒழிப்பு பற்றி முதலில் பரிசீலித்துவிட்டு பின்னர் அதிலிருந்து தாழ்த்தப்பட்டோர் தலைமையின் பரிந்துரையாளர்கள் எப்படி வேறுபடுகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.



ஒவ்வொரு சமுதாயமும் ஒரு உற்பத்தி முறையைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு உற்பத்தி முறையும் ஒரு வர்க்கத் தலைமையைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, முதலாளித்துவ சமுதாயம் முதலாளித்துவ உற்பத்தி முறையையும் முதலாளித்துவ உற்பத்தி முறை முதலாளிய வர்க்கத்தின் தலைமையையும் கொண்டிருக்கிறது. இதன் மூலம் முதலாளித்துவ சமுதாயத்தின் தலைமையாக முதலாளி வர்க்கம் திகழ்கிறது. அதாவது முதலாளிய உற்பத்தி முறையில் பல்வேறு வர்க்கங்கள் ஈடுபட்டிருந்தாலும் முதலாளி வர்க்கமே தலைமை வர்க்கமாகும். அதே போல சோசலிச சமுதாயம் சோசலிச உற்பத்தி முறையைக் கொண்டது. அந்த உற்பத்திமுறையில் பல்வேறு வர்க்கங்கள் பங்கு கொண்ட போதும் அதற்குத் தலைமையளிப்பது பாட்டாளி வர்க்கமே. இதன்மூலம் சோசலிச சமுதாயத்தின் தலைமையாக பாட்டாளி வர்க்கம் திகழ்கிறது.

எனவே சமுதாய மாற்றம் என்பது உற்பத்தி முறையை மாற்றுவது அதன் மூலம் சமுதாயத்திற்கு தலைமையளிக்கும் வர்க்கத்தை மாற்றுவது ஆகும். ஒரு கட்சி சமுதாய மாற்றத்திற்காகப் பணியாற்றுகிறது என்று சொல்லும்போது அது சமுதாயத்தின் உற்பத்தி முறையையும் அதன்மூலம் அதன் தலைமையளிக்கும் வர்க்கத்தையும் மாற்றுவதற்காகப் பணி செய்கிறது என்று பொருளாகும்.

இதுவே அக்கட்சியின் வர்க்கத் தன்மையையும் புரட்சித் தலைமையையும் தீர்மானிக்கிறது. உதாரணமாக ஒரு கட்சி முதலாளிய உற்பத்தி முறைக்காகப் போராடும் திட்டத்தைக் கொண்டு செயல்படுமானால் அக்கட்சி முதலாளித்துவக் கட்சி என்றும், அப்புரட்சியின் தலைமை முதலாளி வர்க்கத் தலைமை என்றும் கூறப்படும். ஒரு கட்சி புதிய சனநாயக-சோசலிச உற்பத்தி முறையை நோக்கம், திட்டமாகக் கொண்டு செயல்படுமானால் அக்கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சி என்றும் அப்புரட்சியின் தலைமை பாட்டாளி வர்க்கம் என்றும் கூறப்படும். சமுதாயத்தின் அடுத்த கட்ட உற்பத்தி முறைக்காகப் போராடும் கட்சிகள் முற்போக்கான கட்சிகள் என்றும், பழைய பிற்போக்கான உற்பத்தி முறைக்காகப் போராடும் கட்சிகள் பிற்போக்குக் கட்சிகள் என்றும் கூறப்படும்.

இன்று இந்தியாவில் . தரகு முதலாளித்துவ-அரைநிலப் பிரபுத்துவ உற்பத்தி முறை நிலவுகிறது. இதற்கு தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சக்திகள் தலைமையளிக்கின்றன. இந்த உற்பத்தி முறையைக் கட்டிக்காப்பதற்காக நிற்கும் கட்சிகள் தரகு முதலாளித்துவ- நிலப்பிரபுத்துவக் கட்சிகளாகும்.

படிப்பகம்

www.padippkam.com



தரகு முதலாளித்துவ-அரைநிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை பிற்போக்கானது, தகர்த்தெறியப்பட்டு இதைவிட முற்போக்கான தேசிய தொழிற் உற்பத்தியால் மாற்றீடு செய்யப்பட வேண்டியது. இதற்கு இந்திய தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியத் திடமிருந்து ஒவ்வொரு தேசியஇனமும் விடுதலைபெற்று அவற்றின் தேசிய அரசு கள் அமைவது அவசியமாகும். இத்தகைய தேசிய அரசுகள் தரகு-முதலாளித்துவ, அரைநிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையை முற்றாக அகற்றிவிட்டு தேசியத் தொழிற் உற்பத்தியை முதலாளித்துவ முறை யிலோ, புதிய சனநாயக-சோசலிச முறையிலோ கட்டியமைக்கலாம்.

தேசியத் தொழிற் உற்பத்தியை முதலாளித்துவ முறையில் கட்டியமைப்பதை நோக்கமாகக் கொண்டு தேசிய விடுதலைக்கு-தேசிய அரசுக்கு ஒரு கட்சி போராடுமானால் அந்தக்கட்சி முதலாளித் துவக் கட்சியாகும். அது நடத்த விரும்பும் புரட்சி முதலாளித்துவ வர்க்கத் தலைமையிலானதாகும். இதற்கு மாறாக தேசிய தொழில் உற்பத்தியை புதிய சனநாயக-சோசலிச முறையில் கட்டியமைக்கும் நோக்கம், திட்டத்துடன் தேசிய விடுதலைக்கு-தேசிய அரசுக்கு ஒரு கட்சி போராடுமானால் அந்தக் கட்சி பாட்டாளி வர்க்கக் கட்சியாகும். அது நடத்தவிரும்பும் புரட்சி பாட்டாளிவர்க்க தலைமையிலானதாகும்.

எனவே ஒரு புரட்சியில் தலைமை என்பது அப்புரட்சியின் மூலம் எத்தகைய உற்பத்தி முறை கட்டமைக்கப்படவிருக்கிறது என்பதோடு தொடர்புடையதாகும்.

தரகு முதலாளித்துவ-அரை நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையைத் தேசியத் தொழிற் உற்பத்தியால் மாற்றீடு செய்வதற்கு முதலாளித்துவ உற்பத்திமுறை, புதிய சனநாயக– சோசலிச உற்பத்தி முறை ஆகிய இருமுறைகளைத் தவிர மூன்றாவது உற்பத்தி முறை எதுவும் இல்லாததால் புரட்சிக்குத் தலைமை முதலாளி வர்க்கமா? பாட்டாளி வர்க்கமா? என்பது மட்டுமே விவாதத்துக்குரியதாகும்.

மார்க்சிய-லெனினியவாதிகள் புதிய சனநாயக சோசலிச உற்பத்திமுறையை--சமுதாயத்தை நோக்கம், திட்டம் கொள்கையாகக் கொண்டு செயல்படுவதால் அவர்கள் தமது கட்சியைப் பாட்டாளி வர்க்கக் கட்சி என்றும் தாம் நடத்தும் புரட்சியைப் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சி என்றும் உறுதிபடக் கூறுகிறார்கள். அவர்



களுக்கு வழிகாட்டும் தத்துவமாக மார்க்சிய-லெனினியம் இருப்பதால் அதைப் பாட்டாளி வர்க்கத் தத்துவம் என்கிறார்கள்.

இப்போது சாதி ஒழிப்புப் பிரச்சினையைக் கவனிப்போம். தேசிய விடுதலைப் புரட்சியின் மூலம் புதிய சனநாயக-சோசலிச சமுதாயத்தைக் கட்டமைக்கும் புரட்சி பாட்டாளி வர்க்கத் தலைமை யிலான புரட்சி. இத்துடன் சேர்ந்து சாதி ஒழிப்புக் கடமை எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது?

சாதியை ஒழிக்க வேண்டுமானால் இரண்டு பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். முதலாவது, சாதிய உறவுகளால் பயன் பெறும் சாதிய ஆதிக்கச் சக்திகள் தனிமைப்படுத்தப்பட்டு சாதி வேறுபாடற்ற முறையில் உழைக்கும் மக்கள் ஓரணியில் திரட்டப்பட வேண்டும். இது அரசியல் பணி. இரண்டாவது, சாதியம் நிலவுவதற் கான பொருளாதார அடித்தளம் ஒழிக்கப்பட வேண்டும். இது பொருளாதார அரங்கிலான பணி.

பின்தங்கிய நிலப்பிரபுத்துவ மற்றும் முதலாளியத்துக்கு முந்திய உற்பத்தி உறவுகளே சாதியம் தொடர்ந்து நீடித்திருப்பதற் கானப் பொருளாதார அடிப்படையாக இருக்கின்றன. தொழிற்துறை உற்பத்தி பெருமளவுக்கு வளர்ச்சியடைந்து மிகப் பெரும்பான்மை யான மக்கள் அவ்வுற்பத்தியில் ஈடுபடுகின்றவர்களாக மாறும் போதுதான் சாதிய உறவுகள் படிப்படியாக தளர்ந்து இறுதியில் ஒழியும். ஆனால் இன்று தொழிற்துறை வளர்ச்சி என்பது தரகு முதலாளித்துவ வளர்ச்சியாகவே இருப்பதால் மிகப் பெரும்பான்மை யான உழைக்கும் மக்கள் தொழிற்துறை உறவுக்குள் ஈர்க்கப் படாமலேயே விட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். பெருமளவு மக்கள் முன்னேறிய தொழிற்துறை உற்பத்தியில் ஈர்க்கப்பட வேண்டுமானால் தரகு முதலாளித்துவ–அரைநிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை முற்றாக ஒழிக்கப்பட்டு தேசிய தொழிற்உற்பத்தி கட்டற்றமுறையில் வளர்க்கப் பட வேண்டும். இதை ஒரு தேசிய விடுதலைப் புரட்சி சாதிக்கும். அதாவது சாதியம் நிலவுவதற்கானப் பொருளாதார அடித்தளத்தை நொறுக்கி எறியும் பணியை தேசியவிடுதலைப் புரட்சி நிறைவேற்றும்.

சாதி ஆதிக்கச் சக்திகளைத் தனிமைப்படுத்த உழைக்கும் மக்களை ஓரணியில் அணிதிரட்டும் பணி எவ்வாறு நிறைவேறும்?

உழைக்கும் மக்கள் சாதிய ஒடுக்குமுறைக்கு மட்டும் அல்லாமல் சாதி வேறுபாடற்ற முறையில் தேசிய ஒடுக்குமுறைக்கும்

படிப்பகம்

www.padippkam.com



உள்ளாகி இருக்கிறார்கள். எனவே ஒரு சரியான தேசியத் திட்டத்தின் அடிப்படையில் தேசிய விடுதலை மற்றும் தேசியக் கோரிக்கைகளை முதன்மைப்படுத்தி நடத்தப்படும் போராட்டங்களை உழைக்கும் மக்கள் மத்தியில் கட்டமைப்பதன் மூலம் அவர்களை சாதி வேறுபாடற்ற முறையில் ஒரு முகாமில் அணிதிரட்ட முடியும். இது சாதி ஆதிக்கச் சக்திகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தும். அதாவது சாதி ஆதிக்கச் சக்திகளை தனிமைப்படுத்தி உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டுவதற்கு பலமான தேசிய இயக்கம் கட்டப்படுவது அவசியமாகும்.

இவ்வாறு ஒரு பலமான தேசிய இயக்கத்தின் மூலம் சாதியாதிக்கச் சக்திகளைத் தனிமைப்படுத்துவது; தேசிய விடுதலைப் புரட்சியின் மூலம் சாதியத்தின் பொருளாதார அடித்தளத்தை தகர்த்தெறிவது; இதுதான் சாதியத்தை ஒழிப்பதற்கான வழியும் தேசிய விடுதலைப் புரட்சிக்குப் பாட்டாளிவர்க்கம் தலைமையளிப்பது பற்றிய கோட்பாடும் ஆகும்.

இப்போது 'தாழ்த்தப்பட்டோர் தலைமையின்' பரிந்துரையாளர்கள் இதில் எங்கே வேறுபடுகிறார்கள் என்று பார்ப்போம்.

முதலாவதாக: சாதியின் பெயரால் பிரிந்துகிடக்கும் மக்களை தேசிய விடுதலைக்கு ஒன்றுபடுத்த சாதி ஒழிப்பு அவசியம் என்கிறார்கள். சாதியை ஒழிக்க வேண்டுமானால் முதலில் சாதியாதிக்கவாதிகள் அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டு உழைக்கும் மக்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும். அடுத்து சாதியாதிக்கத்துக்கான பொருளாதார அடித்தளம் தகர்க்கப்பட்டு தேசியப் பொருளாதாரம் கட்டமைக்கப்பட வேண்டும். முதலாவது ஒரு தேசியத்திட்டத்தை முன்வைத்து அதன் அடிப்படையில் ஒரு பலம் வாய்ந்த தேசிய இயக்கத்தைக் கட்டமைப்பதன் மூலமும் இரண்டாவது ஒரு தேசிய விடுதலைப் புரட்சியை நிறைவேற்றுவதன் மூலமுமே சாதிக்க முடியும் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தேசிய விடுதலைப் புரட்சிக்கு முன்னிபந்தனையாக அவர்கள் சாதிய ஒழிப்பைப் பற்றி பேசுவதில் சாதி ஒழிப்புக்கு ஒரு புரட்சியின் தேவையை மறுக்கும் சீர்திருத்தவாதம்தான் இருக்கிறது.

இரண்டாவதாக: ஒரு தேசிய இயக்கம் கட்டியமைக்கப்படுவதன் சாத்தியப்பாட்டை அவர்கள் மறுக்கிறார்கள். 1938, 1965 ஆம் ஆண்டுகளைப் போலன்றி இன்று இந்தி, ஆங்கில மொழிகளை உழைக்கும் மக்களே ஏற்றுக்கொள்ளும் உணர்வில் இருப்பதால்



தேசிய இயக்கம் கட்டமைப்பது சாத்தியமில்லை என்கிறார்கள். இந்தி, ஆங்கில மொழிகளை உழைக்கும் மக்களே ஏற்றுக் கொள்ளும் உணர்வில் இருக்கிறார்கள் என்று வாதத்திற்கு ஏற்றுக்கொண்டாலும் அது உழைக்கும் மக்கள் மீதான தேசிய ஒடுக்குமுறையை மறுப்பதற்கான சான்றோ, தேசிய இயக்கம் கட்டும் தேவை இல்லை என்பதற்கான சான்றோ அல்ல. மாறாக, ஒரு தேசியத் திட்டத்தின் அடிப்படையில் இன்னும் துரிதமாக மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து உழைக்கும் மக்களிடம் தேசியஇயக்கத்தைக் கட்டும் அவசியத்தையும், சாத்தியப்பாட்டையும் உணர்த்தும் சான்றே ஆகும். உண்மையில் அன்னிய மொழிகளை மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பது ஆளும் வர்க்கத்தின் பிரச்சாரம் ஆகும்.

மூன்றாவதாக: தமிழகத்தில் இருக்கும் தெலுங்கு பேசும் மக்கள் இங்கு தேசிய இயக்கத்தைக் கட்டத் தடை என்பதாக முன்வைக்கிறார்கள், தெலுங்கு மற்றும் பிறமொழி பேசும் உழைக்கும் மக்களுக்கு தமிழ்த் தேசிய விடுதலை எவ்விதத்திலும் எதிரானதல்ல. மாறாக அவர்களுடைய நலனுக்கும் அது அவசியமானதாகும். ஆளும் வர்க்கங்கள் தேசிய விடுதலை இயக்கத்தைச் சீர்குலைப்பதற்காக இவ்வேறுபாட்டை ஊதிப் பெருக்கி பிரச்சாரம் செய்து வருகின்றன. தமிழ்த்தேச விடுதலைக்கு அனைத்து மக்களையும் அணிதிரட்டும் ஒரு தேசிய இயக்கத்தை கட்டுவதற்குத் தடையாக இந்த வேறுபாட்டை முன்வைப்பது ஆளும்வர்க்க பிரச்சாரத்திற்குப் பலியாவதாகும்.

நான்காவதாக: சாதி ஒழிப்புக்கு ஆதிக்கச் சாதியின் பொருளாதார அடித்தளத்தையும், அரசியல் ஆதிக்கத்தையும் தகர்த்தெறிய வேண்டும் என்கிறார்கள், இதற்கு என்ன வழி? தாழ்த்தப்பட்ட மக்களின் சாதி சங்கங்களைக் கட்டி ஆதிக்கச் சாதிக்கு எதிராகப் போராடுவதுதான். இது ஆதிக்கச் சாதியில் இருக்கும் வர்க்க வேறுபாட்டை மறுப்பதும் ஆதிக்கச் சாதியில் இருக்கும் உழைக்கும் மக்களை சாதியாதிக்கவாதிகளுக்குப் பலியாக்கி சாதிவேறுபாடற்ற முறையில் உழைக்கும் மக்களை ஓரணியில் திரட்டுவதற்கு எதிராக நிற்பதும் ஆகும். மேலும் தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிச் சங்கங்களையும் அவற்றின் போராட்டங்களையும் சாதி ஒழிப்புக்கான அமைப்புகள், போராட்டங்கள் என்ற அளவுக்கு மிகைப்படுத்துவதாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் சாதிச் சங்கங்கள் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற அமைப்புகளாக, தற்காப்புக்கான அமைப்புகளாக இருக்கமுடியுமே தவிர சாதி ஒழிப்புக்கான அமைப்புகளாக இருக்க முடியாது. அவ்வாறு இருக்க

படிப்பகம்

www.padippkam.com



வேண்டுமாயின் அவை தேசிய இயக்கத்தின் ஒரு பகுதியாக மாறி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தேசிய விழிப்புணர்வு ஊட்டுகின்ற, தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகின்ற அமைப்புகளாகச் செயல் படவேண்டும். அவ்வாறின்றி அவை சாதி ஒழிப்பு அமைப்புகளாக, ஆதிக்கச் சக்திகளின் அரசியல் பொருளாதார ஆதிக்கத்தை தகர்ப்பதற்கான அமைப்புகளாக சித்தரிக்கப்படுமானால் அவை உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்கு எதிரானதாகவே இருக்கும்.

'தாழ்த்தப்பட்டோர் தலைமையின்' பரிந்துரையாளர்கள் இப்படித்தான் பாட்டாளி வர்க்கத் தலைமையிலிருந்து வேறு படுகிறார்கள்.

சாராம்சத்தில் தாழ்த்தப்பட்டோர் தலைமையின் பரிந்துரையாளர்கள் தேசிய விடுதலை பற்றியும், அதற்கான உழைக்கும் மக்களின் ஒற்றுமை பற்றியும் என்னதான் பேசினாலும் தேசிய விடுதலைக்கு முன்னிபந்தனையாக சாதி ஒழிப்பையும் தேசிய இயக்கத்திற்கு மாற்றாக சாதிப்போராட்டங்களையும் முன்வைப்பதன் மூலம் தேசிய விடுதலையையும், தேசிய இயக்கத்தையும் கைவிட்டு உழைக்கும் மக்களின் ஒற்றுமைக்கு எதிரான நடைமுறை கொண்டவர் களாகவே வெளிப்படுகிறார்கள்.

❖



# அம்பேத்கார் - பெரியாரின் வரலாற்றுப் பாத்திரமும் கம்யூனிஸ்டுகளும்

கம்யூனிஸ்டுகள் வர்க்கப் போராட்டத்திற்கு உணர்வுப் பூர்வமாக தலைமையளிப்பதன் மூலம் சமுதாயமாற்றத்தைச் சாதிக்கும் கொள்கை கொண்டவர்கள். இதற்கு ஏற்கனவே சமுதாயத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் வர்க்கப் போராட்டத்தையும் அதன் கடந்தகால வரலாற்றையும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

ஏடறிந்த வரலாறெல்லாம் வர்க்கப் போராட்டங்களின் வரலாறே என மார்க்சியம் கூறுகிறது. ஆனால் வர்க்கப் போராட்டம் எப்போதும் அதன் தூய வடிவில் நடைபெறுவதில்லை. சனநாயகத்துக் கானப் போராட்டம், தேசியவிடுதலைப் போராட்டம், பாசிச எதிர்ப்புப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் என்றவாறு பல்வேறு வடிவங்களில்தான் நடைபெற்று வருகிறது. இது ஒவ்வொரு நாட்டிற்கும் காலத்திற்கும் மாறுபடக்கூடியதாகும்.

எனவே ஒரு நாட்டின் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமை யளிக்க வேண்டுமானால் மார்க்சிய அறிவோடு அந்நாட்டின் வர்க்கப் போராட்ட வரலாறு பற்றிய அறிவும் அதன் குறிப்பான வடிவத்தில் அவசியமாகும்.

இந்திய கம்யூனிஸ்டுகள் இந்த இரண்டு விசயங்களிலுமே தவறிழைத்தார்கள். அவர்கள் மார்க்சியத்தைப் புரிந்து கொள்வதிலும், இந்தியாவின் வர்க்கப் போராட்ட வரலாற்றை அதன் குறிப்பான வடிவத்தில் புரிந்து கொள்வதிலும் தவறிழைத்தார்கள். இதன் விளைவாக அவர்கள் கடந்த எழுபதாண்டு காலமாக உறுதியுடனும் மிகுந்த நம்பிக்கையுடனும் போராடி வந்திருந்தபோதிலும் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமையளித்து ஒரு சமுதாய மாற்றத்தைச் சாதிப்பதில் வெற்றிபெற முடியவில்லை.

தொடக்கத்திலிருந்தே அவர்கள் இந்தியாவை ஒரு தேசம் என்று கருதியே தமது வேலைத்திட்டத்தை வகுத்துக் கொண்டிருக் கிறார்கள். இது தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்புக்கு எதிரானது; காலனி, அரைக்காலனி தேசம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தேசம் என்கிற இனக்கூறு இல்லாத தேசம் பற்றிய கோட்பாட்டுக்கு உட்பட்டது; இக்கோட்பாட்டின் விளைவாக இந்தியா

படிப்பகம்

www.padippkam.com



ஒரு பல் தேசிய அரசு சமூகமாய் இருந்தும் கட்சியால் தொடர்ந்து ஒரு தேசிய சமூகமாகக் கருதப்பட்டுவிட்டது. இது ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதமேயன்றி மார்க்சியமல்ல. 1943-53 வரையிலும் பின்னர் இ.பொ.க.(மா-லெ)யும் ஸ்டாலின் வரையறுப்பின் அடிப்படையிலான தேசிய இனங்களையும் அவற்றின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தன எனினும் அது தேசத்திற்குள் தேசம் என்பதாக, அதனால் ஏகாதிபத்தியவாதமாக இருந்ததேயன்றி, ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்திலிருந்து விடுபட்டதாக இல்லை. அதாவது ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்திய தேசம் என்ற கருத்திலிருந்து விடுபட்டதாக இல்லை.

கடந்த எழுபதாண்டுகளாக கட்சி இந்த ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்தையே மார்க்சியம் என நம்பி தத்துவ அடிப்படையாகக் கொண்டு தனது செயல்பாடுகளை அமைத்துக்கொண்டிருக்கிறது. இதன்விளைவாக அது இந்திய வரலாற்றின் – வர்க்கப் போராட்டத்தின் சிறப்புக் கூறுகளை இறுதிவரை பற்றிக் கொள்ளவே இல்லை.

இந்தியாவில் பார்ப்பனிய எதிர்ப்பையும், தேசிய விடுதலையையும் புறக்கணித்துவிட்டு இங்கு நடக்கும் வர்க்கப் போராட்டத்தை ஒருவர் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் வர்க்கப்போராட்டத்திற்குத் தலைமையளிப்பதையே தமது கொள்கை, கோட்பாடாகக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் கடந்த எழுபது ஆண்டுகளாக இப்பிரச்சினைகளைப் புறக்கணித்தே வந்திருக்கிறார்கள். பார்ப்பனிய பிரச்சினையை வெறும் சாதிப்பிரச்சினையாகவும், தேசியவிடுதலையை வெறும் இனவாதமாகவும் பிரிவினைவாதமாகவுமே சித்தரித்து வந்திருக்கிறார்கள். இந்தியாவையே ஒரு தேசம் என்று கருதிய ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்தின் விளைவே இது.

கடந்த எழுபது ஆண்டுகளாக கட்சி ஒரு சனநாயகப்புரட்சித் திட்டத்துடன் செயல்பட்டு வந்திருக்கிறது. ஆனால் அந்த சனநாயகப் புரட்சி எந்த தேசிய இயக்கத்துடனும் இணைக்கப்படாததால் வெற்றி பெறவில்லை. அதை இந்தியத் தேசியத்துடன் இணைத்தவர்கள் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவாளர்களாய் திரிபு வாதிகளாய் சீரழிந்தார்கள். இரட்டை தேசியக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் – இந்தியத் தேசியத்துடன் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டவர்கள் – தேசிய சூனிய வாதிகளாய் மக்களிடமிருந்து தனிமைப்பட்டார்கள். இதன் விளைவாக கடந்த எழுபது ஆண்டுகால உறுதியும், அர்ப்பணிப்பும் கொண்ட கம்யூனிஸ்டுகளின் செயல்பாடுகள் இந்திய வர்க்கப் போராட்டக் களத்தில் அவர்கள் தலைமை பெற உதவவில்லை.



ஆனால் அம்பேத்காரும், பெரியாரும் மார்க்சிய-லெனினியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர். வர்க்கப் போராட்டத்திற்கு உணர்வுப் பூர்வமான தலைமையளிப்பதன் மூலம் சமுதாய மாற்றத்தைச் சாதிக்க வேண்டும் என்கிற கொள்கையோ, கோட்பாடோ கொண்டவர்களும் அல்லர். எனினும் இந்தியாவில் நடக்கும் வர்க்கப் போராட்டத்திலிருந்து புறக்கணிக்க முடியாத பார்ப்பனிய எதிர்ப்பு மற்றும் தேசிய விடுதலைப் பிரச்சினைகளில் செல்வாக்கான பாத்திரமாற்றியிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அம்பேத்கார் தன் வாழ்நாள் முழுவதும் பார்ப்பனியத்திற்கு எதிராகப் போராடி வந்திருக்கிறார். இந்து மதமே பார்ப்பனிய மதம்தான், சாதிமதம்தான் என்று கூறிய அவர் சாதியைப் புனிதப்படுத்தும் இந்து இலக்கியங்களையும், நிறுவனங்களையும் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்திருக்கிறார். பார்ப்பனியம் வரலாற்றில் ஆற்றிவந்திருக்கும் எதிர்ப்புரட்சிப் பணிகளை அவர் போல் வேறொருவர் இதுவரை அம்பலப்படுத்தவில்லை. தீண்டாமை ஒழிந்த, சாதி பேதமில்லாத ஒரு சனநாயக இந்திய சமுதாயமே தனது இலட்சியம் எனப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கிறார். வர்ண-சாதி ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை எனும் இரண்டு பக்கங்களைக் கொண்டிருக்கிற பார்ப்பனியத்தின் வர்ண, சாதி ஒடுக்குமுறைக்கு எதிரானப் போராட்டத்தில் அம்பேத்கார் தலையாய இடம் வகிக்கிறார்.

பார்ப்பனியத்தின் வர்ண, சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக மட்டுமின்றி அதன் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராடியவர் பெரியார். இவரும் பார்ப்பனிய மதமான இந்துமதத்தை அதன் இலக்கியங்களின் புனிதத்தை அதன் நிறுவனங்களை அம்பலப்படுத்தினார். கூடவே இந்தியத் தேசியம் என்பதே பார்ப்பனியத் தேசம்தான் என்பதையும் அம்பலப்படுத்தினார். பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறையை அம்பலப்படுத்திய பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என தேசிய விடுதலை முழக்கத்தையும் எழுப்பினார்.

பார்ப்பனியத்தின் வர்ண, சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய அம்பேத்கார் இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலையின் குறியீடாக முன்வைக்கப்படுகிறார். பார்ப்பனியத்தின் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக தேசிய விடுதலை முழக்கத்தை முன்வைத்த பெரியார் இன்று தமிழ்த்தேச விடுதலையின் குறியீடாக முன்வைக்கப் படுகிறார். அவர்களுடைய நோக்கங்கள் வெற்றி பெறவில்லை

படிப்பகம்

www.padippkam.com



எனினும் அவர்கள் வரலாற்றில் ஏற்படுத்தியிருக்கும் செல்வாக்கு வர்க்கப்போராட்ட வரலாற்றை முன்னெடுத்துச் செல்கின்றவர்களால் புறக்கணிக்க முடியாததாகும்.

அவர்களுடைய நோக்கங்கள் – தாழ்த்தப்பட்டோர் விடுதலையும், தேசிய விடுதலையும் – வெற்றிபெறாததற்குக் காரணம் என்ன?

அம்பேத்கார் தீண்டாமை ஒழிந்த, சாதி வேறுபாடற்ற, ஒரு சனநாயக சமுதாயத்தை விரும்பி அதற்காகப் பார்ப்பனியத்தின் வர்ண-சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடினார் எனினும் சாதிஒழிப்பு என்பது விவசாயப் புரட்சியும் தேசிய விடுதலையும் இணைக்கப்படும் போதுதான் அதாவது, தேசியவிடுதலைப் புரட்சி மூலம்தான் சாத்தியம் என்பதை உணரவில்லை. இதன் காரணமாக அவர் இந்தியத் தேசியத்தின் ஆதரவாளராக தேசிய ஒடுக்கு முறையின் ஆதரவாளராக இருந்தார்.

பெரியார் தேசிய விடுதலைக்குக் குரல் கொடுத்தார். அதேநேரத்தில் சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கங்களுக்கும் அதே அளவுக்கு அல்லது இன்னும் கூடுதலாக அழுத்தம் கொடுத்தார். இவற்றில் மையமான பிரச்சினை தேசிய விடுதலையே என்பதையோ அது விவசாயப் புரட்சியுடன் இணைக்கப்படவேண்டும் என்பதையோ அவர் உணரவில்லை. இதன் காரணமாக அவர் ஓர் தேசிய விடுதலை இயக்கத்தின் – தேசிய விடுதலைப் புரட்சி இயக்கத்தின் தலைவராக வெளிப்படவில்லை.

பார்ப்பனிய எதிர்ப்பு என்பது சாதிய ஒடுக்குமுறை எதிர்ப்பு, தேசிய ஒடுக்குமுறை எதிர்ப்பு என்கிற இரண்டு முகங்களும், தாழ்த்தப்பட்டோர் விடுதலை, தேசிய விடுதலை என்கிற இரு இலக்குகளும் கொண்டது. இவ்விரு இலக்குகளும் தேசிய விடுதலையையும் விவசாயப் புரட்சியையும் இணைத்து ஒரு தேசிய விடுதலைப் புரட்சியாய் நடத்துவதன் மூலமே அடையக்கூடியதாகும்.

தேசிய விடுதலைப்புரட்சி என்பது ஏகாதிபத்திய, தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ வர்க்கங்களை ஒரு முகாமிலும், தேசிய, சனநாயக வர்க்கங்களை அதற்கு எதிர்முகாமிலும் நிறுத்தும் ஒரு வர்க்கப் போராட்டமாகும். இந்த வர்க்கப் போராட்டமே இந்திய வரலாற்றின் இன்றைய உந்து சக்தியாகும். இதைப் புரிந்து கொள்வதற்கும், வெற்றிகரமாக கையாள்வதற்கும் மார்க்சிய-லெனினிய தத்துவம் அவசியம்.

அம்பேத்காரும், பெரியாரும் இந்திய வரலாற்றில் பார்ப்பனிய எதிர்ப்பில் செல்வாக்குமிக்க பாத்திரமாற்றினார்கள். ஆனால் அவர்கள்



வர்க்கப் போராட்டத் தத்துவமான மார்க்சிய-லெனினியத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. சமுதாய மாற்றத்தை வர்க்கப் போராட்டத்திற்கு உணர்வுப்பூர்வமாக தலைமையளிப்பதன் மூலம் சாதிக்க வேண்டும் என்ற கோட்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. இதனால் இந்தியாவில் நடைபெற்று வரும் வர்க்கப் போராட்டக்களத்தில் அவர்கள் இருந்தார்கள் எனினும் அதை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்கின்றவர்களாக இல்லை.

ஆனால் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்தினால் வர்க்கப் போராட்டக் களத்தில் தலைமை இழந்த கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்திலிருந்து விடுபட்டு மார்க்சிய-லெனினியத்தைப் பற்றிக்கொள்ளும்போது அதில் தலைமைப் பாத்திரம் ஆற்றமுடியும்; அப்போது அவர்கள் தமது பணியை அம்பேத்கார், பெரியாரிலிருந்தே தொடர்வதாக இருக்கும். காரணம் மார்க்சிய-லெனினிய அடிப்படையில் அவர்கள் வந்தடையும் தேசிய விடுதலைப் புரட்சி எனும் செயல் திட்டம் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமையளிக்கும் திட்டம் மட்டும் அல்ல பெரியார், அம்பேத்காரின் பார்ப்பனிய எதிர்ப்பை வர்க்கப் போராட்டத்துடன் இணைத்து முன்னெடுத்துச் சென்று முழுமைப்படுத்துகின்ற திட்டம் ஆகும்.

கம்யூனிஸ்டுகள் வர்க்கப் போராட்டக்களத்தில் தமதுபணியை அம்பேத்கார், பெரியாரிலிருந்து தொடர்வதாயிருக்கும் என்பது இந்திய நிலைமைகளின் சிறப்புத் தன்மைகளின் காரணமாக மார்க்சிய-லெனினியத்தின் போதாமை பற்றிக் கூறுவதோ அம்பேத்கார், பெரியார் சிந்தனைகளால் அதைச்செழுமைப்படுத்த வேண்டும் என்று கூறுவதோ அல்ல. வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமையளிக் கின்றதும், அம்பேத்கார் பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்பை முழுமைப் படுத்துகின்றதுமான தேசிய விடுதலைப் புரட்சி எனும் செயல்திட்டம் மார்க்சிய-லெனினிய தத்துவ ஒளியில் பெறப்பட்டதே. எனவே மார்க்சிய-லெனினியத்தின் போதாமை, அதை பெரியார், அம்பேத்கார் சிந்தனையால் செழுமைப்படுத்துவது என்ற பேச்சுகளுக்கெல்லாம் இடமே இல்லை.

ஆனால் சிலர் இந்திய நிலைமைகளில் மார்க்சிய-லெனினியத்தின் போதாமை பற்றியும், அதனுடன் பெரியார் அம்பேத்கார் சிந்தனைகளை 'இணைப்பது', 'உள்வாங்கிக் கொள்வது', 'செழுமைப்படுத்துவது' பற்றியும் பேசி வருகிறார்கள். காரணம் இந்தியக் கம்யூனிஸ்டுகள் இதுவரை பின்பற்றிவந்த ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்தையே இவர்கள் இன்னும் மார்க்சியம் என்று கருதுகிறார்கள். இதன் காரணமாக இந்தியக் கம்யூனிஸ்டுகளின்

படிப்பகம்

www.padippkam.com



தோல்வியை மார்க்சியத்தின் தோல்வி என்றும் மார்க்சிய-லெனினியத்தின் போதாமை என்றும் கருதுகிறார்கள்.

உண்மையிலேயே இதில் உள்ள பிரச்சினை மார்க்சிய-லெனினியத்தின் போதாமையல்ல; மாறாக மார்க்சிய-லெனினியத்தை இவர்கள் புரிந்து கொள்வதில், உள்வாங்கிக் கொள்வதில் உள்ள போதாமையேயாகும்.

இதன் காரணமாக பெரியார், அம்பேத்காரின் வரலாற்றுப் பாத்திரத்தை அங்கீகரித்து மார்க்சிய-லெனினிய தத்துவ ஒளியில் புரட்சி இயக்கத்தை முன்கொண்டு செல்லும் கடமையை நிராகரிக்கிறார்கள்.

மார்க்சிய-லெனினியத்தின் போதாமை பற்றிப் புலம்பி அதனுடன் பெரியார்-அம்பேத்கார் சிந்தனைகளை இணைத்துக் கொள்வதாகக்கூறி ஒரு கலவைவாதத்தை முன்வைக்கிறார்கள்.

இக்கலவைவாதத்தின் மூலம் அம்பேத்கார், பெரியார் சிந்தனைகளை வழிகாட்டும் தத்துவமட்டத்திற்கு உயர்த்தி அவர்களைப் பெருமைப்படுத்துவதாகக் காட்டி, வழிகாட்டும் தத்துவம் என்பதிலிருந்து மார்க்சிய-லெனினியத்தை நிராகரிக்கிறார்கள். இதன் மூலம் தத்துவ மறுப்பாளர்களாக வெளிப்படுகிறார்கள். 'தன்னுரிமைப் புரட்சியும்', 'தாழ்த்தப்பட்டோர் தலைமையும்,' இவர்கள் பெற்றெடுத்த குழந்தைகளே.

இவர்கள் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதிகளைப் போலன்றி தேசிய விடுதலையின் ஆதரவாளர்களாக இருப்பினும், ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்துக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டத்தில் இந்நிலைப்பாடுகளை வந்தடைந்தவர்களாக இல்லாததால் மார்க்சிய-லெனினியத்தை பற்றிக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக கலவைவாதத்தை முன்வைக்கும் தத்துவமறுப்பாளர்களாக, தேசிய விடுதலைக்கு மாற்றாக தன்னுரிமையை முன்வைக்கும் சட்டவாதிகளாக, பாட்டாளிவர்க்கத் தலைமைக்குப் பதிலாக தாழ்த்தப்பட்டோர் தலைமையையும், தேசிய விடுதலைக்கு முன்னிபந்தனையாக சாதி ஒழிப்பையும் முன்வைக்கும் சாதிவாதிகளாக இருக்கிறார்கள்.

❋



## இ.பொ.க. (மா-லெ) *மற்றும்* த.நா.மா.லெ.க- *வின்*

# தேசியக் கொள்கை குறித்து சில கேள்விகளும் பதில்களும்

❖ **இ.பொ.க.(மா-லெ)யின் தேசியக் கொள்கை இரட்டை தேசியக் கொள்கை என்பது சரியா?**

சரியே. இக்கட்சியின் திட்டம் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறது. அதே நேரத்தில் இந்தியாவில் நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டம் என்று கூறுகிறது. இந்திய அரசியல் நிலைமைகளை தேசிய நிலைமைகள் என்று கட்சித் தீர்மானங்கள் வர்ணிக்கின்றன. இம்முரண்பாடு இ.பொ.க.(மா-லெ)யின் இரட்டை தேசியக் கொள்கையின் வெளிப்பாடே.

❖ **'தேசிய விடுதலைப் போராட்டம்' 'தேசிய நிலைமைகள்' என்று கட்சித்திட்டமும் தீர்மானங்களும் குறிப்பிடு வதைக்கொண்டு இ.பொ.க(மா-லெ) இந்தியத் தேசிய மாயையிலிருந்து விடுபடவில்லை என்று கூறமுடியுமா?**

கூறமுடியாது என்று பு.ஜ. குழு மறுக்கிறது. இவை எல்லாம் ஒரு பொதுவான, மேலோட்டமான பொருளில் கூறப்படுபவை தானேயன்றி இந்தியத் தேசிய மாயையைக் குறிக்காது என்று அது கூறுகிறது. ஆனால் பு.ஜ. குழுவின் இந்த மறுப்பு பொய்யானதும், போலி யானதும் ஆகும்.

காலனி, அரைக்காலனி தேசங்கள் பற்றிக் கூறும் சமரன், முன்னோடிக் குழுவினர் அங்கெல்லாம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் விளைபொருளாக தேசியம் அமைகிறது என்று கூறுகின்றனர். (சமரன், செப் 1982, பக்.6) இது இந்தியாவுக்கும் பொருந்தக்கூடியதாகும். சமரன் கட்டுரைக்கு மறுப்பு எழுதிய பு.ஜ. குழுவினர் காலனி, அரைக்காலனி தேசம் பற்றிய வரையறையில் இனக்கூறு விடுபடுவதை விமர்சிக்கவில்லை. ஆனால் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மட்டும் இன்றி நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக எழுச்சியுறுவதுதான் தேசியம் என்று திருத்தம் கூறுகின்றனர்.

படிப்பகம்

www.padippkam.com



(பு.புயல் ஏப். 1983. பக் 17) தமது 1977 அரசியல் தீர்மானத்தில் இந்திய "தேசியத் திட்டம் ஒன்றை முன்வைத்து ஆளும் வர்க்கங்களின் பாசிபிசத்தை முறியடிப்போம்" என்று ஒரு தீர்மானமே நிறைவேற்றி யிருக்கிறார்கள். எனவே ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்தியத் தேசியம் என்பதில் பு.ஜ. குழுவுக்கு மாறுபாடு எதுவும் இல்லை. இத்தகைய திட்டவட்டமான பொருளில்தான் கட்சித் திட்டத்திலும் தீர்மானங்களிலும் இந்தியத் தேசியம் என்ற சொற்கள் ஆளப்படுகின்றனவேயன்றி பு.ஜ. குழு கூறுவதுபோல பொதுவான மேலோட்டமான பொருளில் அல்ல.

### ❖ தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு குறித்து இக்குழுக்களின் கருத்து என்ன?

ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு முற்றிலும் போதாதது என்பது சமரன், முன்னோடி குழுக்களின் கருத்தாகும். தேசம் பற்றிய ஸ்டாலினுடைய ஆய்வுகள், "உலகத்தின் ஒரே பகுதியைப் பற்றியதாகவும், ஒருவகையைச் சார்ந்த தேசத்தைப் பற்றியதாகவும், ஒரு திட்டவட்டமான சகாப்தத்தைச் சார்ந்த வளர்ந்து வரும் முதலாளித்துவ சகாப்தத்தைச் சார்ந்த, ஒரு வரலாற்றுக் கால கட்டத்தைப் பற்றியதாகவும் இருந்தது" எனவே, "காலனிய, அரைக் காலனிய உலகத்துக்கு-ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்கா முழுவதற்கும் அது முற்றிலும் போதாததாக இருந்தது" என்று (மேற்படி சமரன் கட்டுரை) அவர்கள் கூறுகிறார்கள்.

அதே நேரத்தில் கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருப்பதையும் இக்குழுக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இது அவர்களுடைய காலனிய, அரைக் காலனிய தேசக் கோட்பாட்டிற்கு எதிரானதாகும். தேசிய இனங்களின் சுயநிர்ணயஉரிமை என்பது தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்புக்கு உட்பட்டது.

ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு போதுமானதல்ல என்று சமரன், முன்னோடி குழுக்கள் கூறுவதை பு.ஜ. குழு ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்தியத் தேசியம் என்ற கருத் தாக்கத்தை ஏற்றுக் கொண்டிருப்பதன் மூலம் தன்னுடைய நிலைக்கே அது முரண்படுகிறது.



### ❖ காலனி, அரைக்காலனி நாடுகளில் ஏகாதிபத்தியஎதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஆகியவற்றின் விளைபொருளே தேசியம் என்று கூறுவதில் தவறு என்ன இருக்கிறது?

தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பை இது மறுத்துவிடுகிறது என்பதுதான் இதன் முக்கியமான தவறாகும். தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு பிரதானமாக இருகூறுகளைக் கொண்டதாகும். முதலாவது இனக்கூறு; இரண்டாவது சமுதாயக்கூறு. பொதுமொழி; பொது பிராந்தியம் முதலானவை இனக்கூறு. முதலாளித்துவப் பொருளாதார ஒருங்கிணைப்பு சமுதாயக்கூறு.

மேலும் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின்படி தேசிய சமூகமும், அரசு சமூகமும் வெவ்வேறாகும். ஒரு பல்தேசிய அரசு சமூகம், ஒருகாலும் ஒரு தேசிய சமூகமாக முடியாது.

காலனி, அரைக்காலனி தேசம் அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தேசியம் என்ற கருத்து தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின் மேற்கூறிய அம்சங்களை நிராகரித்து இனக்கூறற்ற தேசம் பற்றிய வரையறுப்பை முன்வைக்கிறது 'தேசம் என்பது இனக்கூறற்றது; தேசிய சமூகமும், அரசு சமூகமும் வெவ்வேறு அல்ல; பல்தேசிய அரசு சமூகமாயிருப்பினும் அரசு சமூகம் அனைத்தும் தேசிய சமூகமே;' காலனி, அரைக்காலனி தேசம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தேசியம் என்ற கருத்தாக்கம் தேசம் பற்றித் தரும் புதிய வரையறுப்பு இதுதான். இனக்கூறு இல்லாத தேசம் பற்றிய இந்த வரையறுப்பு சனநாயகப் புரட்சிக்கும் தேசிய உருவாக்கத்துக்கும் உள்ள தொடர்பையும், விவசாயப் புரட்சிக்கும் தேசிய இயக்கத்திற்கும் உள்ள தொடர்பையும் துண்டிக்கும் தேசிய சூனியவாதமாகும்; பல்தேசிய அரசு சமூகத்தை தேசிய சமூகமாகக் காட்டும் ஏகாதிபத்தியவாதம் ஆகும்.

### ❖ அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய ஏகாதிபத்திய சகாப்தத்திலும் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பு பொருந்தும் என்றால் இச்சகாப்தத்தில் தேசியப் பிரச்சினையில் ஏற்பட்ட மாற்றம்தான் என்ன?

ஏகாதிபத்திய சகாப்தத்தில், "உலகம் முழுவதும் சில ஒடுக்கும் தேசங்களாகவும், மிகப் பல ஒடுக்கப்பட்ட தேசங்களாகவும் பிரிந்து விட்டன" என்று லெனின் (1920ல்) கூறியிருக்கிறார். "அதற்கு முன்னால் தேசியஇனப் பிரச்சினை என்பது தேசியஇன ஒடுக்குமுறையை

www.padippkam.com



எதிர்ப்பது என்ற பகுதிப்பிரச்சினையாக மட்டும் இருந்தது; அதற்குப் பிறகு தேசிய இனப்பிரச்சினை என்பது ஒடுக்கப்பட்ட மக்கள், காலனிய, அரைக்காலனிய நாடுகள் ஆகியவற்றை ஏகாதிபத்திய அடிமை நுகத்தடியிலிருந்து விடுதலை பெறச் செய்தல் எனும் பொதுப் பிரச்சினையாக அது மாறியிருக்கிறது" என்று ஸ்டாலின் கூறியிருக்கிறார். "தேசியப் பிரச்சினையின் முக்கிய அம்சமும், சுயநிர்ணயஉரிமையும் பொதுவான சனநாயக இயக்கத்தின் ஒரு பகுதியாக இதுவரை இருந்துவந்தது முற்றுப் பெற்றுவிட்டது. அது பொதுவாகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் பிரிக்க முடியாத பகுதியாக ஏற்கனவே மாறிவிட்டது" என லெனினை மேற்கோள்காட்டி மாவோ கூறியிருக்கிறார்.

இவற்றின் மூலம் மார்க்சிய ஆசான்கள் உணர்த்துவது என்னவெனில் ஏகாதிபத்திய சகாப்தத்தில் எந்த ஒரு தேசிய, சனநாயக இயக்கமும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கடமையை நிறைவேற்றாமல் வெற்றிபெற முடியாது; எந்த ஒரு தேசியஇயக்கமும் சனநாயக இயக்கமாக மட்டுமின்றி ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்க மாகவும் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் பிரிக்க முடியாத பகுதியாகவும் இருக்கும்; என்பதைத்தானேயன்றி தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பை மாற்ற வேண்டும் என்பதையல்ல. இந்த சகாப்தத்திலும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உலகப் பாட்டாளி வர்க்க இயக்கம் வலியுறுத்தி வருவது தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின் அடிப்படையிலேயாகும்.

### ❖ சீனத்தில் தேசியப் பிரச்சினைக்கு மாவோ கையாண்ட கொள்கையே எல்லா காலனி, அரைக்காலனி நாடுகளுக்கும் பொருந்தும் என்பது சரியா?

ஏகாதிபத்தியத்திடமிருந்து சீனத்திற்கு விடுதலை; சீனத்திலிருக்கும் எல்லா தேசிய இனங்களுக்கும் சமத்துவம், சுயநிர்ணய உரிமை; அனைத்து தேசிய இனங்களின் ஒரு விருப்பப்பூர்வமான ஒன்றியக் குடியரசு என்பது மாவோ சீனத்தில் பின்பற்றிய தேசியக் கொள்கை. இக்கொள்கை சீனம் ஒரு அரைக்காலனி நாடு என்பதால் மட்டும் வகுக்கப்பட்டதல்ல. ஏகாதிபத்தியத்திடமிருந்து சீனத்திற்கு விடுதலை என்பது மட்டுமே அது ஒரு அரைக்காலனி நாடு என்பதால் முன் வைக்கப்பட்ட கொள்கை. எல்லா தேசிய இனங்களுக்கும் சமத்துவம், சுயநிர்ணய உரிமை, விருப்பப்பூர்வமான ஒன்றியக் குடியரசு என்ப தெல்லாம் சீனம் ஒரு அரைக்காலனி நாடாக இருந்தாலும் இல்லா விட்டாலும் ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசப்



பாட்டாளி வர்க்கம் மேற்கொள்ள வேண்டிய கொள்கை. எனவே இது எல்லா காலனி, அரைக்காலனி நாடுகளுக்கும் பொருந்தாது. அதாவது ஒற்றைத் தேசிய அரசு சமூகமாயிருக்கும் காலனி, அரைக்காலனி நாடுகளுக்கோ, ஒடுக்கும் தேசிய இனம் இல்லாத பல்தேசிய அரசு சமூகமாயிருக்கும் காலனி, அரைக்காலனி நாடுகளுக்கோ இது பொருந்தாது (எ-டு. இந்தியா, வியட்நாம்)

இந்தோ சீனா முழுமையாகப் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கீழ் ஒரு காலனிய பல்தேசிய அரசு சமூகமாயிருந்த போது ஹோசிமின், சீனத்தில் மாவோ கையாண்ட தேசியக் கொள்கையைப் பின்பற்ற வில்லை. அங்கு ஒடுக்கும் தேசிய இனம் எதுவும் இல்லாததால். ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்ட பல்தேசிய சிறைக்கூடமாக மட்டும் இந்தோசீனா இருந்ததால் அவர் ஏகாதிபத்தியத்திடமிருந்து வியட்நாம் தேசிய விடுதலை என்ற முழக்கத்தை மட்டும் முன் வைத்தார். ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தோசீனா விடுதலை, இந்தோ சீனாவிற்குள் தேசிய இனங்களின் சமத்துவம், சுயநிர்ணய உரிமை, தேசிய இனங்களின் விருப்பப்பூர்வ ஒன்றியக் குடியரசு என்றெல்லாம் முன்வைத்து இந்தோசீனம் முழுமைக்கும் ஒரே கட்சி, ஒட்டுமொத்தப் புரட்சி என்ற கொள்கையை அவர் நடைமுறைப் படுத்தவில்லை.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் இங்கு தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகள் இங்குள்ள தேசிய இனங்களின் அரசுரிமையை மறுத்து அவற்றின் இருப்பையே 'இந்திய தேசியத்தால்' ஒழித்துக்கட்டும் முயற்சியில் இருக்கின்றன. இந்தியத்தேசியம் என்பது இங்கு ஒடுக்கும் தேசிய இனமாக இல்லை. மாறாக தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகளின் ஏகாதிபத்தியவாதமாக இருக்கிறது. எனவே இந்தியாவில் பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை என்பது ஒவ்வொரு தேசிய இனமும் ஏகாதிபத்தியத்திடமிருந்து மட்டுமின்றி தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத் தியத்திடமிருந்தும் விடுதலை என்பதாக இருக்கிறது.

எனவே எல்லா அரைக்காலனி, காலனி நாடுகளுக்கும் சீனா மாதிரியான தேசியக் கொள்கை என்பது முற்றிலும் தவறானதாகும்; தேசியப் பிரச்சினையில் நாடுகளுக்கிடையில் இருக்கும் வேறுபாடு களைப் பார்க்கத் தவறுவதாகும்.

### ❖ ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒரே கட்சி, ஒட்டுமொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டை நிறைவேற்ற ஒடுக்கும் தேசிய இனப்பாட்டாளி வர்க்க இயக்கம்

படிப்பகம்

www.padippkam.com



**ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்பது ஏன்? அந்நாட்டின் பாட்டாளி வர்க்கக் கட்சி தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகக் கூறி ஒரே கட்சி ஒட்டுமொத்தப்புரட்சி என்ற நிலைப்பாட்டை மேற்கொள்ள முடியாதா?**

ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் உள்ள ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசிய இனத்தின் மீது ஒடுக்கப்படும் தேசிய இன மக்களுக்கு வெறுப்பும், பகையும் அதனால் அதிலிருந்து விடுபட்டு தனியாகச் செல்ல வேண்டும் என்ற வேகமும் இருப்பது இயல்பு. இந்த நிலையில் பல்தேசிய பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையை சாதிக்க வேண்டுமானால் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம், ஒடுக்கப்படும் தேசிய இனங்களிடமுள்ள வெறுப்பு, பகை உணர்வுகளைக் களையவேண்டும். அதற்கு அவற்றின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது மட்டுமின்றி அதற்காகத் தன் சொந்த மக்களிடத்து—ஒடுக்கும் தேசிய இன மக்களிடத்து—இடை விடாது போராடவும் வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளிகளிடையே ஒற்றுமை சாத்தியமில்லை. இது ஒடுக்கும் தேசிய பாட்டாளி வர்க்கத்தின் கடமையினை ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் கடமையிலிருந்து வேறுபடுத்துகிறது. தேசிய அடையாளம் இல்லாத பொதுவான பாட்டாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கக் கட்சி என்று எதுவும் இல்லாததால் தேசிய அடையாளங்களுக்கேற்ப அவற்றின் கடமைகள் மாறுபடுவது தவிர்க்க முடியாததாகும். எனவே ஒடுக்கும் தேசிய பாட்டாளி வர்க்கம் தனது கடமையை நிறைவேற்றாத நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் ஒரு பொதுவான கட்சி, பொதுவாக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்ற முறையில் ஒரே கட்சி, ஒட்டுமொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டைச் செயல்படுத்துவது சாத்தியம் இல்லை. இந்த உண்மையைப் புறக்கணித்து சமரன், முன்னோடி, பு.ஜ. குழுக்கள் ஒரு அரசு எல்லைக்குள் ஒரே கட்சி ஒட்டுமொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டை முன்னிறுத்துவதன் மூலம் அவை ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் தன்னுணர்வை இழந்து ஒடுக்கும் பெருந்தேசியவாதத்துக்குப் பலியாகி விட்டிருக்கின்றன.

❖ **ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லாத போது அல்லது ஒடுக்கும் தேசிய இனத்தில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துச் செயல்படும் பாட்டாளி வர்க்க இயக்கம் இல்லாதபோது ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஒரே கட்சி, ஒட்டுமொத்தப் புரட்சி என்ற கோட்பாட்டைச் செயல்படுத்துவதில் என்ன தடை இருக்கமுடியும்?**



முதலில், ஒடுக்கும் தேசிய இனம் இருந்து அதில் உள்ள பாட்டாளி வர்க்கக் கட்சி ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்போது ஒரே கட்சி, ஒட்டு மொத்தப்புரட்சி ஏன் சரியும் சாத்தியமும் ஆகும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி என்பது ஒட்டுமொத்தமாக எதிரி வீழ்த்தப் படுவதைக் குறிப்பதாகும். இது இயல்பாகவே ஒடுக்கப்படும் பிற தேசிய இனங்களின் விடுதலையாகவும் அமைந்து விடுகிறது. எனவே ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்திருக்கும் நிலையில் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய தேசிய விடுதலை மற்றும் புரட்சியின் வெற்றிக்கே ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் இணைந்து முழுமையான வெற்றிக்குப் பாடுபடுவது அவசியமாகும். இதனால் தான் இங்கு ஒரே கட்சி, ஒட்டுமொத்தப்புரட்சி சரியும், சாத்தியமும் ஆகும் என்கிறோம்.

ஒடுக்கும் தேசிய இனம் இல்லாதபோது நிலைமை முற்றிலும் மாறிவிடுகிறது. இங்கு எந்த ஒரு ஒடுக்கப்படும் தனி தேசிய இனத்தின் விடுதலையும் எதிரியை முற்றாக வீழ்த்துவதை நிபந்தனையாகக் கொண்டதல்ல. மேலும் எந்த ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலையும் பிற தேசிய இனங்களின் விடுதலைக்குக் காரணமாகி விடுவதும் இல்லை. இந்நிலையில் ஒரே கட்சி, ஒட்டு மொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டினைச் செயல்படுத்துவது எந்த ஒரு தேசிய இனத்தின் விடுதலையும் ஒட்டுமொத்தமாக எதிரி வீழ்த்தப் படும்வரை சாத்தியமற்றதாக்குவதாகும்; இயல்பாகவே அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், வரலாறு மற்றும் அமைவிடம் ஆகியவற்றின் சாதக, பாதக அம்சங்களில் ஏற்றத்தாழ்வுகள் கொண்டிருக்கும் பல்தேசிய இனங்களில் முன்னேறிய, சாதகமான தேசிய இனம் முதலில் விடுதலை அடைவதையும், அதன் விடுதலை பிற தேசிய இனங்களின் எழுச்சிகளைத் தோற்றுவிக்கும் வாய்ப்புகளையும் தடுத்து நிறுத்துவதாகும். ஒடுக்கும் தேசிய இனம் இருந்து அதைவிட ஒடுக்கப்படும் தேசிய இனங்களில் புரட்சிகர எழுச்சிகளும், பாட்டாளி

படிப்பகம்

www.padippkam.com



வர்க்க இயக்கமும் முன்னணியில் இருக்கும்போதும்—அதாவது ஒடுக்கும் தேசிய இனத்தில் பாட்டாளி வர்க்க இயக்கமும், புரட்சிகர இயக்கமும் இல்லாது அல்லது பலவீனமாக இருக்கும்போதும்—இதுதான் நிலைமையாகும்.

எனவே ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஒரே கட்சி, ஒட்டுமொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட வேண்டும் என்பது இத்தகைய நிலைமைகளில் பிற்போக்கான முழக்கமேயன்றி புரட்சிகரமானதல்ல. இதனால் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியதாகும்.

நாம் இப்படிக் கூறுவதை "பாட்டாளி வர்க்கக் கட்சி களுக்குள்ளும் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்டுகள்தான் தலைமை தாங்கவும், பிற பிரிவின் விடுதலைக்கு வழிவகுக்கவும் வேண்டியவர்கள் என்கிற பெருந்தேசிய இனவாதம் பொதிந்திருக்கிறது" என்றும் "இரசியாவிலும், சீனாவிலும் கட்சி பலம் பெறுவதற்கு முன்பே அதன் துவக்கத்திலேயே ஒரே கட்சி, ஒட்டுமொத்தப்புரட்சி திட்டம் முன்வைத்து செயல்பட்டனர், இரசியாவில் அத்திட்டம் மேற்கொண்டு சில ஆண்டுகளுக்குப் பிறகு தான் தேசிய இனப் பிரச்சினைப் பற்றிய தீர்மானம் சேர்க்கப்பட்டது" என்றும் கூறி பு.ஜ. குழுவினர் நிராகரிக்க விரும்புகிறார்கள். ஆனால் உண்மைகள் அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாகவே இருக்கின்றன.

முதலாவதாக, 'பெருந்தேசிய இனவாதம்' என்ற விமர்சனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது யாரிடம் இருக்கிறது? ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்குச் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து புரட்சி இயக்கத்தில் முன்னணியில் செயல்படும் நிலை இருந்தாலொழிய ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் தனது சொந்த தேசிய விடுதலைக்குத் தனியே ஒரு கட்சி கட்டி தலைமை தாங்க வேண்டும் என்று கூறும் நம்மிடத்திலா? அல்லது ஒடுக்கும் தேசிய இனத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; அது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தாலும் சரி, அங்கீகரிக்காவிட்டாலும் சரி; அது புரட்சி இயக்கத்தில் முன்னணியில் இருந்து செயல்படும் நிலை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி; ஒடுக்கும் தேசிய இனத்தில் நடக்கும் புரட்சியுடன் இணைந்த வடிவிலன்றி வேறு எவ்வகையிலும் ஒடுக்கப் படும் தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கங்கள் தமது சொந்த தேசிய விடுதலையினை அடையவிடாது தடுக்கும் ஓர் அரசு



எல்லைக்குள் ஒரே கட்சி, ஒட்டுமொத்தப்புரட்சி என்ற கோட்பாட்டைப் போதிக்கும் பு.ஜ. குழுவிடமா?

பு.ஜ. குழுவின் பெருந்தேசிய இனவாதம் அடுத்து அவர்கள் வைக்கும் வாதத்திலும் அப்பட்டமாக வெளிப்படுகிறது. இரசியா விலும், சீனாவிலும் கட்சி பலம்பெறும் முன்பே அதன் துவக்கத் திலேயே ஒரே கட்சி, ஒட்டுமொத்தப்புரட்சித் திட்டம் வைத்து செயல் பட்டனர் என்கின்றனர். இது தவறான வாதம் ஆகும். இரசியாவிலும், சீனாவிலும் கட்சி கட்டும் முயற்சியே அந்நாடுகளின் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கங்களிடமிருந்தே தொடங்கியது. லெனினும், மாவோவும் அந்நாடுகளின் பெருந்தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத் தலைவர்கள். அடுத்து, அத்திட்டம் மேற்கொண்டு சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் தேசிய இனப் பிரச்சினை பற்றிய தீர்மானம் சேர்க்கப்பட்டது என்கிறார்கள். இரசியாவில் இரண்டாவது காங்கிரசில் (1903) தான் முறையான கட்சி நிறுவப்பட்டது. அதில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதல் காங்கிரஸ் பற்றி ஸ்டாலின் கூறுகிறார்: அதில் ஒன்பது பேர்தான் கலந்து கொண்டார்கள். லெனின் கலந்து கொள்ளவில்லை. அந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கை அநேக துறைகளில் அதிருப்திகரமாக இருந்தது. பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றி மௌனம் சாதித்தது. முதல் காங்கிரஸ் நடைபெற்ற போதிலும் இரசியாவில் எந்தவிதமான சமூக சனநாயகக் கட்சியும் ஒழுங்காக நிறுவப்பட வில்லை. தனித்தனியாக இருந்துவந்த மார்க்சியக் குழுக்களையும் அமைப்புகளையும் ஒன்றுபடுத்தி அமைப்பு அளவில் ஒரே ஒரு கட்சியாக வளர்த்தெடுப்பதில் அந்தக் காங்கிரஸ் வெற்றியடைய வில்லை. உள்ளூர்களின் வேலையை ஒருமுகப்படுத்தக்கூடிய ஒரே ஒரு பொதுவான வேலைமுறை வகுக்கப்படவில்லை. எல்லோருக்கும் பொதுவான மத்தியச் செயலகமோ, கட்சி விதிகளோ, கட்சித் திட்டமோ ஏற்படவில்லை [சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷ்விக்) வரலாறு]. சரியாகச் சொன்னால் முதலாவது காங்கிரசில் (1898) முறையான கட்சி நிறுவப்படவில்லை என்பதே. இரண்டாவது காங்கிரசில் லெனின் கலந்துகொண்டார். கட்சித் திட்டமும், அமைப்பு விதிகளும் நிறைவேற்றப்பட்டு முறையான கட்சி நிறுவப்பட்டது. அதில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டது. எனவே சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் சேர்க்கப்பட்டது என்கிற பு.ஜ. குழுவின் வாதம் தவறானது.

இரசியாவிலும், சீனாவிலும் கட்சிகட்டும் முயற்சி ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்திடமிருந்து தொடங்கியது. அவை

www.padippkam.com



ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தேசியக் கொள்கையைக் கொண்டிருந்தன. ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கங்களைவிட புரட்சிகர இயக்கத்தில் அவை தொடர்ந்து எவ்வளவோ முன்னணியில் இருந்துவந்தன.

இரசிய, சீனக் கட்சிகளின் பலமின்மை பற்றிக் கூறும் பு.ஜ. குழு அந்நாடுகளின் ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் பற்றிய வேறுபாடின்றி பொதுவாகவும், தவறாகவும் கூறி தன் நிலைக்கு ஆதரவு தேடுகிறது.

இவைகளெல்லாம் பு.ஜ. குழு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுய உணர்வை இழந்து ஒடுக்கும் பெருந்தேசிய இனவாத உணர்வுக்குப் பலியாகிவிட்டிருப்பதன் வெளிப்பாடுகளேயாகும்.

### ❖ தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்திருக்கும் இ.பொ.க.(மா-லெ) எந்தச் சூழ்நிலைகளில் தேசிய விடுதலையை ஆதரிக்கிறது? அல்லது பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்க அனுமதிக்கிறது?

இ.பொ.க.(மா-லெ) கட்சித்திட்டம் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உறுதியாக ஆதரிப்பதுடன் தன்னை நிறுத்திக்கொள்கிறது. இக்கட்சியின் குழுக்கள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை உறுதியாக ஆதரிக்கும் அதே வேளையில் தேசிய விடுதலை மற்றும் பிரிவினைக் கோரிக்கைகளை ஆதரிப்பது அல்லது தலைமை தாங்குவது பற்றிய பிரச்சினையில் மாறுபட்ட நிலைப்பாடுகளையே கொண்டுள்ளன. முன்னோடி, சமரன் குழுக்கள் ஈழதேசத்தின் விடுதலையை ஆதரிக்கின்றன. மேலும் பாட்டாளி வர்க்கம் ஒரு சனநாயகப்புரட்சிக்கான திட்டத்துடன் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டும் என்றும் கூறுகின்றன. அதற்கான காரணங்களாக அவை கூறுவதாவது: 1. இலங்கையின் அரைக் காலனித்துவ அரைநிலப்பிரபுத்துவ அரசு சிறுபான்மை இனத்தவரை ஒடுக்குவதையே தனது வாழ்விற்கு ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. 2. சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் பேரினவாதத்திற்கு இரையாகி ஈழத்தமிழ்இனம் மற்றும் பிற தமிழ் பேசும் மக்களின்மீது சிங்கள ஆளும்வர்க்கம் நடத்தும் இன ஒடுக்கு முறைக்குத் துணை போகிறது. (சமரன், மார்ச் 84 பக். 25-26, 30)



இந்தக் காரணங்களை இந்தியாவுக்குப் பொருத்தினால் இந்தியாவில் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்கின்ற, அவற்றுக்குத் தலைமை தாங்குகின்ற தீர்மானங்களை இக்குழுக்கள் மேற்கொள்ள வேண்டும். இந்திய ஆளும் வர்க்கங்களின் வாழ்க்கை தேசிய (இன) ஒடுக்குமுறையை ஆதாரமாகக் கொண்டதே. இங்கு ஒடுக்கும் தேசிய இனமே இல்லை. அவர்கள் கூறும் சலுகை பெற்ற 'இந்தி தேசிய இனத்திலோ' தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பாட்டாளி வர்க்கத்தைத் தேடினாலும் இவர்களால் கண்டுபிடிக்க முடியாது.

இருந்தும் இக்குழுக்கள் இந்தியாவில் தேசிய விடுதலைக்கு ஆதரவு அல்லது தலைமை தாங்குவது என்று நிலைப்பாட்டை மேற்கொள்ளவே இல்லை. மாறாக "புதிய சனநாயகப் புரட்சியில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கானப் போராட்டம் முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று" என்றும் "பிரிவினை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமைக்கான தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது பிற தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் கடமை" என்றும் இந்தியா பல்தேசங்களை உள்ளடக்கிய நாடாக இருப்பதால் புரட்சியின் வெற்றிக்குப் பின் ஒவ்வொரு தேசமும் அதனதன் மக்கள் குடியரசுகளை நிறுவிக்கொள்ளும், பல்வேறு தேசங்களின் மக்கள் குடியரசுகளும் சுயவிருப்பத்தோடு ஒன்றிணை வதன் மூலம் ஒரு கூட்டாட்சியின் வடிவத்தில் இந்தியாவின் மக்கள் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்படும்" என்றும் தேசியப் பிரச்சினையில் சீனத்தின் பாதையே இந்தியாவின் பாதை (ஏகாதி பத்தியத்திடமிருந்து சீனத்திற்கு விடுதலை, சீனத்திலிருக்கும் தேசிய இனங்களுக்கு சமத்துவம், சுயநிர்ணய உரிமை என்ற கொள்கை சீனத்தில் பின்பற்றப்பட்டது போல இந்தியாவின் சுயநிர்ணயம், இந்தியாவில் இருக்கும் தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்கிறார்கள்) என்றும் கூறுவதுடன் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள்.

பு.ஜ. குழு இவர்களுடன் ஒன்றுபடவில்லை. அது ஈழ விடுதலையை எப்போதுமே ஆதரிக்கவில்லை. ஈழத்திலும் சரி, இந்தியாவிலும் சரி சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவு என்பதுடன் அது தன்னை நிறுத்திக் கொண்டுள்ளது. ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் பெருந்தேசிய வெறிக்குப் பலியாகி ஒடுக்கும்-ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் இணைந்து வாழவே முடியாது என்ற நிலையிலும் கூட தனிக்கட்சி, தனிப்புரட்சி என்பது தர்க்க ரீதியில் மட்டுமே நியாயமாகும் (செயல்படுத்தக் கூடாது என்று பொருள்) என்றும்,

படிப்பகம்

www.padippkam.com



ஒடுக்கும் தேசத்தில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் கம்யூனிஸ்டுகள் ஒரு சிலர் இருந்தாலே போதும்–ஒடுக்கப்படும் தேசங்களைவிட அங்கு புரட்சிகர இயக்கம் பலமாகவும், முன்னணியிலும் இல்லாவிட்டாலும்–தனிக்கட்சி, தனிப்புரட்சி என்பது தவறானது என்றும் வாதிடுகிறது பு.ஜ. குழு. மேலும் "தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கானப் போராட்டம் எப்போதுமே பாட்டாளி வர்க்கக் கட்சியின் பிரதானப் பணியாகிவிட முடியாது" என்று முன்னோடி, சமரன் குழுக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கிறது. கூடவே "குடியரசுகளின் ஒன்றியம் என்பது தேசிய இன முதலாளிகளின் தேசியவாத நோக்கம், திட்டம், கொள்கை" என்றும் சமரன், முன்னோடி குழுக்களை விமர்சித்துச் சாடுகிறது. (குடியரசு களின் ஒன்றியம் என்பது இரசியாவில் லெனினும், சீனத்தில் மாவோவும் பின்பற்றிய கொள்கைகள்தான். பு.ஜ.வின் சாடல் இவர்களுக்கும் பொருந்தலாம்) மேலும் "ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்துவதாக அதை வீழ்த்துவதாக இருக்கும் போதும், தொழிலாளி வர்க்க இயக்க வளர்ச்சியின் நலன்களுக்கு எதிராக இல்லாத போதும்தான்" தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரிக்க முடியும் என்று (தலைமை தாங்குவது பற்றிய கேள்விக்கே இடமில்லை) கூறும் பு.ஜ. குழு இதுவரை இந்தியாவிலும் இலங்கை யிலும் தேசிய விடுதலை இயக்கம் எதையும் ஆதரிக்கும் நிலையை மேற்கொள்ளவில்லை. வடகிழக்கு இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரித்து எழுதி வந்ததாக சமீபத்தில் பு.ஜ. குழு பொய்கூறி வருகிறது. ஏப்ரல் 1980 பு.பு.வில் எழுதிய கட்டுரையில் தலைப்புகள்தான் வடகிழக்கிந்தியாவில் தேசிய விடுதலை இயக்கத் தையும் பாட்டாளி வர்க்கத் தலைமையிலான தேசியவிடுதலையையும் ஆதரிப்பதாக இருந்ததே தவிர கட்டுரையின் உள்ளே பிரிந்து போகும் உரிமைக்கு மேல் வேறு எதையும் அது ஆதரித்து எழுத வில்லை. ஈழப் பிரச்சினையில்கூட இதே சந்தர்ப்பவாதத்தைத்தான் பு.ஜ. குழு பின்பற்றி வருகிறது. உண்மையிலேயே வடகிழக்கு இந்தியாவில் தேசிய விடுதலை இயக்கத்தையும், பாட்டாளி வர்க்கத் தலைமையிலான தேசிய விடுதலையையும், பு.ஜ. குழு ஆதரிக்கு மானால் தனது சொந்தத் (தமிழ்) தேசத்தின் விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதற்கும், அதற்குத் தலைமை ஏற்பதற்கும் எதுவும் தடையாய் இருக்க முடியாது. உண்மையில் பு.ஜ. குழுவின் இந்தச் சந்தர்ப்ப வாதம் சமரன், முன்னோடி குழுக்களைவிட அது பெருந்தேசிய வாதத்திற்கு மிகத் தீவிரமான முறையில் பலியாகிவிட்டிருப்பதன் வெளிப்பாடேயாகும்.



### ❖ சமரன், முன்னோடி, பு.ஜ. குழுக்களின் சுயமுரண் பாட்டிற்கும், அவை ஒன்றுடன் ஒன்று முரண்படுவதற்கும் இ.பொ.க.(மா-லெ)யின் இரட்டை தேசியக்கொள்கை தான் காரணம் என்று கூற முடியுமா?

அது மட்டுமல்ல; அவை இந்தியத் தேசிய மாயையிலிருந்து முற்றிலும் விடுபடாமல் இருப்பதற்குக்கூட இ.பொ.க.(மா-லெ)யின் இரட்டை தேசியக் கொள்கைதான் காரணம். இந்தியப் பொது வுடைமை இயக்கம் அதன் தொடக்கம் முதலே இந்தியாவை ஒரு தேசம் எனக் கருதியே தனது வேலைத்திட்டத்தை வகுத்து வந்திருக் கிறது. 1942-43ல் தான் முதன் முதலாக அது தேசம் பற்றிய மார்க்சியக் கோட்பாடுகளை அறிந்தது; இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருப்பதை உணர்ந்து கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை கோரிக்கையை இணைத்தது. அது கூட தேசிய இன அடிப்படையில் இந்தியா பிளவுண்டுவிடக் கூடாது என்ற நோக்கத்திற்காகவே. கட்சி பிளவுண்டபின் திரிபு வாதிகள் அந்தக் கோரிக்கையை கட்சித் திட்டத்திலிருந்து நீக்கி விட்டார்கள். ஆனால் இ.பொ.க.(மா-லெ) தனது கட்சித் திட்டத்தில் மீண்டும் சுயநிர்ணயஉரிமைக் கோரிக்கையை இணைத்துக் கொண்டது. இது 1942-1953 கட்சித் திட்டத்தில் இருந்ததை மீட்டமைத்துக் கொண்டதேயன்றி இந்தியாவின் தேசியப்பிரச்சினைகளை பருண்மை யாக ஆய்வு செய்ததன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முடிவு அல்ல. எனவே இ.பொ.க.(மா-லெ)யின் தேசியக் கொள்கை இந்தியத் தேசியத்தை அடிப்படையாகவும், இந்தியா, தேசிய இன ரீதியில் பிளவுபடாமல் தடுப்பதை நோக்கமாகவும் கொண்டமைந்ததாகும். (பாட்டாளிவர்க்க ஒற்றுமையைப்பாதுகாப்பது என்று இதற்கு அடிக்கடி விளக்கம் அளிக்கப்படுகிறது) கட்சிக் குழுக்கள் தேசியக்கொள்கையில் தமக்குள் சுயமுரண்பாடுகளைக் கொண்டிருப்பினும் கட்சியின் இந்த அடிப்படையிலிருந்தும் நோக்கத்திலிருந்தும் விலகவில்லை.

அதனால்தான், தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின் அடிப் படையிலேயே கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டே முன்னோடி, சமரன் குழுக்கள் காலனி, அரைக்காலனி தேசம் பற்றியும், ஏகாதிபத்திய சகாப்தத்தில் தேசம் பற்றிய ஸ்டாலின் வரையறுப்பின் போதாமை பற்றியும் தத்துவ விளக்கம் அளிக்க முயல்கின்றன; தேசியக் கொள்கையில் சீனத்தில் மாவோ பின்பற்றிய கொள்கையே இந்தியாவுக்குப் பொருந்தும் கொள்கை என்கின்றன. ஈழத்தில் தேசிய விடுதலையை ஆதரித்தாலும் இந்தியாவுக்கு அது

www.padippkam.com



பொருந்தாது என்கின்றனர். ஸ்டாலின் வரையறுப்புக்காக சமரனுடன் போராடிய பு.ஜ. குழு ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மட்டுமின்றி நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக எழுச்சியுறுவதுதான் தேசியம் என இனக்கூறில்லாத தேசிய வரையறை வழங்குவதுடன் தேசியக் குடியரசுகளின் ஒன்றியம் என்ற கருத்தை கடுமையாகச் சாடுகிறது. தேசிய விடுதலையை ஆதரிப்பதில்லை என்ற மிக உறுதியான நிலையை மேற்கொண்டிருக்கிறது.

இவை எல்லாம் சுய முரண்பாடுகள் கொண்டவையாக இருப்பினும் பாட்டாளி வர்க்க ஒற்றுமை எனும் போலிப்பதாகையின் கீழ் இந்தியா தேசிய இன ரீதியில் பிளவுபடுவதைத் தடுப்பது மற்றும் இந்தியத் தேசியம் ஆகிய கட்சித் திட்டத்தின் நோக்கத்தையும், அடிப்படையையும் உறுதியாகப் பற்றி நிற்பதால் மேற்கொண்ட நிலைப்பாடுகளேயாகும்

இந்தியத் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட இ.பொ.க.(மா-லெ)யின் கட்சித் திட்டம், தேசிய இனங்களின் சுயநிர்ணயஉரிமையை அங்கீகரித்திருப்பது தேசத்திற்குள் தேசம் என்கிற ஏகாதிபத்தியவாதம் ஆகும். இது ஏகாதிபத்தியஎதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்தியத் தேசம் எனும் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்துக்கும் கட்சிக் குழுக்களின் தேசிய சூனியவாதத்துக்கும் காரணமாகியிருக்கிறது.

இ.பொ.க.(மா-லெ) குழுக்கள் உண்மையிலேயே புரட்சிகரகுழுக் களாக இருக்கவேண்டுமானால் அவை கட்சித் திட்டத்திற்கு முட்டுக் கொடுக்கும் வகையில் தமது தேசியக் கொள்கையை அமைக்கும் முயற்சிகளைக் கைவிட வேண்டும்; மார்க்சிய-லெனினிய அடிப் படையில் கட்சித் திட்டத்தில் உள்ள முரண்பாட்டை–இரு தேசியக் கொள்கையை–புரட்சிகரமான முறையில் தீர்க்கும் முயற்சியில் இறங்க வேண்டும்.

### ❖ இ.பொ.க. (மா-லெ)யின் தேசியக் கொள்கையில் உள்ள முரண்பாட்டை புரட்சிகரமான முறையில் தீர்ப்பதற்கும் இந்தியாவைத் தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதி பத்தியம் என்று வரையறுப்பதற்கும் என்ன தொடர்பு?

முதலாவதாக: இந்தியா ஒரு பல்தேசிய அரசு சமூகம். பல்வேறு தேசிய இனங்களின் அரசுரிமை மறுக்கப்பட்டு பலாத்காரமாக ஒன்றிணைக்கப்பட்டதால் உண்டான நாடு. இங்கு ஒடுக்கும் தேசிய இனம் இல்லை. இந்தியத் தேசம் என்ற பெயரால் பல்தேசங்களின் அரசுரிமை மறுக்கப்பட்டு அதன் அரசு எல்லை வரையப்பட் டிருப்பதால் இது ஓர் ஏகாதிபத்தியம். இந்தியா ஓர் அரைக்காலனி, அரைநிலப்பிரபுத்துவ நாடு என்ற வரையறையில் இந்த ஏகாதிபத்தியத் தன்மை இடம் பெறவில்லை.



இரண்டாவதாக: இந்த ஏகாதிபத்தியவாதத்தைச் செயல்படுத்தி வருவது தரகு முதலாளிய-பார்ப்பனிய சக்திகள். தரகு முதலாளிகள் தமது விரிந்த சந்தை நலன்களுக்காகவும் பார்ப்பனிய சக்திகள் தமது சமூக மேலாதிக்கத்தைக் கட்டிக்காத்துக் கொள்வதற்காகவும் இந்தியத் தேசியம் என்ற பெயரில் தேசிய ஒடுக்குமுறை ஏகாதிபத்தியக் கொள்கையைச் செயல்படுத்தி வருகின்றனர். எனவே இந்தியா ஒரு தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் ஆகும்.

இந்தியா ஒரு தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்ற வரையறுப்பு இந்தியத் தேசியம் என்பதன் ஏகாதிபத்தியப் பண்பை முற்றாக அம்பலப்படுத்தி அந்த மாயையிலிருந்து கட்சியை முற்றாக விடுவிக்கிறது. இவ்வாறு கட்சியின் தேசியக் கொள்கையில் உள்ள முரண்பாட்டைப் புரட்சிகரமான முறையில் தீர்த்து வைக்கிறது.

### ❖ இ.பொ.க. (மா-லெ) இந்திய ஆளும் பெருமுதலாளி வர்க்கத்தை தரகு முதலாளி வர்க்கம் என்றே வரையறுத் துள்ளது. தரகு முதலாளி என்றாலே தேசிய ஒடுக்கு முறையைக் குறிப்பதுதான். அப்படி இருக்கும் போது தேசிய ஒடுக்குமுறையைக் குறிக்க ஏகாதிபத்தியம் என்ற வரையறுப்பு ஏன்?

தரகு முதலாளிகளின் தேசிய ஒடுக்குமுறை ஒற்றை தேசியஅரசு சமூகத்திலும் பல்தேசிய அரசு சமூகத்திலும் வேறுபட்டதாகும். ஒற்றை தேசிய அரசு சமூகத்தில் அது தேசிய சனநாயக எழுச்சிகளை ஒடுக்குவதாக இருக்கும். ஆனால் பல்தேசிய அரசு சமூகத்தில் அது பல்தேசிய இனங்களின் அரசுரிமை மறுத்து ஒடுக்கி அவற்றின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் ஏகாதிபத்தியவாதமாய் இருக்கும். தேசிய ஒடுக்குமுறையில் உள்ள இந்த வேறுபாட்டைத் தெளிவுபடுத்த பல்தேசிய அரசு சமூகத்தில் உள்ள தேசிய ஒடுக்குமுறையை ஏகாதிபத்தியம் என வரையறுப்பது அவசியமாகும்.

படிப்பகம்

www.padippkam.com



**❖ இ.பொ.க.(மா-லெ) கட்சித் திட்டம் இந்தியாவை அரைக்காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாடு என்று வரையறுத்துள்ளது. தேசம் என்று வரையறுக்கவில்லை. நாடு என்பதே பல்தேசிய பண்பைக் குறிப்பது அல்லவா?**

இப்படித்தான் பு.ஜ. குழு வாதிடுகிறது. நாடு என்பது அரசு சமூகத்தைக் குறிக்கும் சொல்லாகும். ஓர் அரசு சமூகம் ஒற்றைத் தேசிய அரசு சமூகமாகவோ பல்தேசிய அரசு சமூகமாகவோ இருக்கலாம். எனவே நாடு என வரையறுப்பதே பல்தேசியப் பண்பைக் குறிப்பதாகும் எனக் கூறுவது முட்டாள்தனமானதாகும்.

**❖ முதலாளித்துவத்தின் உச்சகட்டமான நிதிமூலதன கால கட்டத்தையே ஏகாதிபத்தியம் என்று லெனின் குறிப்பிடுகிறார். தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதி பத்தியம் என்பது இதற்கு முரணானதல்லவா?**

ஏகாதிபத்தியம் என்பது தேசங்களின் அரசுரிமை மறுத்து அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துவதாகும் "காலனியக்கொள்கையும் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவத்தின் இந்த நவீன கட்டத்திற்கு முன்பே, முதலாளித்துவத்துக்கும் முன்பேகூட இருந்தவையே. அடிமையுடைமையை ஆதாரமாகக் கொண்டமைந்த ரோமானியப் பேரரசும் காலனியக் கொள்கையைப் பின்பற்றியது; ஏகாதிபத்தி யத்தைக் கையாண்டது" என்று ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற தனது புகழ்பெற்ற நூலில் குறிப்பிடுகிறார் லெனின். எனவே நிதிமூலதனக் காலகட்டத்திற்கு மட்டுமே உரியது ஏகாதிபத் தியம் என்பது தவறான கருத்தாகும். எனினும் சமுதாய-பொருளாதார அமைப்பு மற்றும் அதன் காலனியாதிக்கக் கொள்கைகளில் நிதி மூலதன காலகட்ட ஏகாதிபத்தியம் அதற்கு முந்திய காலகட்ட ஏகாதிபத்தியங்களிடமிருந்து வேறுபட்டதாகும். இந்தியா ஒரு தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்ற நமது வரையறுப்பு அதன் சமுதாய-பொருளாதார மற்றும் காலனியாதிக்கக் கொள்கை நிதி மூலதன ஏகாதிபத்தியத்தின் தன்மையிலிருந்து வேறுபடுவதைத் தெளிவுபடுத்துகிறது. இது பழைய வகைப்பட்ட ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் வரையறுப்பு என்றும் இதை முன்தள்ளுவதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கடமையை சிறுமைப்படுத்துவதாகவும் பு.ஜ. குழு விமர்சிக்கிறது. நமது தேசத்தின் மீது பழையவகைப்பட்ட ஏகாதிபத்திய ஆதிக்கம் இருக்கும்போது அதைக் கண்டுகொள்ளாமல் இருப்பதன் மூலம் அதை ஒழித்துக்கட்டிவிடவோ அல்லது நவீன



ஏகாதிபத்திய எதிர்ப்பைப் பெருமைப்படுத்திவிடவோ முடியாது. தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்பது நமது தேசத்தின் மீது பழைய வகைப்பட்ட ஏகாதிபத்திய ஆதிக்கம் மட்டும் அல்ல; நவீன ஏகாதிபத்திய ஆதிக்கமும் இருப்பதைத் தெளிவுபடுத்தும் வரையறுப்பு ஆகும். எனவே இது ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கைவிடுவதோ, சிறுமைப்படுத்துவதோ அல்ல. மாறாக அவ்வாறு கருதி நமது தேசத்தின் மீதான பழைய வகைப்பட்ட ஏகாதிபத்திய ஆதிக்கத்தை மூடிமறைப்பது நமது தேசத்தின் விடுதலைக்கும் சனநாயகப் புரட்சிக்கும் துரோகமிழைப்பதாகும்.

**❖ அரைநிலப்பிரபுத்துவம் என்பது இந்துப்பார்ப்பனியத் தன்மையையும் உள்ளடக்கிய முழுமையான பொருளைக் குறிப்பதில்லையா?**

குறிக்கும் என பு.ஜ. குழு தவறாக வாதிடுகிறது. அரைநிலப் பிரபுத்துவத்தை இந்தியா மட்டும் அல்ல உலகின் பல நாடுகள் கண்டிருக்கின்றன. அங்கெல்லாம் இந்துப் பார்ப்பனியம் இல்லை. எனவே அரைநிலப்பிரபுத்துவம் என்றாலே அது இந்துப்பார்ப்பனியத் தன்மையை உள்ளடக்கிய முழுமையான பொருள் கொண்டது என்று கூறமுடியாது. மேலும் பார்ப்பனியம் என்பது தேசிய ஒடுக்குமுறை மற்றும் சாதிய ஒடுக்குமுறை ஆகிய இரு பண்புக் கூறுகளைக் கொண்டது. இதில் சாதி ஒடுக்குமுறை நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறையுடன் பிரிக்கமுடியாதபடி பிணைந்திருக்கிறது. ஆனால் தேசிய ஒடுக்குமுறை அம்சம் அவ்வாறல்ல. எனவே இந்தியாவில்கூட அரை நிலப்பிரபுத்துவம் என்பது பார்ப்பனியத்தின் முழுப் பரிமாணத்தையும் வெளிப்படுத்துவதில்லை. அதற்கு மாறாக தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்பதில் உள்ள பார்ப்பனியம் என்பது சாதியத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளதால் அரைநிலப்பிரபுத்துவத்தையும் மேலும் தேசிய ஒடுக்குமுறையையும் குறிக்கிறது. எனவே இந்தியாவை சரியாகப் புரிந்துகொள்ள தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத் தியம் என்ற வரையறுப்பே மிகச் சரியானதாகும். பார்ப்பனியம் என்று குறிப்பதால் நாம் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டதாக பு.ஜ. குழு குற்றம் சாட்டுகிறது. ஆனால் அவர்களுடைய குற்றச் சாட்டில் பார்ப்பனியத்திலிருந்து நிலப்பிரபுத்துவத்தைப் பிரித்து தொடர்பற்றதாக்கும் விதண்டாவாதம் மட்டுமே எஞ்சியிருக்கிறது. இந்த விதண்டாவாதத்தின் காரணமாக தமிழக விடுதலைப் புரட்சியின் வெற்றி ஏகாதிபத்தியம், தரகு முதலாளிய-பார்ப்பனிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத் துவம் ஆகியவற்றுக்கெதிரான போராட்டத்தில் அடையப்படவேண்டும் என

படிப்பகம்

www.padippkam.com



நமது கட்சி ஆவணங்கள் பல இடங்களில் குறிப்பிட்டிருந்தும் அவர்களுடைய கண்களில் படவில்லை. மேலும் இந்த விதண்டா வாதத்தின் காரணமாகவே அவர்கள் கூற்றுப்படியே நிலப்பிரபுத்துவம் பார்ப்பனியத்தன்மையை உள்ளடக்கியதாக இருந்தும், நாம் பார்ப்பனியம் என்றவுடன் அதிலிருந்து நிலப்பிரபுத்துவம் எப்படி விடுபடும் என்பதையும் பு.ஜ. குழுவால் சிந்திக்க முடியவில்லை.

### ❖ பார்ப்பனிய எதிர்ப்பில் கருவறை நுழைவுப் போராட்டத்தின் இடம் என்ன?

திருவரங்கம் போன்ற கோயில்களின் கருவறைகள் பார்ப்பனியத்தின் கருவறைகள் ஆகும். பார்ப்பனியத்தின் சாதி ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை ஆகிய இரு ஒடுக்குமுறைகளும் ஒருங்கே குடியிருக்கும் கருவறைகளாகும். எனவே கருவறை நுழைவுப் போராட்டம் என்பது பார்ப்பனியத்துக்கு எதிரான ஒரு முழுமையான போராட்ட வடிவம் என்பதில் அய்யம் இல்லை. ஆனால் இத்தகைய போராட்டங்கள் தேசிய விடுதலைப் புரட்சியுடன் இணைக்கப்படும் போதுதான் பார்ப்பனிய எதிர்ப்பில் முழுமையான வெற்றியை ஈட்டமுடியும்.

சமீபத்தில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்திய பு.ஜ. குழுவினர் தேசிய விடுதலைப் புரட்சித் திட்டம் கொண்டவர்கள் அல்லர்; மாறாக இந்தியப் புரட்சித் திட்டம் கொண்டவர்கள். கடந்த இரண்டாண்டுகளாகப் பார்ப்பனிய எதிர்ப்பையே படிப்படியாக தமது பிரதான அரசியல் பணியாக மேற்கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாகவே சமீபத்தில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இவர்களுடைய கட்சி அரசியல் வாழ்வில் பிரதானப்பணியாகிவிட்ட பார்ப்பனிய எதிர்ப்பு பற்றி இ.பொ.க.(மா-லெ) கட்சித்திட்டத்தில் ஒரு வார்த்தைகூட இல்லை. இவர்களுடைய நடைமுறைக்கும் கட்சித் திட்டத்திற்கும் உள்ள முரண்பாட்டை கோட்பாட்டரங்கில் தீர்க்க முனைந்திருப்பார்களானால் இந்தியாவில் பார்ப்பனியத்துக்கும்—சாதி ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை—வர்க்கப் போராட்டத்துக்கும் உள்ள தொடர்பைச் சரியாகப் புரிந்துகொண்டிருப்பார்கள். மார்க்சிய-லெனினியத்தையும் சரியாகப் புரிந்து கொள்வதை நோக்கி முன்னேறி இருப்பார்கள். அப்போது இ.பொ.க.(மா-லெ) கட்சித் திட்டத்தின் குறைபாடுகளை உணர்ந்து களையும் முயற்சியில் தமிழக விடுதலைப் புரட்சி என்ற சரியான முடிவையும் அவர்கள் வந்தடைந்திருக்க முடியும்.



ஆனால் இ.பொ.க.(மா-லெ) கட்சித் திட்டத்தை எந்த நிலையிலும் பரிசீலனைக்கு உட்படுத்த அவர்கள் விரும்பவில்லை. அவ்வாறு பரிசீலனைக்குட்படுத்துவது மார்க்சிய-லெனினியத்தை விட்டு விலகி ஓடுவதாகும் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். இதன் காரணமாக அவர்களுடைய பார்ப்பனிய எதிர்ப்பு நடைமுறைக்கும் கட்சித் திட்டத்திற்கும் இடையிலான முரண்பாட்டைக் கோட்பாட்டரங்கில் தீர்க்கும் முயற்சியை மேற்கொள்வதற்குப் பதில் சந்தர்ப்பவாத விளக்கங்கள் மூலம் மூடிமறைக்கும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

---

### சமரன், முன்னோடி, புதிய ஜனநாயகம் குழுக்களின் கருத்துகளுக்கு ஆதாரம்:

1. தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டமும், விவசாயப் புரட்சியும் (சமரன், செப் 1982)
2. தமிழ் ஈழ விடுதலைப் போரை ஆதரிப்போம்! இந்திய அரசின் இராணுவத் தலையீட்டை எதிர்ப்போம் (சமரன் மார்ச் 1984)
3. ஒன்றுபட்ட நடவடிக்கைக்குத் தடை (சமரன், ஜூலை 1992)
4. இந்தியாவில் தேசிய இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாடு (முன்னோடி வெளியீடு எண் 1, ஜனவரி 1988)
5. வர்க்கப் போரில் இறங்கியுள்ள சமரன் மார்க்சிய-லெனினியத்தை ஏந்திவர வேண்டும். (புரட்சிப்புயல், ஏப்ரல், 1983)
6. "உலகத் தொழிலாளர்களே பிளவுபடுங்கள்" (தனது கட்சிக்கு உள்ளும், வெளியிலும் தனது நம்பிக்கைக்குரியவர்களுக்கு மட்டும் 4.ஏப். 1993 தேதியிட்டு பு.ஜ. குழு சுற்றுக்கு விட்டிருக்கும் கட்சி அறிக்கை)

படிப்பகம்

www.padippkam.com



# தன்னுரிமை : விவாதக் குறிப்பு பற்றிய ஒரு விமர்சனக் குறிப்பு •

1. சுய நிர்ணயம் (self-determination) சுய நிர்ணய உரிமை (right to self-determination) ஆகிய இரண்டும் வெவ்வேறு பொருளுடையவை என்பதால் இவை இரண்டுக்கும் பொதுவாகத் 'தன்னுரிமை' என்ற ஒரே சொல்லைப் பயன்படுத்துவது தவறானது, குழப்பம் விளைவிக்கக் கூடியது. இதில் தோழர் தியாகுவின் கருத்து சரியானது.

2. தன்னுரிமை என்ற சொல்லை சுய நிர்ணயம், சுயநிர்ணய உரிமை என்பது போல விரித்தோ சுருக்கியோ பயன்படுத்த முடியாது என்பதால் இச்சொல்லாக்கமே தவறானது.

3. தன்னுறுதி உரிமை என்றோ, தன்தீர்வுரிமை என்றோ கூறுவதில் 'தன்னுரிமை'யில் உள்ள தவறோ, குழப்பமோ இல்லை. எனினும் தன்னிலைத் தீர்வுரிமை என்பதே சரியான பொருள் தரக்கூடியதாகும். தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் வரைவுத் திட்ட அறிக்கையில் இச்சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

4. தன்னிலைத் தீர்வுரிமை என்பது ஒவ்வொரு தேசிய இனமும் தேசமும் தனித்து தேசிய அரசு அமைத்துக் கொள்வதற்கான உரிமையாகும். தன்னிலைத் தீர்வு என்பது தனித்து தேசிய அரசு அமைத்துக் கொள்வது அல்லது அந்த உரிமையுடன் பிற தேசங்களுடன் இணைந்து ஒரு ஒன்றிய அரசை அமைத்துக் கொள்வது என்பதாகும். ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தைப் பொறுத்தவரை இந்த இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்வதற்கான உரிமையே தன்னிலைத் தீர்வுரிமை. தேசிய சனநாயகம், மக்கள் சனநாயகம், சோசலிசம் என்பதெல்லாம்

• இது செப்டம்பர் 1999 'தமிழ்த்தேசம்' இதழில் வெளிவந்த "தன்னுரிமை: விவாதக் குறிப்பு" மீதான விமர்சனம் ஆகும். இது தமிழ்த்தேசம் அக்டோபர் 1999 இதழில் வெளிவந்தது.



அந்த அரசின் வர்க்க உள்ளடக்கம் பற்றிய செய்திகளே.

5. 'தன்னிலைத் தீர்வு என்பது தன்னளவில் புரட்சியின் குறிப்பான இலக்கு ஆகாது' என்று தோழர் தியாகு குறிப்பிடுவது சரியானது. அதே நேரத்தில் புரட்சியின் குறிப்பான இலக்குகளான தேசிய சனநாயகம், மக்கள் சனநாயகம், சோசலிசம் ஆகியவற்றைத் தன்னிலைத் தீர்வின் குறிப்பான வடிவங்களாக முன்வைப்பது முரண்பாடானது.

6. 'தன்னிலைத் தீர்வுரிமைக்கான போராட்டம் அதனளவிலேயே ஒரு சமூக மாற்றத்திற்கான போராட்டம் ஆகிவிடாது. இந்த உரிமை அதனளவிலேயே ஒரு புரட்சியின் மையக் குறிக்கோள் ஆகிவிடாது. தன்னுரிமைப் புரட்சி என்பதெல்லாம் பொருளற்ற சொல்லாடலே' என்று தோழர் தியாகு கூறுவதும் சரியானதே. தன்னிலைத் தீர்வின் குறிப்பான வடிவம் புரட்சியின் குறிப்பான இலக்குடன் இணைக்கப்படும்போது மட்டுமே தன்னிலைத் தீர்வுரிமைக்கான போராட்டம் புரட்சிகரமானதாக அமையும்.

7. தன்னிலைத் தீர்வுரிமைக்கு தோழர் தியாகு பின்வரும் விளக்கம் அளிக்கிறார்: "தனக்கு வேண்டிய பொருண்மிய, அரசியல், பண்பாட்டு வாழ்வை உறுதி செய்து கொள்ளவும், தேவையானால் பிரிந்து சென்று தனியரசு அமைத்துக் கொள்ளவும் ஒவ்வொரு தேசம் அல்லது தேசிய இனத்துக்கும் உண்டான உரிமையே தன்னிலைத் தீர்வுரிமை." இந்தவிளக்கம் தவறானது. இது பின்வருமாறு திருத்தப்பட வேண்டும். "தனக்கு தேவையான பொருண்மிய, அரசியல், பண்பாட்டு வாழ்வை அமைத்துக் கொள்வதற்காகப் பிரிந்து போகும் உரிமையுடன் ஒரு பல்தேசிய ஒன்றிய அரசை அமைத்துக் கொள்ளவோ, அவசியமானால் பிரிந்து சென்று தனியரசு அமைத்துக் கொள்ளவோ ஒவ்வொரு தேசம் அல்லது தேசிய இனத்திற்கும் உள்ள உரிமையே தன்னிலைத் தீர்வுரிமையாகும்."

8. ஒரு பல்தேசிய அரசு சமூகத்தில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தன்னிலைத் தீர்வு என்பது ஒடுக்கும் தேசிய இனத்தில் உள்ள புரட்சி இயக்கத்தின் பலம் மற்றும் நடத்தையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. ஒடுக்கும் தேசிய இனத்தில் புரட்சி இயக்கம் பலம் வாய்ந்ததாகவும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையை ஏற்றுக் கொள்வதாகவும் இருக்குமாயின் அவற்றின் தன்னிலைத் தீர்வு பல்தேசிய ஒன்றிய அரசு என்பதாக அமையும். ஒடுக்கும் தேசிய இனத்தில் ஒடுக்கப்படும் தேசிய

படிப்பகம்

www.padippkam.com



இனங்களின் பிரிந்து போகும் உரிமையை ஏற்றுக் கொள்கின்ற பலம் வாய்ந்த புரட்சி இயக்கம் இல்லையென்றால் அல்லது ஒடுக்கும் தேசிய இனமே இல்லை என்றால் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தன்னிலைத் தீர்வு என்பது தனி அரசு - தனிநாடு என்பதாகவே அமையும். வேறு வகையில் கூறுவதானால் ஒடுக்கும் தேசிய இனத்தில் உள்ள புரட்சி இயக்கத்தின் பலம் மற்றும் நடத்தையைப் பொறுத்து தேசிய முரண்பாடு அல்லது வர்க்க முரண்பாடு முதன்மை முரண்பாடாகும். வர்க்க முரண்பாடு முதன்மையானால் பிரிந்து போகும் உரிமையுடன் பல்தேசிய ஒன்றிய அரசு என்பதும், தேசிய முரண்பாடு முதன்மையானால் தேசிய விடுதலைப் புரட்சி மூலம் தனியரசு-தனிநாடு என்பதும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தன்னிலைத் தீர்வாக அமையும்.

9. ஜார் கால ருசியா ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களைக் கொண்ட ஒரு பல்தேசிய அரசுசமூகமாக இருந்தது. அங்கு ஒடுக்கும் தேசிய இனத்தில் புரட்சிக்குத் தலைமை தாங்கும் பலம் வாய்ந்த இயக்கமாக லெனின் தலைமையிலான கம்யூனிஸ்டுக் கட்சி இருந்தது. அது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையை ஏற்றுக் கொண்டிருந்தது. இதனால் அங்கு பல்தேசிய சோவியத் சோசலிச ஒன்றியக் குடியரசு என்பதே தீர்வாக அமைந்தது.

10. இதற்கு மாறாக இந்தோ-சீனா, ஒடுக்கும் தேசிய இனம் இல்லாத, ஒடுக்கப்படும் பல்தேசிய அரசு சமூகமாக இருந்தது. வல்லரசியமே அங்கு ஒடுக்குமுறையாளனாக இருந்தது. இதனால் இந்தோ-சீன ஒன்றியக் குடியரசு என்பதாக அல்லாமல் தேசிய விடுதலைப் புரட்சி என்பதே ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தீர்வாக இருந்தது. வியட்நாமில் தனியாகக் கம்யூனிஸ்ட் கட்சி கட்டப்பட்டு அது வியட்நாம் தேசிய விடுதலைப் புரட்சிக்குத் தலைமை ஏற்று வெற்றி பெற்றது.

11. இந்தியாவில் இ.பொ.க.(மா-லெ) அது தோன்றிய போதே சோவியத்தைப் பின்பற்றி பல்தேசிய இந்திய மக்கள் சனநாயக ஒன்றிய அரசுக்கான திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னிலைத் தீர்வுரிமையை முன்வைத்தது. ஆனால் சோவியத்திலிருந்து மாறுபட்ட இந்தியாவின் பருண்மையான நிலைகளின் காரணமாக இ.பொ.க. (மா-லெ)யின் இந்த முடிவு தவறானதாக அமைந்தது.



12. இந்தியா தரகு முதலாளிய-பார்ப்பனிய வல்லரசிய ஒடுக்கு முறையின் கீழான ஒரு பல்தேசிய அரசு சமூகம். இங்கு ஒடுக்கும் தேசிய இனம் இல்லை. சிலர் வாதிடுவது போல் இந்திப்பெருந்தேசிய இனம் உருவாகி விட்டதென்றும் அது ஒடுக்கும் தேசிய இனமாக இருக்கிறதென்றும் வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் அதில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையை ஏற்றுக்கொண்ட, புரட்சிக்குத் தலைமை தாங்குகின்ற பலம் வாய்ந்த இயக்கம் எதுவும் இல்லை. எனவே இங்கு வர்க்க முரண்பாடு அல்ல; தேசிய முரண்பாடே முதன்மை முரண்பாடாயிருக்கிறது. இதனால் தமிழ்நாடு உள்ளிட்ட ஒடுக்கப்படும் தேசங்களின் - தேசிய இனங்களின் தன்னிலைத் தீர்வு என்பது பிரிந்துபோகும் உரிமையுள்ள பல்தேசிய இந்திய ஒன்றிய அரசை அமைப்பது என்பதாக அல்லாமல், தேசிய விடுதலைப் புரட்சி மூலம் தனியரசு அமைத்து தனிநாடாக அமைவது என்பதாக மட்டுமே இருக்க முடியும்.

13. ஆனால் த.தே.பொ.க., த.த.இ. போன்ற 'தன்னுரிமை' அமைப்புகள் பிரிந்து போகும் உரிமையுள்ள ஒன்றிய அரசை அமைப்பதா அல்லது தேசிய விடுதலைப் புரட்சி மூலம் தனியரசு அமைத்து தனிநாடாவதா என்பது பற்றி எவ்விதத் தீர்மானமான முடிவும் இல்லாதவையாக இருக்கின்றன. தொடக்கத்தில் இவ்வமைப்பு கள் 'தன்னுரிமை'க்குப் பிரிந்து போகும் உரிமையுள்ள ஒன்றியக் குடியரசு என்று விளக்கமளித்து வந்தன. அண்மைக் காலங்களில் ஒன்றியக் குடியரசு அல்லது தனியரசு அமைப்பது என்று விளக்க மளித்து வருவதுடன் ஒன்றியக் குடியரசு என்பது குறைந்தபட்சக் கோரிக்கை, தனியரசு என்பது அதிகபட்சக் கோரிக்கை என்றும் குறைந்தபட்சக் கோரிக்கை மறுக்கப்பட்டால் அதிகபட்சக் கோரிக்கைக் காகப் போராடுவது என்றும் கோட்பாடற்ற வகையில் பலவாறாக விளக்கமளித்து வருகின்றன.

14. பிரிந்து போகும் உரிமையுடன் ஒன்றியக் குடியரசு என்பது கோரிக்கையானால் - முதன்மை முரண்பாடு தேசிய முரண்பாடு அல்ல; வர்க்க முரண்பாடே என்பதை நிறுவவேண்டும்; அது ஒரு பல்தேசியக் கோரிக்கை என்பதால் ஒரு அனைத்திந்தியக் கட்சியைக் கட்டவேண்டும். ஆனால் தேசிய முரண்பாடே முதன்மை முரண்பாடு, தமிழக அளவிலேயே கட்சி என்பதே அவர்களுடைய நிலைப்பாடு என்பதால் அவர்கள் தேசிய விடுதலைப் புரட்சி மூலம் தனிநாடு-தனியரசு என்பதையே முன்வைக்க வேண்டும். ஆனால் தன்னிலைத் தீர்வுரிமை என்கிற பொதுக் கோரிக்கையை மட்டுமே முன்வைத்து

படிப்பகம்

www.padippkam.com



அதற்குப் பல்வேறு வகைப்பட்ட சந்தர்ப்பவாத விளக்கங்களை அளித்து வருகிறார்கள்.

15. இவர்கள் சந்தர்ப்பவாதத்தையே புரட்சியின் செயலுத்தி (tactics) எனபது போலக் காட்ட முயலுகிறார்கள். ஆனால் சந்தர்ப்பவாதம் ஒரு போதும் புரட்சியின் செயலுத்தி ஆக முடியாது.

படிப்பகம்